
கல்கி

KALKI
16.8.87
ரூ. 1.50



வரலாறு படைப்பாரா வி.பி.சிங்?



டீ உலகில் உயர் வட்டம்

சக்கரா டீ



உயர் வகுப்பினர் பாராட்டும்
தேநீர்ச் செல்வம் சக்கரா டீ.
சொகுசான சுவைமண, திட
குணங்களின் முழுமை
வட்டம். தேநீரிலே
சுக போகத்தின் உயர்
வட்டம்: சக்கரா டீ.

உயர் வட்ட ரசிகர்களுக்கு
உயர் வளமுள்ள தேயிலை

சக்கரா டீ

டாட்டா டீ லிமிடெட்
உலகிலேயே மிகப்பெரிய டீ கம்பெனி.

daCunha/TT/246/87/TM



ராஜம்



* பாப்பா

* பகம்பொன்



சின்னமுட்டம் கடற்கரையில் பெரிய மர்மம்!



அமைதியான கடல்; கரையை நெருங்கித் தழுவிப் பிரியும் மெல்லலைகள்; முடிவில்லா இந்தக் காதல் விளையாட்டைத் தென்னை மரங்களின் நிழலில் அமைந்த சின்னஞ்சிறு குடில் போன்ற தோற்றமுடைய கோயிலில் இருந்தபடி பார்த்து ரசித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீமந் நாராயண சுவாமி.

திடீரென்று இந்தச் சூழல் மாறுகிறது. கருமேகங்கள் சூழ்கின்றன.

* கோவிலின் அருகே வெராமத்தேவர்

* கோவிலின் பழைய தோற்றம்.



கண்ணைப் பறிக்கும் மின்னல்கள் பளீரிடுகின்றன. சூறாவளி வீசுகிறது. காது செவிடுபட இடி இடிக்கிறது. தாரையாக மழை கொட்டுகிறது.

இது இயற்கை உருவாக்கும் புயல் அல்ல. மனிதர்களின் வேலை! இந்தச் சுழிக்காற்றில் மூன்று குடும்பங்கள் சிக்கிப் பயங்கரமான விதத்தில் பாதிக்கப்படுகின்றன. எப்படி என்று பார்ப்போம்.

கன்னியாகுமரியிலிருந்து சுமார் ஆறு கி. மீ. தெற்கே, கடற்கரையோரத்தில், சின்னமுட்டம் அருகே முட்டபதி ஸ்ரீமந் நாராயணசுவாமி கோயில் அமைந்துள்ளது. கடலிலிருந்து சுமார் அறுபது அடி தூரத்தில், கரையில் அமைந்துள்ள இக்கோவில் மிகச் சிறிய கோவில் மட்டுமின்றி, மிகப் பழமையானதும் கூட.

கன்னியாகுமரியைச் சேர்ந்த பா. சிவராமத்தேவர் இந்த நாராயணசுவாமி கோவிலுக்குப் பரம்பரை தர்மகர்த்தாவாக இருந்து வந்தார். மிகச் சிரமப்பட்டு, பலரிடமிருந்து நன்கொடைகள் வசூலித்து, கோவிலைப் புதுப்பித்தார். 1984 ஆம் ஆண்டு, புதுப்பிக்கப்பட்ட இக்கோவிலில் பத்து நாட்கள் திருவிழா கொண்டாடப்பட்டது. அதுபோல், 1985 ஆம் ஆண்டு மே மாதம் பத்தாம் தேதி வெள்ளிக்கிழமை காலையில் கொடியேற்றப்பட்டு மே இருபதாம் தேதி முடியப் பதினொரு நாட்கள் திருவிழாவை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நோட்டீஸும் அச்சடித்து விநியோகிக்கப்பட்டது!

இந்தத் தருணத்தில்தான் அமைதிச் சூழல் சூறாவளியாக மாறியது.

மே மாதம் பத்தாம் தேதி காலை கொடியேற்றுவதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக, ஒன்பதாம் தேதி இரவில், கோவில் தர்மகர்த்தா பா. சிவராமத்தேவரும், கன்னியாகுமரியைச் சேர்ந்த, பரமசிவன் என்பவரும் சென்றிருக்கிறார்கள். கருங்கல் என்ற சிற்றூரிலிருந்து, ரெத்தினசுவாமி என்பவரும் அதே இரவில் அக்கோவிலுக்கு வந்திருக்கிறார்.

மறுநாள் காலையில் —

சிவராமத்தேவரின் மனைவியும் மகனும் மற்றும் கொடியேற்றம் காண வந்த ஊர் மக்களும் கோவில் தர்மகர்த்தாவையும் அவருடன் வந்த மற்ற இருவரையும் காணாமல் தவித்தனர்! உடனடியாகக் கன்னியாகுமரி காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. ஆனால், ஆண்டுகள் இரண்டு கடந்துவிட்ட போதிலும், காணாமல் போன அம்மூவரைப் பற்றி இதுவரை எந்தத் தகவலுமில்லை!

அன்று இரவு அங்கே என்ன நடந்தது? யாருக்கும் தெரியாது!

காவல் துறையினரும் கண்டுபிடிக்க முடியாததாயிருப்பதாகக் கூறி கேஸ் ஃபைலை மூடிவிட்டார்கள். அரசு நிவாரணம் இம்மூன்று குடும்பங்களுக்கும் இதுவரை கிடைக்கவில்லை! பாதிக்கப்பட்ட இக்குடும்பங்கள் மேலும் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன!

குடும்பத் தலைவர்களை இழந்து தவிக்கும் குடும்பங்களை நேரில் கண்டு விசாரிக்க முடிவு செய்து, கோவில் தர்மகர்த்தா, பா. சிவராமத்தேவரின் மனைவி ராஜத்தை அணுகினோம். துக்கம் தொண்டையை அடைக்க, ராஜம் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். விழியோரம் பூத்த கண்ணீர்ப் பூக்களை, முந்தானையால் ஒற்றியெடுத்தார். மெல்லப் பேசத் தொடங்கினார்:

"அவரு குடும்பத்தைக் கவனிச்ச நேரத்தை விட, கோவிலைக் கவனிச்ச நேரம் தான் ரொம்ப அதிகம். எங்களுக்கு ரெண்டு மகன்கள். மூத்தவனை எங்க வீட்டுக்காரரு வெறும் எட்டாம் வகுப்பு வரைதான் படிக்க வெச்சாரு. அப்புறம் தன்னால முடியாதுன்னு சொல்லிட்டாரு. ஆனா அவன், உதவிப் பணம் மூலமாகவும், படிக்கும் போதே இடையே வேலை செஞ்சு சிறிது பணம் சம்பா திச்சும் பழைய பொஸ்தவங்களை வாங்கி, எப்படியோ படிச்சு எம். ஏ. ஜெயிச்சுட்டான். ஆனா... அதைப் பார்க்கிறதுக்குத்தான் அவருக்குக் கொடுத்து வைக்கல்ல!

"பத்தாம் தேதி காலையிலே நேரமே எழுந்து... கடற்கரை வழியாக நடந்து நானும் பகம்பொன்னும் (மூத்த மகன்) போனோம். கோயிலை நெருங்கினப்போ, பொழுது விடிய ஆரம்பிச்சிடுச்சு. கோயில்ல யாரையுமே

காணல்லே. ரேடியோ செட்டுக்காரப் பையன் ஒருத்தன் தூங்கிக்கிட்டிருந்தான். அவனை எழுப்பிக் கேட்டப்போ, தான் ராத்திரி மூணு மணிக்கு வந்தப்போ, யாரையுமே காணல்லேன்னு சொன்னான்...!

''நானும் பசும்பொன்னும் பதற்றத்தோடு அப்பகுதியில் சுற்றிப் பார்த்தோம். ஒருவரையும் காணவில்லை! கோவிலின் கதவு பூட்டாமல் சாத்தியிருந்தது. பல்புகளைக் கழற்றி ஒரு மூலையில் வைத்திருந்தது. கோவிலிலிருந்து சற்றுத் தூரத்தில் என் கணவரின் வேஷ்டியும் தலையில் கட்டும் துண்டும் சிதறிக் கிடந்தன. ஓரிடத்தில் ஒரு ஜோடி செருப்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடந்தன. மணல் பரப்பில் யாரையோ இழுத்துக்கிட்டுப் போன மாதிரி தடயங்களும் காணப்பட்டன. வெள்ளை அடிக்கும் பிரஷ் மணலில் புதைந்து கிடந்தது. வெள்ளை கலக்கும் பானை சரிந்து கிடந்தது. ஆனா... அந்த ராத்திரியில் என்ன நடந்திருக்கும்? கோவிலுக்கு வந்தவர்கள் என்ன ஆனார்கள் என்பது எங்களுக்குத் தெரியல்லே...! பசும்பொன் உடனே போலீஸில் புகார் செய்தான். அவங்களும் எங்களால கண்டுபிடிக்க முடியல்லேன்னு கையை விரிச்சுட்டாங்க! சதா கோவிலு... கோவிலுன்னு வாழ்ந்து வந்த என் கணவருக்கா... கடவுள் இந்த நிலைமையைக் கொடுக்கணும்? எல்லாம் எங்க தலைவிதி! நிவாரணத்திற்கு எழுதிப் போட்டும் கிடைக்கல்லே! நாங்க இருக்கிற இந்த ஓலைக் குடிசை கூட எங்களுக்குச் சொந்தமில்லே! பொறம்போக்கில் குடியிருக்கிறோம்! ஒவ்வொரு நாளையும் கடத்துவதற்கு மிகவும் கஷ்டப்படுகிறோம். அவர் பயன்படுத்திய தையல் மிஷின் கூட ரிப்பேராப் போச்சு. அதைச் சரி செய்தாலாவது துணிகளைத் தைத்துக் கொடுத்துப் பொழைக்கலாம்னு... அதுக்கும் வழியில்லே! எங்களைப் போல உள்ள ஏழைங்களுக்கு உதவ இந்த அரசும் முன் வரல்லே...!'' என்று சொல்லிவிட்டு வேதனை மிகுதியால் அழுதே விட்டார், அப்பெண்மணி.

அடுத்து, சிவராமத்தேவருடன் அன்று இரவில் உடன் சென்ற பரமசிவத்தைப் பற்றி அறிந்துகொள்ள அவர் மனைவி பாப்பாவைச் சந்திக்கச் சென்றோம். தமது குடிசைக்குள்ளிருந்து வெளிப்பட்ட அவர், ''நாங்க யாருக்கு என்ன தீங்கு செஞ்சோம்? இப்படி அனாதையாத் தவிக்க வேண்டியதாயிற்றே! கலியாண வயசில ஒரு பொம்புளைப் புள்ளையை வீட்டில வெச்சிட்டு... ஒவ்வொரு நாளும் கண்ணீரில் குளிக்கிறேன்! பக்கத்திலுள்ள ஹோட்டல்களுக்குத் தண்ணீர் பிடிச்சுக் கொடுத்தும், பலகாரங்களுக்கு மாவு ஆட்டிக் கொடுத்தும் காலத்தைக் கடத்துறேன். இறந்தவங்க குடும்பத்துக்குக் கிடைக்கும் உதவிப் பணம் கூட எங்களுக்கு இல்லேன்னு சர்க்காரிலே சொல்லிட்டாங்க. எங்க துரதிர்ஷ்டத்தைப் பார்த்தீங்களா?'' என்றார்.


மூன்றாவதாக, அதே இரவில் காணாமல் போன ரெத்தினசுவாமி பற்றி விசாரிக்க அவருடைய வீட்டிற்குச் சென்றோம். அவருடைய தாய், தங்கம்மை, தம் மகனைப் பற்றித் துயரத்தோடு பேசினார்:

''என் கணவர் இறந்த பின்னாடி... இந்தக் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தது, என் மூத்த மகன் ரெத்தினம்தான். எனக்கு இன்னும் ரெண்டு வயசுக்கு வந்த பொம்பளைப் புள்ளைங்க வீட்டோடு இருக்குதுங்க. இந்தக் குமருகளைக் கரையேற்ற, என் மகன் ரெத்தினத்தைத்தான் நான் மலையாட்டம் நம்பியிருந்தேன். இப்ப அவன் எல்லாரையும் தவிக்க விட்டுட்டுப் போயிட்டாங்க! எனக்குக் கடைசியாப் பொறந்தவன் நரம்புக் கோளாறினால் பாதிக்கப்பட்டு... வீட்டோடு இருக்கிறான். இந்த நிலைமையில் தனது மூணு பிள்ளைங்களையும் வெச்சுட்டு மருமகள் (ரெத்தினத்தின் மனைவி) என்னங்க செய்ய முடியும்? அதனாலே... ரெண்டு பிள்ளைங்கள அனாதை விடுதியிலே சேர்த்துட்டா. அவளும் மாசம் நூறு ரூபாய் சம்பளத்திற்கு ஒரு விடுதியில் ஆயா வேலை பார்க்கிறா!


''போலீஸ்காரங்களும் பத்திரிகைக் காரங்களும் இங்க இருந்த என் மகன் போட்டோவைக் கேட்டு வாங்கிட்டுப் போனாங்க. இப்ப அவன் போட்டோ கூட கைவசமில்லை! அவன் முகம் என் மனசுக்குள்ளேயே இருக்கு. தினசரி தூக்கம் வராம, அவனையும் இந்தக் குடும்பத்தையும் நினைச்சு நினைச்சு அழுகிறேன்.''

இந்தச் சம்பவம் தொடர்பாக, காணாமல் போன, கோயில் தர்மகர்த்தா, பா. சிவராமத்தேவரின் மகன் சி. பசும்பொன் நம்மிடம் தெரிவித்த மேலும் சில தகவல்கள்:

''அன்று காலை நான் கடற்கரைக்கு அம்மாவுடன் சென்றபோது அங்கு ஒரு வேன் வந்து சென்றதற்கான தடம் மணலில் தெரிந்தது. கஸ்டம்ஸ் அதிகாரிகள் அங்கு அதிகாலையில் வந்திருக்கின்றனர். அங்கு கடத்தல் நடப்பதாகக் கஸ்டம்ஸ் அதிகாரிகளுக்கு ஒருவர் தகவல் கொடுத்ததாகவும், அதனால் அவர்கள் வந்ததாகவும், அப்போது கன்னியாகுமரி



* 84 ஆம் ஆண்டு சித்திரைத் திருவிழாவில் அன்னதானம்.



''நாங்க எல்லாரும் கட்சித் தொண்டர்கள்! தலைவரைப் பார்க்க வெளியூரிலிருந்து வந்திருக்கோம்...!''

''இப்படிச் சும்மா தேமேன்னு வந்து நின்னு தொண்டர்கன்னு தலைவர் நம்ப மாட்டார்! ஆளுக்கொரு சோடா பாட்டில், சைக்கிள் செயினெல்லாம் கையிலே வெச்சுக்கோங்க!''

— சுரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

காவல் நிலையத்தில் பணியாற்றிய உதவி ஆய்வாளர் வேணுகோபாலகிருஷ்ணன் என்னிடம் கூறினர். கடத்தல் நடப்பதாக அதிகாரிகளுக்குத் தகவல் தரப்பட்டதானது உண்மையில் நடப்பதை மறைத்து, அதிகாரிகளின் கவனத்தைத் திசை திருப்பி விடவே என்று நான் கருதுகிறேன். ஏனெனில் அந்தப் பகுதியில் கள்ளக் கடத்தல் நடந்ததாகச் சரித்திரமே இல்லை. கடத்தல் நடப்பதாக அதிகாரிகளுக்குத் தகவல் தந்த நபரைத் தீர விசாரித்தால் அதன் பின்னணியில் பல உண்மைகள் வெளிவரும் என்று நம்புகிறேன்.

''முந்திய இரவில் விபரீதம் ஏதோ நடந்திருக்கிறது என்பதை அறிந்து... நான் உடனே கன்னியாகுமரி காவல் நிலையத்தில் புகார் செய்தேன். எனது புகார், 120/85 என்ற குற்ற எண் வழக்கில் பதிவு செய்யப்பட்டது. அப்போதிருந்த சப்—இன்ஸ்பெக்டர் வேணுகோபாலகிருஷ்ணனும், இரண்டு போலீஸ்காரர்களும் விரைந்து வந்து, சம்பவம் நடந்த இடத்தைப் பார்த்தார்கள்.

''மேலும் உடனடியாக முதல்வர் உட்பட முப்பதிற்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தந்தி மூலமும் தபால் மூலமும் விவரம் தெரிவித்தேன். குமரி மாவட்ட ஆட்சியாளர், காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆகியோர்களையும் பல முறை சந்தித்தேன். ஆனல், இந்த வழக்கை, காவல்துறையினர் சுமார் இரண்டு ஆண்டு காலம் கையில் வைத்துக் கொண்டு, கடைசியில், கண்டுபிடிக்க முடியாததாயிருப்பதாக நோட்டீஸ் அனுப்பி விட்டனர். அந்த நோட்டீஸுக்கு நாம் ஆட்சேபனை தெரிவிக்க ஒரு வார காலம் அவகாசம் உண்டு. ஆனல், சப் — இன்ஸ்பெக்டர் தவமணி என்பவர், 2.2.87 அன்று கையெழுத்து இடப்பட்ட நோட்டீஸை எனக்கு 24.2.87 அன்றுதான் தந்தார்.

''இருந்தபோதிலும், நான் நாகர்கோவில் சென்று, வழக்கறிஞர் ஒருவரைப் பார்த்து, அவர் மூலம் மறுபுலனாய்வுக்கு மாஜிஸ்திரேட்டிடம் மனுக் கொடுத்தேன். இரண்டு மூன்று தடவை வாய்தாப் போட்டார்கள். ஒரே அலைச்சல். நான் தளரவில்லை! 1987, ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் தேதி நான் மறுபுலனாய்வுக்குக் கொடுத்த மனு, பரிசீலனை செய்யப்பட்டு, மறுபுலனாய்வுக்கு மார்ச் 11 ஆம் தேதி உத்தரவிடப்பட்டது. மார்ச் 12 ஆம் தேதி எஸ். பி. ஆபீஸுக்கு உத்தரவு போனது. அப்புறம் நான்கு மாதங்களாக ஒரு பதிலுமில்லை! இரண்டாவது தடவையும் எல்லா அதிகாரிகளுக்கும் மனு போட்டிருக்கிறேன்.

''தற்போது கோவிலை நான்தான் கவனித்து வருகிறேன். வெள்ளிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் அங்கு சென்று கோயில் நடையைத் திறக்கிறேன். அப்பாவுக்கு ஏற்பட்ட கதி மாதிரி எனக்கும் ஏதாவது ஆகிவிடுமோ என்று எங்கம்மா பயப்படுறாங்க.''

இவ்வாறு தமது வேதனையை வெளிப்படுத்தினர் அந்த (வேலையில்லாத) எம். ஏ. பட்டதாரி இளைஞர் பசும் பொன்.

கன்னியாகுமரி காவல் நிலையத்தில், இச்சம்பவத்திற்குப் பிறகு மூன்று சப் — இன்ஸ்பெக்டர்கள் மாறிவிட்டதால், இதுபற்றி நாம் விசாரித்தபோது பொறுப்பான பதில் கிடைக்கவில்லை!

காணமல் போன மூவரும் சுயநினைவோடு இருந்திருப்பதால்.... அவர்கள் தாங்களாகவே காணமல் போவதற்கு வாய்ப்பில்லை! அதுவும் மூன்று பேர் சேர்ந்து ஒரே சமயத்தில் எப்படிக் காணமல் போவார்கள்? யாரோ சிலர் அவர்களை வலுக்கட்டாயமாக, பலவந்தமாக அங்கிருந்து அப்புறப்படுத்தியிருக்க வேண்டும். துணிமணிகள் அங்கே கிடந்திருப்பதால் ஆடையின்றி அவர்களில் ஒருவர் எங்கும் தாமாகப் போயிருக்க முடியாது. இதுவரை அவர்களைப் பற்றிய தகவல்கள் ஏதுமில்லாததால்... அவர்கள் இறந்து போயிருக்கலாம்; அல்லது கொல்லப்பட்டிருக்கலாம் என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது.

கோவில் இருக்கும் பகுதியில், இந்துக்கள் வீடு ஒன்று கூட இல்லை! அப்பகுதியில் அக்கோயில் இருப்பதை விரும்பாத விஷமிகளின் வேண்டாத செயலாகவும் இருக்கலாம். அல்லது திட்டமிட்டிருந்தபடி பத்து நாள் திருவிழா நடக்க முடியாதவாறு தடுக்க எதிரிகள் யாராவது அவர்களைக் கொன்று கடலில் போட்டிருக்கலாம்.


குடும்பத் தலைவர்களை இழந்த அம்மூன்று குடும்பங்களும் தவிக்கின்றன! காணமல் போன நபர்கள் இறந்து விட்டார்கள் எனக் கருதுவதற்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லாததாலும், காவல் துறை தரப்பில் இறந்து விட்டார்கள் என ருசுப்படுத்தாததாலும், இறந்து போன நபர்களின் குடும்பத்தினருக்கு அளிக்கப்படும் நிதியுதவியை இந்த மூன்று குடும்பங்களுக்கும் அளிக்க இயலாது என்று அரசும் கைவிட்டு விட்டது.

இது என்ன நீதியோ? சின்னமுட்டம் கடற்கரையில் தவமிருக்கும் ஸ்ரீமந் நாராயண சுவாமிக்குக் கூடப் புரியாதே இந்த நீதி!

கட்டுரை, புகைப்படங்கள்:

நமது நிருபர்

கி.பி.



ஆண்டில் எங்கள் சேமிப்புத் திட்டங்கள் உங்களுக்கு எப்படியெல்லாம் கைகொடுக்கப் போகின்றன...

அந்த நாளும் வெகு தொலைவில் இல்லை!

காலம்தான் எத்தனை வேகமாக ஓடுகிறது...
நீங்கள் தோளிலும் கரத்திலும் தூக்கி வளர்த்த குழந்தை. இன்று பள்ளி செல்கிறாள். கால ஓட்டத்தில் கண்கவரும் கன்னியாக அவள் உங்கள்முன் நிற்பாள். 'அட! ஓய்வு பெறும் நாளும் நெருங்கி விட்டதே!' என்று நீங்கள் நினைக்கக் கூடும்...... இந்த எதிர்காலக் காட்சி உங்களைப் பயமுறுத்துகிறதா? கவலை வேண்டாம். இப்போதே புத்திசாலித்தனமாகத் திட்டமிடுவதன் மூலம் வருங்காலத்தை மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ளலாம். கத்தோலிக் சிரியன் பேங்க் வகுத்துள்ள சேமிப்புத் திட்டங்கள் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். அவை உங்கள் நலனுக்காகவே உருவாக்கப்பட்டுள்ளன.
'ஜூபிலி வெல்ஃபேர் டெபாசிட்' திட்டத்தைக் கவனியுங்கள். நீங்கள் சொந்தமாக வீடு அல்லது கார் வாங்குவதற்கோ அல்லது மற்ற பெரிய செலவுகளுக்கோ இது பெரிதும் உதவும்.
முதலீடு செய்யக்கூடிய அளவில் சிறுதொகை ஏதேனும் கைவசம் உள்ளதா? அதற்கு டயமண்ட் ஜூபிலி சர்ட்டிபிகேட் ஒன்று வாங்குங்கள். உங்களது சிறுதொகை நாளடைவில் பெருந்தொகையாக உருவெடுக்கும்.

ஓய்வு பெற்ற பிறகு தொடர்ந்து கூடுதல் வருமானம் பெற வேண்டுமானால் 'ஸ்வரக்ஷா' திட்டத்தைத் தேர்ந்தெடுங்கள்.

எதிர்காலம் பற்றிக் கவலைப்படாமல் செலவாளிகளாக வாழ்க்கை நடத்துவார்கள் சிலர்.. ஆனால் அவர்கள் வருந்தப்போவது உறுதி. எனவே, விவேகத்துடன் செயல்படுங்கள். கத்தோலிக் சிரியன் பேங்கிற்கு வருகை தாருங்கள். இதற்காக எதிர்காலத்தில் நிச்சயம் மகிழ்ச்சியடைவீர்கள்.

கத்தோலிக் சிரியன் பேங்க்
தி கத்தோலிக் சிரியன் பேங்க் லிமிடெட்
தலைமை அலுவலகம் : செயின்ட் மேரீஸ் காலேஜ் ரோடு
திருச்சூர் 680 020.

OBM 9826 TM

ஜனாதிபதி, மரபுகளை மீறியது சரியா?



* மரபு மீறலாமா?

* எஸ். சிவசுப்பிரமணியம், நெல்லிக்குப்பம்.

? இலங்கையில் ராஜீவ் காந்தி தாக்குதலிலிருந்து தப்பித் தாயகம் திரும்பிய போது, மரபுகளைக் காக்க வேண்டிய ஜனாதிபதி,மரபுகளை மீறி அவரை விமான நிலையத்தில் சந்திக்கச் சென்றது சரியா?

! மரபுகளை மீற வேண்டிய சமயத்தில் மீறுவதிலும் ஒரு மரபு உண்டு! மீற வேண்டிய நேரத்தில் மீறாமலிருப்பது தவறு.

* எஸ். வெங்கடாசலம், நாட்டரசன் கோட்டை.

? பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தியதால் மார்க்கரெட் தாட்சர் மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், எம். ஜி. ஆர்?

! வெற்றி விழாவின் போது பிரதமர் அடுக்கினாரே, எம். ஜி. ஆருடைய ராஜதந்திரம், ஆழ்ந்த மனிதாபிமானம், யதார்த்தமான அறிவாற்றல், பிரச்னையைப் புரிந்து கொள்ளும் திறமை, தன்னலமின்மை, தேசபக்தி... என்று. அவையெல்லாம்தான் காரணமோ என்னவோ!

* கே. என். ஸ்ரீனிவாஸ், சென்னை — 80.

? 'கடற்படை வீரர் மயங்கி விழுந்த போதுதான் துப்பாக்கி ராஜீவ் மீது பட்டது' என ஜெயவர்த்தன கூறியது பற்றி...?

! அட, தெரிந்தோ, தெரியாமலோ உளறி விட்டார்; விட்டுத் தள்ளுங்கள், ஸார்! அவர்தான் பிரதமரிடமும் பாரத நாட்டினிடமும், உங்களிடமும் என்னிடமும் கூட நடந்த சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விட்டாரே!

* பாலா அசோக், திருச்சி.

? மெரினா கடற்கரைப் பொதுக்கூட்டத்தில் எம். ஜி. ஆருக்கு ராஜீவ் மைக் அட்ஜஸ்ட் செய்தது பற்றி?

! தமிழக மக்களைக் கவர்வது என்று தீர்மானித்தாகி விட்டது! அதற்காக ஜிப்பா அங்கவஸ்திரம் போட்டாகி விட்டது! தமிழக மக்களின் பொறுமையைப் போற்றியாகி விட்டது! முதல்வரை வானளாவப் புகழ்ந்தாகி விட்டது! இந்தச் சின்னக் காரியத்தையும் செய்து கரிசனத்தைக் காட்டிக் கொள்வதில் பிரதமருக்கு என்ன குறைந்து போய் விடப் போகிறது!

* வண்ணை கணேசன், சென்னை — 11.

? இ. காங்கிரஸில் மீண்டும் களையெடுப்பு உண்டா?

! ஊஹும், கிடையாது! அவர்கள் களையெடுப்பதில்லை. பயிரைத்தான் பிடுங்கி எறிகிறார்கள்! களைகள் காங்கிரஸில் செழிக்கின்றன.

* என். ரவி, திருவெறும்பூர்.

? பேராபத்தைச் சந்தித்த பிறகும் ஒன்றும் நடவாதது போல் அமைதியாக அலட்டிக் கொள்ளாமல் இருந்த நமது பிரதமர் பற்றி?

! மலை குலைந்தாலும் நிலைகுலையாத மனம்.

* கே. கணேஷ், சென்னை — 6.

? 'இந்தியா — இலங்கை உடன்பாட்டை இலங்கை நாடாளுமன்றம் ஏற்க மறுத்தால் அதனைக் கலைத்து விட்டு உடன்பாட்டை அமுல்படுத்துவேன்' என்று கூறும் ஜெயவர்த்தனவின் துணிச்சல் பற்றி?

! இலங்கையில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மிக அதிகமானவை. நம் நாட்டுக்கும் இலங்கைக்கும் இவ்விஷயத்தில் நிரம்ப வேற்றுமை உண்டு. எனவேதான் அவர் நாடாளுமன்றத்துக்கு இந்த உடன்பாடு 'பிடிக்கவில்லை என்று நிராகரிக்குமானால்



* துணிச்சலோ துணிச்சல்!



* காமராஜ் இன்றிருந்தால்......

அதனைக் கலைத்து விடுகிறேன்; மீண்டும் அவர்கள் மக்களைச் சந்திக்கட்டும்' என்கிறார். ஜனாதிபதி ஆறு ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவியில் அமர்கிறார். இப்படி அவருடைய துணிச்சலுக்கு அந்நாட்டின் அரசியல் அமைப்பு துணை நிற்கிறது. இது ஒருபுறமிருந்தாலும் நாடாளுமன்றத்தை எதிர்த்துக் கொண்டேனும் உடன்பாட்டை நிறைவேற்றுவேன் என்று கூறும் அவரது தைரியத்தைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. உடன்பாடு முழு வெற்றி பெற வேண்டுமானால் இந்தத் துணிவு மட்டுமல்ல, சொன்ன சொல்லைக் காப்பாற்றும் நேர்மையும் அவருக்கு அவசியம் இருந்தாக வேண்டும்.

* நா. இரகுநாதன், சின்னஞ்குப்பம்.

? 'காமராஜர் இப்போது இருந்திருந்தால் எம். ஜி. ஆர். ஆட்சியைப் பாராட்டி இருப்பார்' என்று கலோசனசம்பத்கூறி இருப்பது பற்றி?

! நிச்சயமாகக் காமராஜர் திரும்பி வரப் போவதில்லை என்ற தைரியத்தில்தான்.

* டி. வி. பாலசுப்பிரமணியம், நாகர் கோயில்.

? தமிழ் ஈழத்துக்கு ஆதரவு தராத கல்கியில் 'நிற்க நிழல் வேண்டும்' தொடர் வெளியாவது எதைக் காட்டுகிறது?

! தமிழ் ஈழத்துக்கு ஆதரவு தராததால், தமிழர்கள் மீது குண்டுமழை பொழிவதற்கும், அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிப்பதற்கும், அகதிகளாக அடித்து விரட்டுவதற்கும் ஆதரவு அளித்ததாக ஆகிவிடாது. அன்பரே! தலைப்பு. நிழல்தான் கேட்கிறது; நாடு கேட்கவில்லை.

* ராஜகோபால், சென்னை — 82.

? இயற்கையாகப் பெய்த மழையைச் செயற்கை மழை என்று கூறிய அரசை என்ன செய்யலாம்?

! நாமொன்றும்செய்ய வேண்டாம்; செய்ய வேண்டியதை இயற்கையே செய்து விடும்! 'மழை விதை ஊன்றப்பட்ட மேகங்களைப் பலத்த காற்று வீசிக் கலைத்து விட்டது' என்று



* பாராட்டுக் குவியல்!



* மகிழ் குலுங்கத்தானும்...

சம்பந்தப்பட்டவர்கள் மறுநாளே புலம்பி இருப்பதைப் படித்திருப்பீர்களே!

* பி. தனபால், காரைக்கால்.

? பெண்ணை வர்ணிப்பதில் அதிகம் பொய் சொல்பவன் கவிஞனா, காதலனா?

! கவிஞன் உதவியுடன் காதலன்.


* எஸ். ராமானுஜன், திருநெல்வேலி.

? ஜனாதிபதி தேர்தலில் அமெரிக்கா மாதிரி பொது மக்கள் இங்கே வோட்டளிக்க முடியாது. ஆதலால் எந்த வேட்பாளருமே டீ. வி. பிரசாரம் செய்வது அர்த்தமற்றது என்கிறேன்!

! மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள்தான் ஜனாதிபதி தேர்தலில் வோட்டளிக்கிறார்கள். எனவே தங்கள் பிரதிநிதிகள் தங்கள் மனத்துக்குகந்த விதமாகச் செயல்படுகிறார்களா என்று கவனிக்க மக்களுக்கு உரிமை உண்டு. இதற்கு, ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடுகிறவர்கள் அப்பதவி பற்றி என்ன நினைக்கிறார்கள், எப்படி நடந்து கொள்வார்கள் என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. சமீபத்திய தேர்தலின் போது ஜனாதிபதியின் அதிகாரங்கள் பற்றி நிறையவே சர்ச்சை நடந்திருக்கிறது. இரு தரப்பு வாதங்களையும் கேட்டால்தான் எந்தக் கட்சியில் நியாயம் இருக்கிறது என்பதை மக்கள் நிர்ணயித்துக் கொள்ள முடியும். இதற்கு நாளிதழ்களும் இதர சஞ்சிகைகளும் உதவியது போல் பொது ஜனத் தொடர்புச் சாதனங்களான ரேடியோவும், டீ. வி. யும் உதவியிருந்தால் சிறப்பாகவே இருந்திருக்கும்.

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

கே. கணேஷ், 'ஜெட்கோ'
டைப்பிஸ்டு,
5, கிரீம்ஸ் சாலை,
சென்னை — 600 006.



ஊழலை ஒழிப்போம்!
எதிர்க் கட்சிகள்
வி.பி.சிங்
ஆயுதங்களை ஒப்படைக்கும் முன்..
பிரபாகரன்
ஒப்படைத்த பின்..!
நெடுமாறனும் வீரமணியும் எம்.ஜி.ஆரைச் சந்தித்தனர்.
என் காதுலே ஒருத்தரும் பூ சுத்த முடியாது!



கல்கி

1987 ஆகஸ்ட் 16
மலர் 46 இதழ் 3
பிரபவ ஆடி 31



பிரபாகரனின் பெருந்தன்மை

இந்தியா — இலங்கை ஒப்பந்தம் வெற்றி பெற்று, அந்நாட்டில் பூரண அமைதி திரும்புமானால் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டியது அந்த ஒப்பந்தம் அல்ல; பிரபாகரனின் பெருந்தன்மையே!

நாம் தமிழ்ஈழக் கோரிக்கைக்கு ஆதரவு அளிக்கவில்லை; அதனை அடைய விடுதலைப் புலிகள் கையாளும் முறைகளும் நமக்கு உடன்பாடானவை அல்ல. ஆயினும் இதற்காக விடுதலைப்புலிகளின் வீரத்தை நாம் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அதனைப் போற்றுகிறோம். அந்த வீரத்தை விட அதிகமாக, இப்போது ஆயுதங்களை ஒப்படைத்துவிட்ட தீரத்தைப் போற்றுகிறோம்; வாழ்த்துகிறோம்.

இதில் என்ன வீரதீர பராக்கிரமம் இருக்கிறது? இந்திய ராணுவமும் யுத்த தளவாடங்களும் ஏராள அளவில் யாழ்ப்பாணப் பகுதிகளில் குவிக்கப்பட்டிருக்கும் போது விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்காமல் இருக்க முடியுமா? அவர்கள் இந்திய ராணுவத்தை எதிர்ப்பதுதான் சாத்தியமா? என்று கேட்பவர்கள் விடுதலைப்புலிகளின் இயல்பை அறியாதவர்கள்.

விடுதலைப் புலிகள் ஸயனைட் மாத்திரையைப் பல்லிடுக்கில் கடித்துக் கொண்டு போராடுகிறவர்கள். உயிர், அவர்களுக்கு மதித் தள்ளும் விஷயம். லட்சியமே முக்கியம். அதனை அடையத் தலைவன் இடும் கட்டளை எதுவானாலும் நிறைவேற்றத் தயாராய் இருப்பார்கள். எனவே, பிரபாகரன் ஜாடை காட்டியிருந்தால் போதும், அவர்கள் இந்தியத் துருப்புக்களுடன் மோதியிருப்பார்கள்; போரிட்டு மடிந்துமிருப்பார்கள். தங்கள் குறிக்கோளுக்காக உயிர்த் தியாகம் செய்து வீரசொர்க்கம் அடைந்திருப்பார்கள்.

அப்படி நேர்ந்திருந்தால் பாரதத்தைத் தீராத அவமானம் வந்தடைந்திருக்கும். சொல்லி முடியாத துயரம் தமிழக மக்களைச் சூழ்ந்திருக்கும். இந்திய ராணுவமோ, ஒரு தர்ம சங்கடத்தைத் தொடர்ந்து, ஒரு தீராப் பழியைக் காலமெல்லாம் சுமக்க நேரிட்டிருக்கும். இந்தத் தலைகுனிவை நிமிர்த்தவே முடியாமலும் போயிருக்கும்.

நல்லவேளை, இறைவன் அருளால் பிரபாகரன் சரியான முடிவெடுத்தார். 'இந்தியாவை நாங்கள் விரோதித்துக் கொள்ள விரும்பவில்லை; அதனால் ஆயுதங்களை ஒப்படைக்கிறோம்' என்று கூறி அவ்வாறே செய்தார். இந்த ஒப்பந்தத்தைப் பிரபாகரன் ஏற்கவில்லை; ஆனாலும் ஆயுதங்களைத் துறந்திருக்கிறார்! இந்திய அரசு அவரிடம் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை; ஆயினும் இந்தியாவைக் கைவிடாமல் ஆயுதங்களை ஒப்புவித்திருக்கிறார்! இந்த ஒப்பந்த நகலைக் கூட பிரபாகரனிடம் காட்டாமல், அவரைக் கலந்தாலோசிக்காமல் இந்தியா செயல்பட்டிருக்கிறது; ஆயினும் பிரபாகரன் விடுதலைப் புலிகள் அமைப்பின் ராணுவப் பிரிவையே கலைத்து விட்டிருக்கிறார்! 'இனி அரசியல் பிரிவு மட்டுமே செயல்படும்' என்று அறிவித்திருக்கிறார். இந்தப் பெருந்தன்மைக்கு ஈடு இணை இல்லை.

இந்திய அரசு நடந்து கொண்டிருக்கும் விதத்தைப் பாருங்கள்! சண்டை சச்சரவு எல்லாம் விடுதலைப் புலிகளுக்கும் ஜெயவர்த்தன அரசுக்கும் இடையில்தான். மத்தியஸ்தம் செய்யப் புகுந்த இந்தியாவோ, இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு பிரபாகரனிடம், 'ஆயுதங்களை ஒப்படை; அல்லது இந்திய ராணுவத்தை எதிர்கொள்!' என்று கூறியிருக்கிறது. இந்த நம்பிக்கைத் துரோகம் எவ்வளவு ஆத்திரத்தையும் மனவேதனையையும் விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்தியிருக்கும்? இருந்த போதிலும் பிரபாகரன், 'இந்தியாவை நாங்கள் விரோதித்துக் கொள்ள விரும்பவில்லை' என்று கூறி ஒப்பந்தத்தை மதித்து ஆயுதங்களை ஒப்படைத்திருக்கிறார். அப்பட்டமாகச் சொல்லப் போனால், இந்த ஒப்பந்தம் மூலம் இந்திய அரசு பகடைக்காய் உருட்டியது! அதன் அதிர்ஷ்டம், பிரபாகரனின் பெருந்தன்மை என்ற ஈராறு விழ, ஜெயித்துவிட்டது!

'இனி ஈழத் தமிழரைக் காப்பது இந்தியாவின் பொறுப்பு; தனித்தமிழ் ஈழம் என்ற லட்சியத்தை நாங்கள் விடவில்லை; போராட்டம் வேறு வடிவமெடுக்கும்; இந்த ஒப்பந்தத்தை நாங்கள் மதிக்கவில்லை; சிங்கள அரசையும் நம்பவில்லை' என்றெல்லாம் கூறியுள்ளார் பிரபாகரன். அவரிடம் 'இப்போது காட்டிய பெருந்தன்மையைத் தொடர்ந்து காட்டுங்கள்' என்று கேட்டுக் கொள்கிறோம். ஆயுதங்களை மிச்சம் மீதி இன்றி ஒப்படைத்துவிட்டு, அடுத்து வரப்போகிற அரசியல் தீர்வுக்கும் அவர் பிடிவாதத்தைத் தளர்த்திக் கொண்டு உழைக்க வேண்டும். குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் சிங்களவரும் முஸ்லிம்களும் உண்டு. அவர்களுடைய மனங்களை வென்றால்தான் வாக்கெடுப்பின் முடிவில் ஒரே தமிழ் மாநிலம் உருவாக முடியும்.

'முதல்வர் பதவி எனக்கு வேண்டாம்' என்கிறார் பிரபாகரன். நல்லது; ஆனால் அமைதி அனைவருக்கும் தேவை. 'கசப்புணர்வை விழுங்கி விட்டு, இனி அமைதிக்குப் பாடுபடுங்கள்' என்று அவரைக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்.

வேண்டாம் சங்கடம்!

வட்ட மேஜை

• 'சுரங்கத்தில் சுற்றிய விழுதுகள்' கட்டுரை தங்கச் சுரங்கத்திற்கு நாங்களும் சென்று வந்த உணர்வைத் தந்தது. அத்துடன் நெஞ்சையும் கலங்க வைத்தது. அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலைமையையும் தங்கத்தை எடுக்கும் தொழிலில் உள்ள அபாயங்களையும் பார்க்கும் போது தங்கத்தின் மதிப்பு மேலும் உயர்வதுடன், தங்க நகை அணியும் ஆசையையே பெண்கள் விட்டு விடலாம் என்று தோன்றுகிறது.

நெசப்பாக்கம், கு. மாவதிருசேலன்.

• 'உள்ளே போனால் பிணம், மேலே வந்தால் பணம்' இது எங்கள் ஊர் பழமொழி. அதாவது காலையில் சுரங்கத்தின் உள்ளே சென்ற தொழிலாளி மாலையில் மீண்டும் உயிருடன் மேலே வருவான் என்று நிச்சயம் இல்லை. அப்படி மேலே வந்தால் பணம் (சம்பளம்) நிச்சயம் உண்டு என்று நம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்களைப் பற்றியும், எங்கள் ஊரின் சிறப்பையும் இந்த வாரக் கல்கியில் கண்டு நாங்கள் பூரித்தோம்.

தங்கவயல், ஏ. வி. அனந்தராமன்.

• மற்றொரு வாழ்ப்பாணத்தை அறிமுகப்படுத்தி நெஞ்சை அடைக்கச் செய்துவிட்டார் சுபா. வாழ்ப்பாணப் பிரச்னைக்கு ஒரு முடிவு காணப்பட்டது போல் தங்கவயல் தமிழர்கள் பிரச்னைக்கும் ஒரு தீர்வு சீக்கிரம் ஏற்படுமா?

திருநெல்விக்காவல், டி. திருக்குறள்செல்வன்.

• கோலார் தங்கவயல் தமிழர்களுக்கு மாதாந்திர நாவல்களிலும், சினிமாப் பத்திரிகைகளிலும் ஆர்வம் இல்லை என்று அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். தமிழகத்திலிருப்பவர்களை விடத் தரமான வாசகர்களாக இருக்கிறார்களே!

சேலம், மதுரபாரதி

• "மந்திரிக்கு வந்த கனவு" முக்கால் பக்கக் கவிதையில் இந்திய அரசியல் நடப்புகளை அருமையாகவும், அட்டகாசமாகவும், தெளிவாகவும் விளக்கி விட்டாரே, கவிஞர்!

மயிலாடுதுறை – 2, வி. கந்தன்.

• சின்னக் குயில் சித்ரா 'சீனியர் மோஸ்ட்' மாதிரி அத்துணை 'அசால்ட்டாய்' திருபருக்குப் பேட்டி கொடுத்திருக்கிறாரே!

கோவை – 45, புலிச்சோழன்.

• 'வீடியோ விழுத்திய விவாகரத்து' கனவுயான ஒரு கதையைப் படிப்பது போல் இருந்தது. முடிவு மனத்தை நெகிழச் செய்தது.

நாட்டரசன் கோட்டை, இதயகீதா.

• 'சலனம்' சிறுகதை மனக்குரங்கின் இயல்புகளை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டியது.

புத்தாம்பூர், இரா. செல்வபாண்டியன்.

• பாரதி வீரராகவனின், 'பின்னணி'க்குப் பின் பாவது பல்லாயிரக்கணக்கான வாரி டிரைவர்கள் இருந்தட்டும். கதையின் முடிவு என் நெஞ்சைத் தொட்டது.

மொரப்பூர், வி. எம். சேட்டு.

• வழக்கமாகக் கதைகளின் கருவாக அமையும் காதல், தியாகம், இவற்றை எல்லாம் தவிர்த்து 'எந்தக் காரியமும் காரணமில்லாமல் நடக்காது; எல்லாத்துக்கும் ஒரு பலமான பின்னணி இருக்கு' என்ற ஆணித்தரமான, ஆழமான அழுத்தமான கருவைச் சுற்றிப் பின்னப்பட்டிருந்த 'பின்னணி' சிறுகதையை எழுதிய பாரதி வீரராகவனுக்கு எங்களுடைய மனப்பூர்வமான பாராட்டுக்கள். சோகமயமான முடிவுதான் மனத்தைத் தொடும்; பரிசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என்ற மரபை உடைத்தெறிந்து, நல்லவிதமான முடிவு உள்ள சிறுகதையைத் தேர்ந்தெடுத்தது சந்தோஷத்தைத் தருகிறது.

சாலிகிராமம், இந்திரா விஜயகுமார்.

• ஜெஃப்ரி ஆர்ச்சரின் 'பணத்துக்குப் பணம்; பழிக்குப் பழி' தொடர்கதையின் எதிர்பாராத – வித்தியாசமான முடிவு, அற்புதம்!

வேலாயுதம்பாளையம், எம். சம்பத்.

• திருமலை கெமிகல்ஸ் நிறுவனத்தில் மாசுக் கட்டுப்பாடு அமைப்பு இல்லை எனக் கலெக்டர் பேட்டியின் போது சம்பந்தப்பட்ட அதிகாரி தங்களுக்குத் தெரிவித்திருப்பது கண்டு ஆச்சரியப்படுகின்றோம். இந்தக் கருத்து தவறானது.

அந்நிய நாட்டுத் தொழில் நுட்பத்துடனும், கருவிகளுடனும், மாசுக் கட்டுப்பாடு அமைப்பை நிறுவியுள்ளது இந்த நிறுவனம். இந்த மாதிரியான அமைப்பிற்காக அதிகமாக முதலீடு செய்துள்ள இந்தியாவில் உள்ள வெகுசில நிறுவனங்களில் எங்கள் நிறுவனமும் ஒன்று. இந்த அமைப்பு சுமார் பத்து மாதங்களாக நன்றாக இயங்கி வருகின்றது. தொழிற்சாலையிலிருந்து வெளியாகும் திரவ மற்றும் வாயுக்களில் இருந்து இரசாயனப் பொருள்களை (Chemicals) பிரித்துச் சுத்தப் படுத்த இந்த அமைப்பு பயன்படுகிறது. இதன் மூலம் சேகரிக்கப்படும் இரசாயனப் பொருளை நாங்கள் விற்பனை செய்து வருகின்றோம். தங்களின் ஜூலை 26 ஆம் தேதியிட்ட இதழில் வெளியாகியுள்ள புகைப்படம் மேற்கூறிய அமைப்பே ஆகும்.

தவிர, மிகக் குறைந்த அளவில் கூலிங் டவர், கொதிகலன் இவற்றிலிருந்து வரும் தண்ணீரும் வழக்கமாக வடிகட்டும் முறை, Lime Treatment மற்றும் Settlement Pit வழியாகச் சுத்தப்படுத்தப்பட்டு வெளியேற்றப்படுகின்றது.

டி. பி. ராமன்.

ராணிப்பேட்டை, நிர்வாக அதிகாரி, திருமலை கெமிகல்ஸ்.



வரலாறு படைப்பாரா வி.பி.சிங்?

மத்திய அரசாக இருந்தாலும் மாநில அரசாக இருந்தாலும் சாதனை என்று வரும் பொழுது தனி மந்திரிகளுக்கு அதில் பெரும் பங்கு உண்டு. தமிழ்நாட்டையே எடுத்துக் கொள்வோம். விவசாயிகள் கடன்சுமை தாங்காமல் அரைவயிற்றுச் சோற்றுடனும், முழங்கால் வரைத் துண்டுடனும் திண்டாடிய பொழுது அவர்களுக்கு அபயம் கொடுத்தார் ராஜாஜி. அந்நாட்களில் மாநில முதல்வர்களைப் பிரதமர்கள் என்று அழைப்பது வழக்கம். வாங்கிய கடனுக்கு மேல் வட்டிச் சுமை இரு பங்கு ஆகிவிட்டால் அசல் அடைபட்டு விட்டதாகக் கொள்வதே அச்சட்டத்தின் முக்கிய நோக்கம். ''டாம்டுபட்'' கொள்கை என்ற, மிக உயர்ந்த இரக்கத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது அக் கொள்கை.

ஜமீன்தாரி முறை ஒழிவதற்கு நங்கூரம் போல் செயல்பட்டவர் களா வெங்கட்டராவ். சட்டத்தை எவ்வளவுதான் அதிகார வர்க்கம் இயற்றினாலும் அது அமல் ஆவதற்கும் அது பலன் உள்ளதாக இருப்பதற்கும் ஓர் அமைச்சர் தேவை. ஜமீன்தார்களின் எதிர்ப்புக்களைச் சமாளிப்பதற்கு நெஞ்சு கனமும் மனோதிடமும் தேவை.

இதேபோல் பெரும் தலைவர் காமராஜர் காலத்தில் கல்வியைப் பத்தாவது வகுப்பு வரை இலவசமாக்கியது புரட்சிகரமான சாதனை.

லால்பகதூர் சாஸ்திரி பிரதமர் ஆன சமயம் நாட்டில் உணவு நிலைமை படுமோசமாக இருந்தது. அப்பொழுது உணவுப் பொறுப்பை ஏற்பதற்கு யாரும் தயாராக இல்லை. சாஸ்திரி உணவு மந்திரியாக ஸி. சுப்ரமணியத்தை நியமித்தார். அப்பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டவுடன், ''எப்படி ஒரு கழுத்துச் சுருக்கை ஏற்றுக் கொண்டீர்கள்?'' என்று கேட்டேன். அவர் பதில் சொன்னார்: ''வெகு எளிதாக உள்ள பொறுப்பைத் தான் ஏற்றுக் கொள்வதென்றால் மந்திரிகள் எதற்கு? பிரச்னையை அலசி நிலைமையைச் சீர்திருத்த முயற்சி செய்வேன். முயற்சியில் தோற்றால் வெளியேற வேண்டியதுதான்.''

இந்த அனுகு முறை காங்கிரஸ்காரர்களே கைப்பிடித்த ஒன்று. ஆனால் இந்த அனுகு முறை வரவரக் குறைந்து கொண்டே வந்து இந்திரா காந்தியின் காலத்தில் யாரை வேண்டுமானாலும் முதல்வராகவோ அல்லது மந்திரியாகவோ ஆக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டது. இல்லாவிட்டால் பிரும்மானந்த ரெட்டி, ஹிதேந்திர தேசாய் போன்றவர்களை இந்திரா காந்தி பெயர்த்துவிட்டு, அவர்களிடத்தில் அனுமதேயங்களை அமர்த்துவாரா?

வி. பி. சிங் திறமைக்கு ஓர் இலக்கணமாக அமைந்தார். இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்தில் வி. பி. சிங்குக்கு அதிக முக்கியத்துவம் கிடையாது. ஏனென்றால் அவர் ஜூனியர். இருந்தாலும் அவர் தம் திறமையைப் படாடோபமில்லாமல் காட்டி வந்தார். அவருடைய உண்மைத் திறமை ராஜீவ் காந்தி பிரதமரான பிறகுதான் வெளிப்பட்டது. இதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. ஒன்றுமே தெரியாத ராஜீவுக்கு விஷயம் தெரிந்தவர் ஒருவரை நெருக்கமாக வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் நேர்ந்தது. வர்த்தக மந்திரி சபையில் ஊழலும் லஞ்சமும் தலைவிரித்தாடின. அதை அடக்கியவர் வி. பி. சிங். புதிய தொழிலகங்கள் உருவாக லைசென்ஸ் வழங்குவது, அவற்றுக்குக் கச்சாப் பொருள்களை ஒதுக்குவது போன்ற விஷயங்களில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி ஒரு குறிப்பிட்ட கால கட்டத்துக்குள் மனுதாரர்களின் கோரிக்கைகளுக்கு உண்டு இல்லை என்று தீர்வு கண்டாக வேண்டும் என்று ஒரு நியதியைக் கொண்டு வந்தவர் வி. பி. சிங். அவர் கூட ஒரு லட்சம் இரண்டு லட்சம் என்றுதான் லஞ்சத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பார். ஆனால் போஃபார்ஸ் பேரத்தில் ஐம்பது கோடி

கே. ஸ்ரீனிவாஸன்



ரூபாய் கமிஷன் கொடுக்கப்படும்; அதைப் போல் பல டஜன் பேரங்களில் நடுவர்கள் கோடிக்கணக்கில் பணம் சுருட்டியிருக்கலாம் என்று வி. பி. சிங் கூட நினைத்திருக்க முடியாது.

பாதுகாப்பு மந்திரிப் பொறுப்பை ஏற்பதற்கு முன் அவர் நிதி மந்திரியாக இருந்தது தெரிந்த விஷயம். அச்சமயம் திறந்த கூட்டங்கள் நடத்தி அதில் தொழிலதிபர்கள் அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளைப் பங்கெடுத்துக் கொள்ளும்படி சொல்லி அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து உடன் நிவாரணம் வழங்கி வெற்றி கண்டவர் வி. பி. சிங். தொழிலதிபர்களைத் தனித் தனியே சந்திக்க மாட்டார். நாலு பேராகச் சேர்ந்து வரச் சொல்லித்தான் பேசுவார். இதன் மூலம் ரகசியம் ஏதுமில்லை என்பதை உறுதிப்படுத்தி உலகுக்கும் உணர்த்தினார். வெளிநாடுகளில்' வாழும் இந்திய வம்சா வழித் தொழில் அதிபர்களையும் வர்த்தகர்களையும் இந்நாட்டின் மேம்பாட்டுக்கு ஏற்ற திட்டங்களில் ஈடுபடும்படி வற்புறுத்தி வந்தார் வி. பி. சிங். இக்கூட்டங்களில் பங்கெடுத்துக் கொண்ட சில தொழில் அதிபர்களும் வெளிநாடு வாழ் இந்திய வம்சா வழியினரும்தான் முதன்முதலில் வி. பி. சிங்குக்கு ஒரு குட்டை உடைத்துக் காட்டினார்கள். அதாவது பல பெரிய இந்தியத் தொழிலதிபர்கள் நாட்டை ஏமாற்றி வெளிநாடுகளில் தொழில்கள் அமைப்பதாகச் சொல்லி அந்நியச் செலாவணியை ஸ்விஸ் பாங்குகளில் போட்டு வைத்திருப்பதை அம்பலப் படுத்தினார்கள். இந்த விஷயத்தை ஆராய முடிவு செய்தார் வி. பி. சிங். நிதி அமைச்சகத்தில் பொருளாதாரப் புலனாய்வுத் துறை ஒன்று உண்டு. அதில் நேர்மைக்குப் பெயர் பெற்ற படேலாலை இந்த அம்சத்தைக் கவனிக்கும்படி பணித்தார் சிங். இதுதான் இன்று நடக்கும் ரகளைகளுக்கு ஆரம்பம்.

இந்தியத் தொழிலதிபர்கள் வெளிநாடுகளில் வைத்து உள்ள சொத்துக்களின் மதிப்பு எத்தனை கோடியோ யாருக்கும் நிச்சயமாய்த் தெரியாது. ஒன்று மட்டும் நிச்சயம். இந்திய அரசின் வருடாந்திர பட்ஜெட் செலவினங்களுக்குச் சமமான தொகை ஸ்விஸ் பாங்குகளில் இந்தியர்களின் பெயரில் உள்ளது என்பதாகக் கணிக்கப்பட்டிருக்கிறது! இது தவிர நம் நாட்டிலேயே யார் யாரிடம் எவ்வளவு கள்ளப் பணம் இருக்கிறது என்பதை அறியத் தத்திங்கிணத்தோம் போடுகிறார்கள் வருமான வரித்துறையினர். நியூயார்க், லண்டன் மற்றும் ஜெனிவா போன்ற நகரங்களில் இந்தியர்கள் எவ்வளவு பணம் போட்டு வைத்திருக்கிறார்கள் என்பதை இந்திய அதிகாரிகள் அறிய முடியாது. இதற்குக் காரணம் பாங்குகளில் நிலவும் ரகசிய முறை. இதனைத் துப்பறிய ஃபேர் ஃபேக்ஸ் நிறுவனத்தை அமர்த்தலாம் என்று யோசனை சொன்னார் படேலால். இங்குள்ள இந்திய அதிகாரிகள் அங்கு போய்க் கேட்டால் உடனே சம்பந்தப்பட்டவர்கள் உஷாராகி விடுவார்கள். ஒரு விவரமும் பெற முடியாது. ஆனால் அயல்நாட்டவர், பேச்சு வாக்கில் 'கேஷுவலாக' விசாரித்தால் சந்தேகம் எழாது. இதனை நன்கு உணர்ந்திருந்தார் படேலால்.

அந்நியத் துப்பறியும் முறைகள் அலாதியானவை. ஒரு நிறுவனத்திற்குள் ஊடுருவி அதில் ஓரிரு கையாட்களை அமர்த்திக் கொண்டு விஷயங்களைக் கிரகிப்பது அந்நாடுகளில் நிலவும் முறை. ஃபேர்ஃபேக்ஸ் நிறுவனம் தனக்குக் கொடுக்கப்பட்ட பணியில் கணிசமாக வெற்றி கண்ட பொழுது சில பம்பாய்த் தொழிலதிபர்கள் அலற ஆரம்பித்தார்கள். மத்திய அரசின் உச்ச மட்டக் கையாட்களான நடிகர் அமிதாப்பச்சன் அவர் தம்பி அஜிதாப் பச்சன் போன்றவர்களும் பதறினார்கள். அந்நியத் துப்பறியும் நிறுவனத்தை அமர்த்த வி. பி. சிங் தமது அனுமதியைக் கொடுத்ததுடன் பிரதமரின் ஒப்புதலையும் கோரிப் பெற்றார் என்பது இப்பொழுது வெளிவந்து விட்டது.

ஆனால் ராஜீவ் காந்தி சீக்கிரமே தொழிலதிபர்களின் இடுக்கிப் பிடியில் சிக்கினார். வி.பி. சிங்கை நிதிப் பொறுப்பிலிருந்து விலக்கிப் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்குமாறு செய்தார். அங்கும் பல லஞ்ச ஊழல்கள் மலிந்திருப்பது அவருக்குத் தெரிய வந்தது. அதில் ஒன்றுதான் நீர்மூழ்கிக் கப்பல் பேரம். 'இதை விசாரிக்க வேண்டும்' என்று அவர் பகிரங்கமாகக் கூறப் போக, பாதுகாப்பு அமைச்சர் பதவியும் அவரிடமிருந்து பறிக்கப்பட்டது. அந்தச் சந்தடி அடங்குவதற்குள் போஃபார்ஸ் விவகாரம் பூதாகார வடிவமெடுத்தது.

போஃபார்ஸ் என்பது நோபல் பரிசு

வழங்கும் நொபெல் நிறுவனத்தின் ஒரு துணை நிறுவனம். பாதுகாப்புத் தளவாடங்களை உற்பத்தி செய்யும் ஒரு மாபெரும் ஸ்தாபனம். இது தயாரிக்கும் பீரங்கிகள் சுமார் எட்டு மைல் தூரம் குண்டுகளைப் பொழிய வல்லது.

இவர்களின் பணம் எவ்வளவு உயர்ந்த பதவியில் இருப்பவர்களானாலும் அவரை அணுகி மயக்கும். ஐம்பது கோடி தந்து ஐயாயிரம் கோடிக்கு ஆர்டர்கள் பெறுவார்கள். உயர் பதவியில் இருப்பவருக்கு லாபம். அந்நாட்டின் வரி செலுத்தும் மக்களுக்கு நஷ்டம். ஐம்பது கோடியில் ஒரு கோடியை உதறினால் சில்லறைத் தேவதைகள் பாய்ந்து பாய்ந்து பொறுக்காதா? இதுதான் கதை.

ராஜாஜி, லால்பகதூர், காமராஜ் போன்றவர்கள் லஞ்சம் என்று பேச்சு அடிபட்டாலே சீறுவார்கள். அது அதிகாரிகளுக்கு உறுதுணை. நடுங்குவார்கள். இன்று நிலைமையே வேறு. யார் ஐம்பது கோடி பெற்றார்கள், அப்பணம் எங்கே இருக்கிறது என்பதே தெரியவில்லை. தலைவர்கள் சரியில்லாததால் அதிகாரிகளுக்கும் பயம் போய்விட்டது.

போஃபார்ஸ் பேரத்தை வெளிக் கொண்டு வந்தது ஸ்வீடிஷ் நாட்டின் ரேடியோ. நம் நாடு போலன்றி அங்கு டி.வி., ரேடியோ நிறுவனங்களுக்குச் செய்தி தயாரித்து ஒலிபரப்புவதில் கணிசமான சுதந்திரம் உண்டு. ஸ்வீடிஷ் ரேடியோ வெளியிட்ட செய்தியை இங்கு இந்தியன் எக்ஸ்பிரஸ் பிரசுரித்த பொழுது அதை மத்திய அரசு மந்திரிகள் மறுத்தார்கள். ஆனால் ஸ்வீடிஷ் ரேடியோ மேலும் விவரங்களைக் கொடுத்து யார் யார் பெயரில் பணம் கொடுக்கப்பட்டது என்ற பட்டியலையும் வெளியிடப் போவதாக அச்சுறுத்தியது. இதனால் ஸ்வீடிஷ் அரசாங்கமே தலையிட்டு விசாரணை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த விசாரணை அறிக்கை, கமிஷன் என்ற பெயரில் லஞ்சம் தரப்பட்டதை உறுதிப்படுத்துகிறது. ஆனால் யார் யாருக்குத் தரப்பட்டது என்ற விவரத்தை மூடி மறைத்து விட்டது. இதற்கிடையில் பிரபல வழக்கறிஞர் ஜெத்மலானி தொடர்ந்து முப்பது நாட்களுக்குத் தினம் பத்துக் கேள்விகள் வீதம் கேட்டார். இதற்குப் பதில் கிடையாது.

மந்திரி பதவி பறிக்கப்பட்ட வி. பி. சிங்கை என்ன செய்யலாம் என்று பிரதமர் ராஜீவ் காந்தி யோசித்துக் கொண்டிருந்த பொழுது ஜால்ராக்கள் ஒலிக்கத் தொடங்கின. இவர்களில் பிரபலமான ஒருவர் மாஜி மந்திரி கல்பனாத்ராய்; மற்றொருவர் இன்று மாஜி மந்திரியாகிவிட்ட கே. கே. திவாரி. குப்பையைத் தூக்கிக் கோபுரத்தில் வைத்தால் அது குதிக்கத்தான் குதிக்கும். தாங்கள் யார், வி. பி. சிங் யார் என்பது இந்த அநாமதேயங்களுக்குத் தெரியாது. வி. பி. சிங்கை வெளியேற்றினால் அது காங்கிரஸை எப்படிப் பாதிக்கும் என்பதை நன்கு உணர்ந்த ஒரே நபர் முன்னாள் காங்கிரஸ் தலைவர் கமலாபதி திரிபாதி. அவருடைய எச்சரிக்கையை இன்றைய காங்கிரஸ் மேலிடம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஜனாதிபதி தேர்தல் முடியக் காத்திருந்து பிறகு வி. பி. சிங்கைக் காங்கிரஸிலிருந்து வெளியேற்றி விட்டது. தேர்தலுக்கு இரு தினங்கள் முன்னதாக வி. பி. சிங்கை வெளியேற்றியிருந்தால் ஜனாதிபதி தேர்தலின் போக்கும் முடிவும் வேறு மாதிரி இருந்திருக்கும்.

வி. பி. சிங், ராஜபுத்திரர். க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர். ஜமீன்தார் போன்ற அந்தஸ்தில் இருந்தவர். அதனால் அவரை இன்றைக்கும் மக்கள் அன்புடன் "ராஜா" என்று அழைப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

தாம் தாக்கப்பட்டும் கூட வி. பி. சிங் காங்கிரஸைத் தாக்காமல் இருந்தது ஓர் ஆச்சரியமான விஷயம். ஆனால் அதில் சாணக்கியம் இருக்கிறது. பல காங்கிரஸ்காரர்களுக்கே ஆட்சியில் உள்ள ஊழல்களின் பரிமாணங்கள் சரியாகப் புரியவில்லை. இதனை அவர்களுக்கு உணர்த்த வேண்டும் என்ற அவா சிங்குக்கு இருந்தது. சிங் எழுதிய கடிதங்கள் பலருக்கு அவரிடம் அனுதாபத்தை ஏற்படுத்தின. அவரை ஆட்சியிலிருந்து மட்டுமின்றிக் கட்சியிலிருந்தும் வெளியேற்றியதும், 'என்னடாது, லஞ்சம் ஒழிக்கப்பட வேண்டும்; படே படே தொழிலதிபர்கள் ஆட்சியிலுள்ளவர்கள் மீது கிடுக்கிப் பிடி போடுவதைத் தடுக்க வேண்டும்; அவர்களின் கொட்டத்தை அடக்க வேண்டும்; ஸ்விஸ் பாங்குகளில் உள்ள கணக்கில் வராத கள்ளப் பணத்தை வெளிக் கொண்டு வரவேண்டும்' என்றெல்லாம் சொல்வது கூடக் குற்றமா? இதற்குத் தண்டனையா? என்றெல்லாம் தெளிவான பொது அபிப்பிராயம் மக்களிடையே பரவியது மட்டுமல்ல; காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே பலரிடம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவரது சொந்த மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் அவருக்குச் செல்வாக்குப் பெருகியது. பிரதமர் இப்போது எங்கே போனாலும் ஆட்களை லாரி லாரியாகத் திரட்டி வந்து கூட்டம் சேர்ப்பது வழக்கமாகி வருகிறது. ஆனால் வி. பி. சிங்குக்கு இது தேவைப்படவில்லை. ஹரித்வார், அலகாபாத் மற்றும் பல நகரங்களில் எதிர்பாராத அளவுக்குப் பெருங்கூட்டங்கள் திரண்டன. இன்று சிங் கொடுக்கும் "சவுக்கடிகள்" பாமர மக்களுக்கும் சரி, அறிவாளிகளுக்கும் சரி அவர் எப்படிப்பட்டவர் என்பதை உணர்த்தி வருகின்றன. அவருக்கு நாளுக்கு நாள் பேராதரவு பெருகி வருவது கண்டு காங்கிரஸ் கட்சியும் மாநில ஆட்சியும் அவர் கூட்டங்களைக் கலைக்க முற்படுகின்றன. காங்கிரஸ் தொண்டர்கள் குண்டர்களைப் போல் காரில் சென்று, கதவு — ஜன்னல்களைப் பெயர்ப்பது, சிங்குக்கு அழைப்புக் கொடுப்பவர்களை அச்சுறுத்துவது போன்ற காரியங்களைச் செய்கிறார்கள். இதற்குப் பெயர்தான் ஃபாஸிஸம்.

இந்த முயற்சி கண்டு தில்லி மாணவர்கள் வெகுண்டு எழுந்தார்கள். எதிர் நடவடிக்கை எடுத்தார்கள். வி. பி. சிங்கைப் பேச அழைத்துத் தங்களுடைய மாபெரும் ஆதரவைக் காட்டினார்கள்.

இன்று நிகழ்வது . அறப்போர்.



''அந்தப் பிச்சைக்காரனுக்கு 'ஸ்விஸ்' வங்கியிலே கணக்கு இருக்குதுன்னு பேசிக்கிட்டது உண்மைதான்னு தோணுது!''

''எப்படிச் சொல்றே?''

''சாமி! ஒரு 'டாலர்' தர்மம் பண்ணுங்கன்னு பிச்சை கேட்டானே!''

— ஆர். அப்துல் சலாம்

''என்னங்க, அந்த ஹோட்டல் வாசல்லே, 'அர்ஜெண்ட் இரண்டு மணி நேரம், ஆர்டினரி அரை நாள்னு, போர்டு இருக்கு...''

''ரவா தோசைக்குத்தான்!''

— ஆர். வசந்தகுமார்



நேர்மை, நாணயம், நல்ல நடைமுறைகளை வலுப்படுத்துதல் போன்ற அம்சங்கள் ஒரு புறம்; அரசின் வசதிகளைக் கொண்டு கூட்டம் சேர்த்து லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான மத்திய அரசைப் பலப்படுத்தச் செய்யப்படும் செயற்கையான முயற்சிகள் மறுபக்கம்.

நாடாளுமன்றத்தில் அ. தி. மு. க. வையும் முஸ்லிம் லீகையும் தவிர மற்ற கட்சிகள் எதிர்ப்பக்கம் நிற்கின்றன. ஆனால் சரியான செயல் திட்டம் இல்லாததால் இழுபறி. சென்ற ஒரு மாதத்திற்கும் மேலாகத் தினம் தினம் வெளியாகும் ஊழல்களை முழுமையாக ஆராய வேண்டும். இதற்குச் சரியான விசாரணைக் கமிட்டி ஏற்படுத்த வேண்டும் என்று ஒருமுகமாக எதிர்க்கட்சிகள் வாதாடிக் கிட்டத்தட்ட ஒரு வார காலம் ஒரு விதமான காரியமும் நாடாளுமன்றத்தில் நடக்க முடியாமல் செய்து விட்டன. இதைத் தொடர்ந்து கட்சிகள் எல்லாம் மக்களுக்கு விழிப்பு ஏற்படுத்த, நாடெங்கும் கூட்டங்கள், கருத்தரங்குகள் முதலியவைகளை நடத்தத் திட்டமிடுகின்றன. ஒரு வேளை அரை வயிறு சாப்பாட்டிற்கு வழியில்லாத கோடானு கோடி மக்களை, இந்த ஊழலின் பரிமாணம் எத்தகையது என்பதைத் தெரிந்து கொள்ளச் செய்வது கஷ்டமில்லை என்பது மதுதந்தவதே. இந்திரஜித் குப்தா, அத்தல் பிஹாரி வாஜ்பாய் போன்ற தலைவர்களுடைய அபிப்பிராயம்.

ஆட்சிப் பொறுப்பில் உள்ள உச்ச மட்டத் தலைவர் அல்லது தலைவர்களுக்கு ஊழல் பேரங்களில் பங்கோ அல்லது சம்பந்தமோ இல்லை என்பதைத் தெளிவுபடுத்தினால் ஒழிய, மக்களிடம் வலுத்த சந்தேகம் எழுந்து அடுத்த தேர்தல் முடிவுகளில் அது பிரதிபலிக்கும். இதைப் புரிந்து கொண்டுதான் காங்கிரஸில் ஒரு சாரார், 'ராஜீவ் பதவியிலிருந்து விலகட்டும்; விசாரணை அவருக்குச் சாதகமாகிவிட்டால் அந்த அடிப்படையில் மீண்டும் அவர் பதவிக்கு வரட்டும்' என்று சொல்லுகிறார்கள். காங்கிரஸ்காரர்களுக்கு இன்னும் இரண்டரை ஆண்டுகளுக்குத் தொடர்ந்து நாடாளுமன்ற அங்கத்தினர் பதவியில் நீடிக்க வேண்டும் என்பதே கவலை. வி. பி. சிங்கின் லட்சியமோ பதவியைப் பிடிப்பதல்ல. லஞ்ச ஊழல் ஒழிப்பு, ஸ்விஸ் பாங்குக் கணக்குகளின் ஒழிப்பு போன்ற குறிக்கோள்களை இந்தியாவெங்கும் மக்கள் முன் வைத்துப் பரப்பி வருகிறார். பதவி முக்கியமல்ல; லட்சியமே முக்கியம் என்று அவர் செயல்படுவதால் அவர் மேல் மக்களுக்கு உள்ள மதிப்பு அதிகரிக்குமே ஒழியக் குறையாது. எதிர்க்கட்சிகள் தன் இயக்கத்தை ஆதரிக்க வேண்டும் என்பதற்காக மட்டுமே அவர் பல்வேறு கட்சியினர் தோன்றும் மேடையில் தாமும் தோன்றித் தமது இயக்கத்தை வலுவடையச் செய்கிறார்.

சிங் எழுப்பிய கேள்விகள்; முன் வைத்த திட்டங்கள்; அம்பலப்படுத்திய ஊழல்கள் எல்லாம் நாட்டுக்கு நல்லதே என்பதால் எதிர்க்கட்சிகள் ஆதரிக்கும். அவரை மையமாகக் கொண்டு ஒரு கட்சி உண்டாகுமா என்பதை இப்போது சொல்ல முடியாது. அடுத்த தேர்தல் நிகழும் முன்னர் காங்கிரஸ்காரர்களே அவருக்கு ஆதரவு கொடுக்க, மற்றொரு காங்கிரஸ் உருவாகி, அது பலமடையலாம். இன்று இந்திரா காங்கிரஸ் அடைந்துள்ள இடத்தை அந்தப் புதிய காங்கிரஸ் அடையலாம். இன்று முக்கியமான அம்சம் இவ்வளவு பெரிய ஊழல்களை சிங் அம்பலப்படுத்தியிருக்கிறார் என்பதே.

இந்திய மக்களின் பணம் எவ்வாறு கொள்ளையடிக்கப்படுகிறது என்பதை சிங் தெளிவாக்கியுள்ளார். 'போஃபார்ஸ் பேரத்தில் பெறப்பட்ட திருட்டுக் கமிஷன் பணத்தைக் கொண்டு எட்டாயிரம் ஆரம்பப் பள்ளிகளை இங்கு நிறுவலாம் அல்லது எண்பதாயிரம் பம்பு செட்டுக்களை விவசாயிகளுக்கு அமைத்துத் தரலாம்' என்று கணக்குச் சொல்கிறார். இது மக்களுக்குப் புரியாமலா போகும்?

15,16-8-87 காலை 9-30க்கும் பகல் 1மணிக்கும் ஓர் அரிய வாய்ப்பு



ராம ஆஞ்சநேயர் கார்டன்

(அரசு அங்கீகாரம் பெற்ற வீட்டு மனைகள்)

1. வண்டலூர் ரயில் நிலையத்திலிருந்து 10 நிமிட பஸ் பயணம்
2. படப்பை பஜாரை ஒட்டி ட்ரங்க் ரோட்டில் அமைந்தது, உடனே வீடு கட்ட சிறந்த இடம்.
3. சுவையான குடிநீரும் அழகிய தோட்டமும் அருகிலேயே அமையப் பெற்றது.
4. பாரிஸிலிருந்தும், தாம்பரத்திலிருந்தும் நகரப் பேருந்து கட்டணத்துடன் கூடிய பஸ் வசதி. பஸ் நெ. 55L, 55M, 55N, 55P, 79, 79A, 79B, 110.
5. மழைக் காலத்தில் தண்ணீர் தேங்காத மேடான நிலம்.
6. அரசு வழக்கறிஞர் நற்சான்றிதழ் (லீகல் ஒபினியன்) பெற்றது.

உடனே வீடு கட்ட சிறந்த இடம்.
1800 சதுர அடி மனை முன் பணம்
ரூ. **1000-** (ரூபாய் ஆயிரம் மட்டும்)
மீதித் தொகை மிகச் சுலபத் தவணையில்
(ரூ. **200 x 60** மாதம்)

முழுத்தொகையும் உடனே
செலுத்துவோருக்கு
கணிசமான தள்ளுபடி உண்டு.

சென்னை நகரில் முக்கிய PLOT,
வீடுகள், Fப்ளாட்டுகள்.
மவுண்ட்ரோடு, தி.நகர், மேற்கு மாம்பலம்,
அசோக் நகர், கே.கே. நகர்,
போரூர், அடையார், பெஸண்ட் நகர்
மைலாப்பூர், அண்ணா நகர், வேளச்சேரி,
ராயப்பேட்டை, துரைப்பாக்கம், பெருங்குடி
குரோம்பேட்டை, நங்கநல்லூர், தாம்பரம்,
வண்டலூர், கூடுவாஞ்சேரி

எங்கள் கார்களிலேயே ஞாயிறு காலை 9.30க்கும் மதியம் 1 மணிக்கும் நபருக்கு ரூ.10/- செலுத்தி மனைகளுக்குச் சென்று பார்வையிடலாம்.

மனைகளை ரிசர்வ் செய்ய டோக்கன் அட்வான்ஸ் ரூ. 100/-

சென்னை நகரிலும் மற்றும் சென்னையைச் சுற்றிலும் ரூ. 10,000 முதல் பல லட்சங்கள் வரை வீட்டு மனைகள், வீடுகள், மற்றும் Fப்ளாட்டுகள்

ஞாயிறு அலுவலகம் உண்டு சனி விடுமுறை


வீட்டு மனைகள், வீடுகள், Fப்ளாட்டுகள் வாங்க கைராசியான ஸ்தாபனம்

முரளிஸ் எஸ்டேட்

MURALIS ESTAT

12, ராமசாமி தெரு, தி.நகர் சென்னை 600017

MAYUR IMPRESS 81/87



மங்கை...

நம் தேசத்தின் சட்ட அமைப்பு சரியில்லை என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்வதற்காகவே ஒரு படம்.

சரிதா ஒரு வக்கீல். நதியா ஒரு வக்கீல். இரண்டு வக்கீல்களும் மோதிக் கொண்டு கடைசியில் சட்ட அமைப்பு சரியில்லை என்று முடிக்கிறார்கள்.

ம்ஹூம். என்னத்தைச் சொல்ல?

முதலில் நதியா நேற்றுப் பிறந்த கன்றுக்குட்டியாக ஆட்டம் போடுவதையும், சுரேஷ் அந்த ஜீப் ஆக்ஸிடெண்டில் வந்து சேருவதையும் பார்த்தபோது படம் கிளுகிளு வர்ணம் பூசிக் கொண்டு நகரப் போகிறது என்று எதிர்பார்த்தது நம் தப்பு.

காதல், குடும்பம், பாசம் இவற்றிலிருந்து வெகு தூரம் விலகிவந்து ஒரு படத்தைத் தயாரித்திருக்கிறார் கோவைத்தம்பி.

சுரேஷிற்கு வேலையே இல்லை. படத்தின் கதாநாயகன் என்று அவரைச் சொல்வது அவருக்கு அவமானம்.

சரண்ராஜ் ஒரு பயங்கரமான ஆசாமி. அவர் சரிதாவை வாழ்நாள் முழுக்க அழ வைக்கவேண்டுமென்பதற்காக, சரிதாவின் தங்கையை விதவையாக்குகிறார். சரிதா, சரண்ராஜை விடுதலை செய்த சட்டத்தின் மீது கோபம் கொண்டு பயங்கரக் கிரிமினல்களுக்கு ஆதரவாக வாதாடத் தொடங்குகிறார்.

நதியா வக்கீலுக்குப் படித்துவிட்டுத் திரும்பி வந்து, நடந்ததை அறிந்து, சரிதாவிற்குப் பதில் தானே சரண்ராஜைப் பழிவாங்கும் சவாலை ஏற்றுக் கொண்டு...

பெட்ரோல் பங்க் ஸ்டண்ட் பரவாயில்லை. காரை எரித்து, பெட்ரோல் பங்கை எரித்துத் தூள் கிளப்பி இருக்கிறார்கள்.

இங்கிருந்து பம்பாய் வரை போய் ஒப்பந்தம் செய்தும் பயனில்லை. லக்ஷ்மிகாந்த்—பியாரிலால் சக்கையாக ஏமாற்றி விட்டார்கள். ஒரு பாட்டு என்றால்,ஒரு பாட்டுக் கூட முணுமுணுக்கிற மாதிரி இல்லை.


சரண்ராஜ் வெகுசீக்கிரம் முன்னேறப் போகிறார் என்பதை அவருடைய நடிப்பு தெரியப்படுத்துகிறது.

மற்றபடி, மிகை நடிப்பு ராணி சரிதாவும், நதியாவும் கோர்ட்டில் நீயா, நானா போட்டியில் இறங்கி வசன மழையாகப் பொழிந்து... கோர்ட் காட்சிகள் சட்சட் என்று முடிந்திருந்தால் சுவையாக இருந்திருக்கும். இப்போது இருக்கிற நீளத்தைப் பார்த்தால்...

கொட்டாவி. அடக்க முடியாத கொட்டாவி.

— ஜெயமன்மதன்

...ஒரு கங்கை



NAVAJEEVAN BLIND RELIEF CENTRE (REGD)

(Eye Donation Information Centre)

1-57, North Mada St., P.O. Tirumala Hills, Via Tirupati 517 504

ஸ்ரீ காஞ்சி சங்கராச்சார்யார் ஸ்வாமிகளின் அனுக்ரஹத்துடனும் கருணை உள்ளம் படைத்த வாசகர்களின் விசேஷ உதவியுடனும் ஸ்ரீ வெங்கடாசலபதி திருக்கோயில் கொண்டிருக்கும் இந்தத் திருப்பதி — திருமலை புண்ய க்ஷேத்திரத்திலிருந்து கண்களை இழந்தவர்களுக்கு இந்த நவஜீவன் சேவா கேந்திரம் பலவிதங்களிலும் உதவி வருவது வாசகர்கள் அறிந்ததே.

பணிவுடன் கூடிய ஒரு வேண்டுகோள்

விழிகளை இழந்தவர்களுக்குத் தற்போது இந்த சேவா கேந்திரம் அளித்து வரும் சில தொண்டுகளை எதிர்காலத்தில் மேலும் விசேஷமாக விஸ்தரிக்கும் பொருட்டு அன்பார்ந்த வாசகர்களின் உதவியைப் பெரிதும் வேண்டுகிறோம். கலியுக கண்கண்ட தெய்வமான, வேண்டுவோருக்கு வேண்டியதை அளிக்கும் ஸ்ரீ ஏழுமலையான் திருக்கோயில் கொண்டிருக்கும் இந்த புண்ய க்ஷேத்திரத்தில் எந்த ஒரு தொண்டுசெய்தாலும் அதற்கு ஆயிரம் மடங்கு அதிகம் புண்ய பலன்கள் கிடைப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. விழிகளை இழந்து வாழ வழி தெரியாமல் பரிதவித்து வரும் பல லட்சம் மக்களில் ஒரு சிலருக்காவது நித்யம் அன்னதானம் வழங்கி சங்கீதமும் கைத்தொழிலும் கற்றுக் கொடுத்துப் புனர்வாழ்வு அளிக்க முயற்சித்து வருகிறோம். மேலும் விழியற்றவர்களுடன் ஏனைய உடல் ஊனமுற்றோர்களுக்கும் ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கும் உதவிகள் அளிக்கவும் திட்டமிட்டு வருகிறோம்.

உங்களுக்காக சில தொண்டுகள் :

மேற்குறிப்பிட்ட புனிதத் தொண்டின் பொருட்டு ரூ. 501/— (ரூபாய் ஐநூற்று ஒன்று) அல்லது அதற்கு மேலும் அனுப்பும் கருணை உள்ளம் படைத்த வாசகர்களின் சார்பாகச் சில தொண்டுகளை உங்களுக்காகச் செயல்படுத்துகிறோம். 1. நீங்கள் குறிப்பிட்டு எழுதும் ஒரு நன்னாளில் (உங்களது திருமண நாள் அல்லது குழந்தைகளின் பிறந்த நாள் அல்லது வேறு முக்கிய விசேஷ நாள்) உங்கள் சார்பாக உங்கள் பெயர், கோத்திரம், நட்சத்திரத்தில் ஸ்ரீ வெங்கடேசப் பெருமானுக்கு விசேஷக் கட்டணம் செலுத்திப் பூஜா அர்ச்சனை செய்விக்க ஏற்பாடு செய்கிறோம். 2. விசேஷப் பிரார்த்தனையுடன் ஸ்ரீவாரி மஹா பிரசாதம் ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பி வைக்கிறோம். 3. முன்னதாகத் தேதி குறிப்பிட்டு ஊர்ஜிதம் செய்து கொண்டு திருமலைக்கு யாத்திரையாக வரும் அன்பர்களுக்கு இலவசமாக இடவசதி அளிப்பதுடன் தேவையான உதவிகளும் அளிக்கப்படும். (அடுத்த ஒரு வருஷம் வரை மட்டும்) 4. நீங்கள் குறிப்பிட்டு எழுதும் ஒரு நன்னாளில் விழியற்றவர்களுக்கு உங்கள் சார்பாக அன்னதானம் வழங்கப்படும்.

மேலும் ரூ. 51/— அனுப்பும் அன்பர்களின் சார்பாகவும் நீங்கள் குறிப்பிட்டு அனுப்பும் தினத்தன்று உங்கள் சார்பாக விசேஷப் பிரார்த்தனை செய்வித்து நீங்கள் அனுப்பும் தொகையிலிருந்து ஒரு பாகம் ஸ்ரீ வாரி ஹுண்டியில் ஸமர்ப்பித்து மஹா பிரசாதமும் தபாலில் அனுப்புவதுடன் விழியற்றவர்களுக்கு இனிப்புகளும் வழங்க ஏற்பாடு செய்கிறோம்.

ரூ. 500/— அல்லது அதற்குமேல் டொனேஷன் வழங்கும் அன்பர்களுக்கு வருமான வரிச் சலுகை (Income Tax Exemption, under 80 G) அளிக்கப்படும். டொனேஷன்களை ''நவஜீவன் ப்ளைண்ட் ரிலிப் சென்டர், திருமலை' என்கிற பெயருக்கு க்ராஸ்ட் செக்/ட்ராப்ட் மூலமாக அனுப்ப வேண்டுகிறோம்.

K. ஸ்ரீநிவாஸன்

செகரடரி

நிற்க நிழல் வேண்டும்!

3

''தொளக் பொளக்'' என்ற துடுப்புகளின் ஓசை மட்டுமே கேட்டது. எங்கும் கும்மிருட்டு. கருநீலக் கடலும் கரிய வானும் இருளில் சங்கமித்து ஆதியும் அந்தமுமில்லாத அகண்டமாய் அடிவயிற்றில் ஒரு ஜிலுஜிலுப்பை ஏற்படுத்தின.

கூரிய பார்வையுடன் ஜயசீலன் அந்த இருள் போர்வையைத் துளைக்க முயன்றான். கடலில் எந்த மூலையிலாவது முனுக்கென்று ஒரு விளக்குப் பொட்டுத் தெரிந்தாலும் உஷாராக இருக்க வேண்டும். சிங்களக் கடற்படைக் கப்பல் எப்பொழுது வேண்டுமானாலும் பிரவேசிக்கலாம். சக்தி வாய்ந்த விளக்குகளைப் பாய்ச்சி இந்தப் படகை இனங்கண்டு கொள்ளலாம். அதன் பார்வையில் விழுந்து விட்டால் அதோகதிதான். அதன் குண்டு வீச்சுக்குத் தப்பிக் கரை சேருவது என்பது சாத்தியமில்லை. இது ஒரு மோட்டார் போட்டுக் கூட இல்லை, கப்பல் தென்படாத போது சரசரவென்று பாய்ந்து விரைந்தோம் என்பதற்கு. சாதாரண மீனவத் தோணி இது.

ஏறுவதற்கு முன் பிரபு தயங்கினான்.

''என்னப்பா மோட்டார் இல்லையா? அவ்வளவு தூரம் எப்படியப்பா துடுப்புப் போடுவே?'' என்றான்.



''எல்லாம் போடலாம் சாமி. குந்து'' என்றான் தோணிக்காரன் அலட்சியமாக. ''ஸேஃப்டி இதிலேதான். மோட்டார் சத்தத்தைக் கேட்டே சிங்களக்காரன் கண்டுபிடிச்சு எத்தனையோ படகுங்களைச் சுட்டிருக்கான்.''

''ஏம்பா, உசிரோட எங்களை ராமேசுவரம் சேர்த்துப்பிடுவே இல்லே?''

''காரன்டி எப்படிங்க தர முடியும்? உங்க உசிருக்கிருக்கிற ஆபத்து என் உசிருக்கும்தானே உண்டு?''

துடுப்பை வலிப்பவர்கள் அனுபவமிக்கவர்களாகத்தான் தெரிந்தார்கள். பாம்புச் செவியாக இருக்க வேண்டும். சின்ன ஓசைக்கும் சட்டென்று உஷாராகித் துடுப்பு வலிப்பதை நிறுத்திப் பயணிகளை எச்சரித்தார்கள், ''பதுங்கிப் படுங்க. அப்படியே,'' என்றார்கள்.

குனிந்த நிலையில் பிரபு அவனிடம் முணுமுணுத்தான்.

''கப்பல் எதையும் காணும், இவன் ஏன் நம்ம முதுகை ஒடிக்கிறான்?''

''உமக்கு இல்லாத கண்ணும் செவியும் அவர்களுக்கு உண்டு. தினம் தினம் போய்ப் பழக்கம். அடிபட்டும் பழக்கம் — திடீர் எண்டு சிங்களக் கப்பல் ஸர்ச் லைட் போட்டுப் பார்க்கும். அப்ப உம்ம முதுகு நிமிர்ந்திருந்தா, சிங்களன் அதை ஒடிப்பான்!''



பிரபுவின் சிரிப்போசை மெலிதாகக் கேட்டது.

''ஏன் சிரிக்கிறீர்?''

''நீ ஒரு சரியான தமாஷ் ஆளய்யா.''

''ஓமய்யா, என் ஜீவியமே ஒரு தமாஷ் தான், உமக்கு — பத்திரிகையாளனுக்கு - சரியா?''

பிரபுவின் கை அவன் தோளைத் தொட்டது.

''சேச்சே! என்ன நீ! எதைச் சொன்னாலும் தப்பா எடுத்துக்கிட்டு? உன் தமிழ் வித்தியாசமாயிருக்கில்லே? சில சமயம் வேடிக்கையா இருக்கு கேட்க. பல்லவர் காலத்துக்குமுன் பேசப்பட்ட தமிழ் இப்படித்தான் தமிழ்நாட்டிலே இருந்ததாய் எங்கேயோ படிச்சிருக்கேன்.''

''எந்தக் காலமோ, தமிழ்தானே?''

''அதுசரி,'' என்றான் பிரபு. பிறகு சிரித்தான். ''அதுமட்டுமா? தமிழ் அரசியல்வாதிகள் பாஷையிலே எங்கள் இரத்தத்தின் இரத்தம்!''

சிறிது நேரம் சென்றதும், ''கப்பல் எதையும் காணும். சரியாக் குந்துங்க!'' என்றான் தோணிக்காரன்.

இருக்கையிலிருந்து இறங்கி உடலைக் குறுக்கிக் கொண்டு படுத்த நிலையில் இருந்த பயணிகள் சர்வ ஜாக்கிரதையாக நிமிர்ந்தார்கள்.

நிமிர்ந்து இருக்கையில் அமர்ந்த நிலையிலும் பயணம் ஒன்றும் சௌகரியமாக இருக்கவில்லை. மேலும் கீழுமாக அடித்த அலையின் வேகத்தில் கடல் நீர் பிரளயம் போல் மேலே விழுந்து உடம்பு முழுவதும் நனைத்தது. தொடை எலும்புகள் நொறுங்கி விட்டவை போல வலித்தன.

துடுப்பை வலித்தவர்கள் தங்கள் மேனியைப் பற்றிய பிரக்ஞையே இல்லாதவர்கள் போல் படகைச் செலுத்தினார்கள். விளக்கு வெளிச்சமில்லாமல் நிலா வெளிச்சமும் இல்லாமல் இவர்களால் எப்படிச் செலுத்த முடிகிறது என்று ஆச்சரியமாக இருந்தது.

''அதெல்லாம் பழக்கம் சாமி!'' என்றான் தோணிக்காரன். ''நட்சத்திரத்தை வெச்சு எந்தப் பக்கம் தோணி போகுதுன்னு கணக்குத் தெரியும். மீனவத் தொழில்லே இருக்கிறவங்களுக்கு இதுகூடத் தெரியல்லேன்னா எப்படி?''

மீனவத் தொழிலை அவன் இப்பொழுது விட்டு விட்டதற்கும் காரணம் சொன்னான்.

''இந்தப் பிரச்னை ஆரம்பிச்சப்புறம், அதிலேயும் உசிரைப் பணயம் வெச்சுத்தான் தொழில் நடத்தணும்ங்கற நிலைமை ஏற்பட்டுப் போச்சு. நாம தேமேன்னு மீன் பிடிக்கப் போனாலும், விடுதலைப் புலிகளுக்கு உதவியாளுங்க நீங்கன்னு சிங்களக் கடற்படைக்காரன் பிடிச்சுக்கறான். கட்டி வெச்சு

வாஸந்தி

உதைக்கிறான். அவங்க கக்கூஸைக் கழுவச் சொல்லறான். நா பார்த்தேன். ஏதாவது தொழில் நடத்தணும். கடல் ஒண்டிதான் நமக்குப் பழக்கம். கச்சத்தீவுக்குப் பக்கத்திலேதான் மீன்பிடிக்கப் போக வேண்டியிருக்கு. அங்கேயிருக்கிற சிங்களக்காரன் பார்வையிலேந்து தப்பறது அதிகக் கஷ்டம். அதுக்குப் பதிலா அகதிகளை இப்படித் தோணியிலே ஏத்தி வர்றது நல்லது. உங்களுக்கும் உபகாரம், என்ன சொல்றீங்க?''

போட்டில் இருந்த மற்றவர்கள் வாயை மூடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அவனுடைய தமிழ் புரிந்திருக்காது. அல்லது சொந்தமண்ணை விட்டுக்கிளம்பிவந்துவிட்ட சோகமும் எதிர்காலத்தைப் பற்றிய கேள்விக் குறியும் அவர்களது வாயைக் கட்டிப் போட்டிருக்கும். தோணிக்காரனுடன் பிரபு மட்டும் ஏதோ பேசிக் கொண்டிருந்தான்.

விஷயம் சேகரிப்பதற்கு இந்தப் பொடியன் என்னமாய்ப் பறக்கிறான் என்று நினைத்து ஜயசிலனுக்குச் சிரிப்பு வந்தது. இரண்டு மூன்று நோட்டுப் புத்தகங்களை அவன் இந்த ஈழப் பயணத்தில் நிரப்பிக் கொண்டிருந்ததாகச் சொன்னான். அதைத் தவிர புகைப்பட ஃபிலிம் சுருள்கள் வேறு.

ஈழத் தமிழர்களின் இருண்டு விட்ட வானத்தின் நம்பிக்கை நட்சத்திரம் தானும் மற்ற பத்திரிகைக்காரர்களும் என்று பிரபுவின் நினைப்பு போலும்.

''தமிழர் பிரச்னை தீர்ந்திடுச்சுன்னா இந்த மாதிரி அகதிகளை ஏத்தற வேலை உனக்கு இருக்காதுய்யா. சம்பாத்தியம் குறையும்!''

இந்தப் பொடியனுக்கு வாயைக் கிண்டுவதைத் தவிர வேறு வேலை இல்லை.

''பிரச்னை தீர்ந்துடுச்சின்னா என்ன கவலை சாமி? பழையபடிக்கு மீன் பிடிக்கப் போவேன்! அதிலே வர்ற சம்பாத்தியம் போதும்! உசிரை வவுத்திலே கட்டிக்கிட்டுப் போக வேண்டாமில்லே! ஒண்ணு சொல்றேன். இவங்க பிரச்னை தீர்ந்துடுச்சுன்னா எங்களை விட சந்தோஷப் படறவங்க யாரும் இருக்க மாட்டாங்க சாமி. முன்னெல்லாம் தோணியிலே ஏறினாப்பலே ஜில்லுன்னு மனசுலே ஒரு சந்தோஷம் பொறக்கும். கடலுக்கும் நமக்கும் அப்படிப் பட்ட சம்பந்தம் — சினேகிதனைப் பார்த்த

> ''பாட்டே இல்லாம ஒரு படமாம்! அதையே பெரிசாச் சொல்லி விளம்பரப்படுத்துறாங்க!''
>
> ''பூ! இதென்ன பிரமாதம்! கதையே இல்லாம ஏகப்பட்ட படங்கள் வருது, போகுது. யாராவது கண்டுக்கிறாங்களா?''
>
> — திருவள்ளுவரான்



மாதிரி. ஜிலு ஜிலுன்னு பாட்டுப் பாடத் தோணும். இப்போ அடிவவுத்திலே புடிச்சிருக்கிற பயத்தோட ஓட்ட வேண்டியிருக்கு! இந்தச் சம்பாத்தியம் யாருக்கு வேணும் சாமி?''

''......''

''அமைதி வந்துடும்கறாங்க. வந்துடுமா சாமி?''

பிரபு என்ன சொன்னான் என்பது தெரியவில்லை.. அலைவீச்சில் வார்த்தைகள் அடிபட்டுப் போயின.

அமைதி வந்தால்...!

'அமைதி! ஏதோ அசம்பாவிதமான, கற்பனை வடிவத்திலேயே இருக்கும் வார்த்தையாகத் தோன்றியது. எப்படி இருக்கும் அது?

சுடுகாட்டிலும் இடுகாட்டிலும் இருக்கும் அமைதியாக இருக்குமா? ஜனங்கள் மட்டும் எரிந்த மயானமா அது? அதோடு நாகரிகமும், நேசமும், பாசமும், கலாசாரமும் மனுஷ நேயமும் எல்லாம் பஸ்மமாகிப் போன இடுகாடல்லவா அது!

''எனக்கு
அச்சமாயிருக்கிறது
புகை மண்டலம்
தேசியச் சின்னமாகவும்
வெடிச் சத்தங்களே
தேசிய கீதமாகவும்
அங்கீகரிக்கப்பட்டு விடுமோ?
எனக்கு
அச்சமாயிருக்கிறது''

''என்ன ஜயசிலன் ஏதாவது சொன்னியா?''

''ஓ!''

''இந்த மாதிரி 'ஓ' ன்னு சொல்லாதேய்யா, தமிழ்நாட்டுக்குப் போய். தப்பா நினைச்சுப் பாங்க.''

''சரி, சொல்ல இல்லே, சரியா?''

''அதுதான் சரி.''

பிரபு சிநேகிதமாக அவன் தோளில் ஒரு ஷொட்டு வைத்தான்.

''இன்னொரு விஷயம். உன் கதையை எனக்கு விளங்கற மாதிரி தமிழ்லே சொல்ல நீ முயற்சி செய்யணும். இல்லேன்னா நான் ஏதாவது ஒண்ணொட்டுக்கொண்ணு எழுதி வைப்பேன்.''

''கரை சேருவோம் முதல்லே!''

பிரபு சட்டென்று அடங்கிப் போனான்.

இந்தப் பொடியனைப் பயமுறுத்துவதில் நமக்கு என்ன சுகம் என்று ஜயசிலன் தனக்குள் அலுத்துக் கொண்டான். இவனாவது ஊர் போய்ச் சேர்ந்து கண்ணால் கண்டதையும் கேட்டதையும் எழுதட்டும். இவன் மூன்றாம் மனிதன். எழுதுவது அவ்வளவு சிரமமாக இருக்காது.

அவனும் அவனுடைய நண்பன் சச்சிதானந்தனும் மனத்தின் கொந்தளிப்பையெல்லாம் வார்த்தைகளால் வடிக்க முயன்று தோற்றது நினைவுக்கு வந்தது:

திடீரென்று 'தொளக் பொளக்' துடுப் போசை நின்றது. சுவாபாவிகமாகிப் போன எச்சரிக்கையுடன் ஜயசீலனின் செவிகள் கூர்மையாயின.

"எல்லாரும் படுங்க!" என்றான் தோணிக் காரன் குரலில் அவசரம் தொனிக்க.

தொலைவிலிருந்து சக்தி வாய்ந்த விளக்கு வெளிச்சம் சுழன்று அடிப்பது தெரிந்தது. படகில் கலவரம் பரவிற்று. அவரவர் இடத் துக்கு முந்திக் கொண்டு குப்புறப்படுக்க முயன்றார்கள்.

படகில் சர்வ நிசப்தம் நிலவியது.

"மாட்டிக்கிட்டோம்!" என்று பிரபு முணுமுணுத்தான். "இப்ப என்ன செய் யறது?"

"உமக்கு நீச்சல் வருமா?"

"வரும்!"

"அவங்க சுட ஆரம்பித்தால் கடல்லே குதிக்க வேண்டியதுதான்."

"எத்தனை தூரம் நீந்த முடியும்! என்னு டைய காமெரா?"

"வேடிக்கை ஆள் நீர்! உயிரை விடக் காமெரா முக்கியமா?"

"எனக்குப் பயமாயிருக்கு ஜயசீலன் அவ்வளவு தூரம் நீந்த முடியுமா?"

"இன்னும் பகுதி தூரம்தான். கடலிலே களைச்சாவது சாகலாம். 'சிங்களவன் குண் டுக்குச் சாகக் கூடாது."

"சாவிலே வித்தியாசம் வேறே உண்டா?"

விளக்கு வெளிச்சம் நன்றாகத் தோணியின் மேல் பதிந்தது. சில நிமிஷங் களில் குண்டு வீச்சு ஆரம்பித்தது.

"அப்படியே படுத்திடுங்க எல்லா ரும்."

துடுப்பை அப்படியே மாட்டி வலிப்பவர்களும் பதுங்கினார்கள். ஒரு சிறுவன் அழ ஆரம்பித்தான். குண்டு வீச்சுத் தலைக்கு மேலே பாய்ந்து கொண்டிருந்தது.

அலற ஆரம்பித்த சிறுவனின் வாயை அம்மாக்காரி பொத்தினாள். குண்டு ஒன்று தோணிக்காரன் ஒருத்தன் மேல் பட்டி ருக்க வேண்டும். "அம்மாடி" என்று குரலை அடக்கிக் கொண்டு முனகினான்.

"குதிச்சிரலாமா ஜயசீலன்?"

"வேண்டாம்" என்றான் தோணிக் காரன். "சித்த நேரத்திலே நிறுத்திடு வாங்க."

"அதுக்குள்ளே நாம மேலுலகத்துக்குப் போயிடுவோம்! வா ஜயசீலன்!"

"யோவ் சாமி! நீங்க குதிச்சாத் தோணி தடம் புரண்டுடும்!"

மேற்கொண்டு யோசனையே செய்ய முடி யாதபடி தோணியில் பெரிய துவாரம் ஏற் பட்டுக் குபுகுபுவென்று நீர் புகுந்து. இவ்வளவு நேரம் மௌனச் சிலைகளாய் அமர்ந்திருந்தவர்கள் எல்லாம் அலற அலற —

"ஜயசீலன்! ஜயசீலன்!" என்று தீன மாய் ஒரு குரல் தனித்து ஒலித்தது.

"நான் இருக்கேன், பிரபு, வாரீர்!"



அவன்: "நேற்று தூக்கத்தில் உளறி விட்டேன்."

இவன்: "கஷ்டம்! கஷ்டம்! தூக் கத்தில் கூடவா!"

— 'யெஸ். ஜீ'

இன்னும் இருட்டாகவே இருந்தது. எந்தத் திசையில் போகிறோம் என்பது புரியவில்லை. சிறுவனின் அழுகையும் அலறலும் விரைவில் ஒடுங்கிப் போயின. அந்த இந்தியப் பொடியன் என்ன ஆனான் என்று தெரிய வில்லை.

எத்தனையோ நாட்களாகச் சரியாகச் சாப்பிடாத உடம்பு சோர்ந்து போயிற்று. 'கரை சேருவோமா ஆண்டவனே' என்று மனசு பரிதவித்தது. இதற்குத்தானா இவ்வளவு நாட்களாக இந்த உயிரைக் காப் பாற்றி வைத்தோம் என்று புலம்பிற்று. 'மனைவிக் காக்கத் திராணியில்லாமல் ஒரு பெண் ணின் நினைவாக ஓடிவந்ததற்குத் தண்ட னையா?' என்று கூசிற்று.

"ஜயசீலன்! ஜயசீலன்!"

கிணற்றுக்குள்ளிருந்து குரல்கள் வந்தன.

திடீரென்று சிங்களக் குரல்கள் கேட் கின்றன.

"பரதெமளோ!"

"பரதெமளோ! பரதெமளோ!" (பரத் தமிழன்) என்று குரல்கள் துரத்துகின்றன. அவனையும் அவனுடைய அப்பாவை யும் துரத்துகின்றன.

"பரதெமளோ! பரதெமளோ!"

கொழும்புத் தெருக்களிலும் சந்து களிலும் ஓடுகிறார்கள். அப்பாவுக்கு முன் னால் பாய்ந்து ஓடிய வேகத்தில் அவன் மறைவிடத்தில் ஆசுவாசப்படுத்திக் கொள்ள நிற்கிறான்.

"பரதெமளோ!"

அவன் நின்ற இடத்திலிருந்து நன்றாகப் பார்க்க முடிகிறது.

அப்பாவின் மேல் விழும் அடிகளை — இரத்த விளாரியாக அவர் சாய்ந்து விழு வதை...

'அன்டைக்கே நான் செத்துப் போயிட் டேன் சிலியா. நீ மறைஞ்ச போது நான் செத்தது மூணாவது சாவு — இரண்டாவது எப்பண்டு கேப்பியா?'

"ஜயசீலன்! ஜயசீலன்! கண்ணைத் திற! கரை சேர்ந்துட்டோம்...!"

மிக லேசாகக் குரல் கேட்டது. "ராமேசு வரம், அக்னி தீர்த்தத்துக்கு வந்துட்டம்!"

அவனுக்கு மீண்டும் நினைவு தப்பிற்று.

(தொடரும்)

ஒரு பார்வை; ஒரு பயம்

"இந்த வீட்டில் யாருக்குப் பொறுப்பு இருக்கு? எது நடந்தாலும் ஏன்... என்னன்னு ஒரு கேள்வி இருக்கா? எனக்கு மட்டும் என்ன தலை எழுத்து? எக்கேடோ கெடட்டும்னு நானும் போறேன். போங்க..."

குழந்தைகள் மூன்றும் மிரண்டு போய் ஒருபுறம் நிற்க, தனக்கும் ஒன்றும் புரியாமல் அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள் பாத்திமா.

"வீட்டில் பொம்பளைங்கன்னு எதுக்கு இருக்கிறது? அழகு பார்க்கவா? நல்லது கெட்டது பார்த்து நடந்துக்க வேணும்? இதெல்லாமா ஒருத்தன் சொல்லித் தரணும்?"

நேற்றிலிருந்து இதே பேச்சு. வசவு....

எந்த ஊரு சைத்தான் பிடிச்சிருக்கு இவருக்கு?

நிஜமாகவே அவளுக்குக் குழப்பமாய் இருந்தது.

கடை அடைத்துவிட்டு எப்போதும் உற்சாகமாக வீட்டுக்கு வருகிறவர் ராத்திரி என்னவோ 'உர்'ரென்று நுழைந்தார். பார்க்கச் சகிக்காத முகம். "ஏன் ஒரு மாதிரியா இருக்கீக?" எனக் கேட்டதற்குக் கூடப் பதில் சொல்லவில்லை. வாய் கொப்புளிக்கப் பின் பக்கம் போனவர், "சுடுதண்ணி வைக்கலியா...? என்னடி பண்றீக வீட்ல?" என்று கத்தினார். சாப்பாட்டுக்கு உட்கார்ந்தவர் குழம்பில் உப்புக் கூடுதலாகிவிட்டதாகக் கூச்சலிட்டார். அதற்குச் சமாதானம் சொல்வதற்குள் சோற்றில் கல் தட்டுப்பட "யாரு சமைச்சது?" என்று கோபமாகக் கேட்டார். "நான்தான் அத்தா..." எனத் தயங்கியபடியே பதில் சொன்னாள் பெரியவள் பல்கீஸ். "இதான் சமைக்கிற லட்சணமா? இப்பல்லாம் உனக்குக் கவனம் இங்கே இல்லை... புள்ளே" சோற்றுத் தட்டு சுவரில் பட்டுத் தெறித்தது.

அப்போதுகூடப் பாத்திமாவுக்கு வித்தியாசமாக எதுவும் தோன்றவில்லை. வெளியே போய் வரும் ஆம்பிளைகளுக்கு ஆயிரம் பிரச்னை. வியாபாரத்தில் — கொடுக்கல் வாங்கலில்— சிநேகிதத்தில்— என ஏதேதோ சிக்கல்கள். வீட்டில் அவை பிரதிபலிக்கின்றன. என்கிற ரீதியில்தான் அவளது யோசனை போயிற்று. விடிந்தும் அவரது கோபம் தணியாததுதான் அவளைக் கிலி கொள்ளச் செய்தது. பொதுவில் பேசுவதை விட்டுக் குறிப்பாகப் பெரியவளையே திட்டுவதும், பேசுவதும்....

"உன் கவனம் இங்கே இல்லை... புள்ளே" என்ன வார்த்தை இது? அதுவும் வயதுக்கு வந்த பெண்ணிடம்?

விவரம் கேட்கப் போய் 'காய்ச்சல்' அவள் மீது திரும்பிவிட்டது. எரிந்து விழுந்தார்.

" என்ன கேடு காலம்னு தெரியலியே... அல்லாவே" பாத்திமா பெருமூச்சு விட்டாள்.

"இந்தா புள்ளே... குடிக்கத் தண்ணி கொண்டு வா..." அவர் வாய் மூடுவதற்குள் கடைசிப் பெண், "தப்பித்தேன்" என ஓடினாள். தண்ணீர் குடித்ததும் கொஞ்சம் சாந்தமடைந்து போயிருந்தார். ஜாடையில் குழந்தைகளை உள்ளே அனுப்பிவிட்டு, பாத்திமா அருகில் வந்தாள். "வெள்ளிக்கிழமையும் அதுவுமா ஏன் கோவப்படறீங்க? பொறுமையா என்னன்னு சொல்லுங்க..." என்றாள்.

உசேன் ராவுத்தர் ஒருகணம் அவளையே முறைத்தார். என்னவோ சொல்லப் போகிறார் என அவள் எதிர்பார்த்த தருணத்தில், "சரேலெனப் பின் வாங்கி "எல்லாம் உனக்குத் தெரியாதது இல்லே..." என்றார்.

"சத்தியமா எனக்கு ஒண்ணும் தெரியாது... குர் ஆன் மீது ஆணையா..." அவளுக்குக் கண்கள் கலங்கின.

"அப்ப... உன் பொண்ணுகிட்டேயே கேளு. சொல்லும்... சைத்தான் நேரம் பொறந்தது" கோபத்தில் அவருக்கு மறுபடியும் முகம் சிவந்தது. 'விசுக்'கென்று எழுந்து சட்டையையும், தொப்பியையும் மாட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டுப் போனார்.

பாத்திமாவின் துடிப்பு அதிகப்படவே செய்தது. அவர் சொல்கிறபடி தனக்குத் தெரிந்து என்ன நடந்துவிட்டது?

இரண்டு நாட்களாய் அவளும் எங்கும் போய்விடவில்லை. முன்பின் வாசல்களில் தொங்கும் படுதா மறைப்புக்குள், மகளைப் போலவே அவளும் அடைந்துதான் கிடந்தாள். வீட்டு வேலை, சாப்பாடு, பேச்சு, உறக்கம் என்பதைத் தவிர இல்லாத அதிசயம் ஒன்றும் நிகழ்ந்து விடவில்லை. அவளாவது குழந்தைகளை அடிக்கடி கண்டிப்பதும், ஏசுவதும் உண்டு.

அம்மா, ராசாத்தி என்ற வார்த்தைகளுக்கு மறுசொல் அறியாத மனிதர் இவ்வளவு கோபப்பட வேறு என்னதான் காரணம்?

அவர் போனதும் மகளிடம், "ஏண்டி... நீதான் சொல்லு. என்ன கோபம் உம்மேல் அவருக்கு?" என்று கேட்டாள்.

"தெரியலை..." எனத் தலையசைத்தாள் பல்கீஸ்.

மும்தாஜ் யாசீன்

"உன்னைக் கேளுங்கிருரு அவரு..."

காலையில் குளித்துவிட்டு வந்ததும், சட்டையை எடுத்து வைக்கச் சொன்னார். சரியாகத் துவைக்காமல் அழுக்குக் கறையுடன் இருந்தது அது.

"யாரு துவைச்சது?"

"நான்தான்..."

பதில் சொல்லவில்லை. முறைத்துப் பார்த்துவிட்டுப் போட்டுக் கொண்டார்.

அந்தக் கோபம்தானோ இது?

இவ்வளவு நீளுமா?

இந்தச் சின்ன விஷயம் காரணமாக இருக்க முடியாது எனத் தோன்ற அவளது கலக்கம் அதிகப்பட்டது.

பாத்திமாவும் பெருமூச்சு விட்டாள்.

"இதோட சேர்ந்ததுகளுக்குக் கல்யாணமாகி வயித்துல ஒண்ணும் இடுப்புல ஒண்ணுமா அலையுதுங்க. இது தலைவிதி இப்படி இருக்கே அல்லாவே...

கடைக்கு வந்துவிட்டாரே தவிர உசேன் ராவுத்தரும் இருப்பு இல்லாமல் தான் தவித்துக் கொண்டிருந்தார். 'குபுக்' 'குபுக்'கென்று மண்டைக்குள் இரத்தம் பாய்வதும், பின் 'விர்'ரென்று ஒரே வீச்சில் வேகம் தணிவதும்...

"இத்தினியூண்டு இருந்துக்கிட்டுப் பய புள்ள என்ன வேலை காட்டுது... ம்"

நினைக்க நினைக்க ஆறவில்லை. அப்படியா? அப்படித்தானோ என்ற கனம். ஊர்கிற பூச்சியாய் சந்தேகம். பயம். யோசித்து யோசித்து மூளையே சிதறி விடும் போலிருந்தது. வியாபாரத்தில் 'புள்ளி' வைத்து எப்பேர்ப்பட்ட ஆளையும் அசத்தி விடுகிற மனிதர் அவர். பார்த்த உடனேயே ஆள் இன்ன ரகம் என்று எடை போட்டுச் சாதுர்யமாய் வியாபாரம் பண்ணத் தெரிந்தவர். சக வியாபாரிகள் கிண்டல் செய்வார்கள். "பாய்... உம்ம பேச்சைக் கேட்டா வயித்துப் புள்ளை கூட நழுவி வந்துரும்யா..." என்று. அப்படிப்பட்ட தன்னையே தன் வயிற்றில் பிறந்தது நோட்டம் பார்க்கிறது என்றால் சாதாரணமா?

நேற்றைக்கு நடந்தது அது.

வழக்கம் போலவே மதியம் மூன்று மணிக்குச் சாப்பிட்டு முடித்து, அலுப்புக்கு முன் அறையில் பாய் விரித்துப் படுத்திருந்தார்.

ஒண்டுக் குடித்தனம். நீளவாக்கில் நான்கு வீடுகள். ஒவ்வொரு வீட்டிலும் 'குட்டி குலமானங்களுக்குப் பஞ்சமில்லை. மத்தியான நேரமாதலால் ஸ்கூலுக்குப் போனவை போக, மற்றதுகள் உறங்கிக் கொண்டிருந்தன. நிசப்தம். அவருக்கும் கண் அயர்கிற நேரம்.

வாசல் கதவை யாரோ தட்டினார்கள்.

சாதாரணமாகத் திறந்துதான் இருக்கும். கோழியோ, நாயோ உள்ளே நுழைந்து விடும் என்பதற்காக அந்த நேரத்தில் மட்டும் தாளிட்டு இருப்பார்கள்.

மூன்றாவது போர்ஷனில் குடி இருக்கும் காதர் மைதீனாகத்தான் இருக்க வேண்டும். பிளாஸ்டிக் சாமான்கள் விற்றுக் கொண்டிருந்தான். அவரைப் போலவே நேரம் காலம் பார்க்காமல், வியாபாரம் ஓய்ந்த நேரத்தில்தான் சாப்பிட வருவான். வீட்டில் அம்மா மட்டும்தான். இன்னும் கல்யாணம் ஆகவில்லை.

"ஆரது?"

"நான்தான்..."

எழுந்து சென்று அவர் கதவைத் திறந்து விட, "இன்னிக்கு நீங்க முந்திட்டீங்களா?" எனச் சிரித்துக் கொண்டே உள்ளே வந்தான். அவர் மறுபடியும் கதவைத் தாளிட்டு விட்டுத் திரும்பினார்.

அப்போதுதான் அவருக்கு 'அது' உணர்த்தப்பட்டது.

பல்கீஸ் அறை உள் வாசலுக்கு வந்து நின்றிருந்தாள். அவன் கடந்து செல்லும் போது இருவரும் ஒருதரம் பார்த்துக் கொள்கிறார்கள். எல்லாவற்றையும் ஈர்த்து ஒரு நொடிக்குள் எதையோ பரிமாறிக் கொள்கிற பார்வை. இருபது வருடங்களுக்கு முன்பு திருமணமான புதிதில் பாத்திமாவும் இந்த விதமாகத்தான் அவரைப் பார்த்தாள். பிரத்தியேகமாகத் தனக்கு உரியவனை மட்டுமே பெண்கள் பார்க்கிற பார்வையாக அது அவருக்குப் பதிந்து போயிருந்தது. கல்யாணமாகாத — வயதுக்கு வந்த பெண், ஒரு வயசுப் பையனை இப்படிப் பார்க்கிறாள் என்றால், என்ன அர்த்தம்?

பொட்டில் அடித்த மாதிரி இருந்தது.

கடைக்கு வந்த பின்பும் மனம் வியாபாரத்தில் ஒட்டவில்லை. மகளின் பார்வையே திரும்பத் திரும்ப ஞாபகத்திற்கு வந்தது.

"அல்லாவே... முஹையதீன் ஆண்டவரே..."

'ஜிவ்'வென்று சூடேறித் தலைக்குள்ளேயே புழுங்கி, அழுந்தி, தவிர்க்க முடியாத உந்துதலில் கோபப்பட்டு... இருபத்து நான்கு மணி நேரமும் மகளுடன் இருக்கிறவளாயிற்றே பாத்திமா! அவளுக்கும் இது தெரிந்து இருக்குமோ?

காலையில் அவள் கண் கலங்கியதைப் பார்த்ததும் அப்படி இருக்காது என்பது தெளிவாகிவிட்டது. என்னதான் இருந்தாலும் ஒரு தாய் இந்த மாதிரி சங்கதிகளுக்கு இடம் கொடுப்பாளா?

"ஒருவேளை ஒன்றுமில்லாத விஷயத்தை தானே ஊதிப் பெரிதாக்கிக் கொண்டிருக்கிறோமோ?"

எப்படியோ உடனடியாக மகளுக்குக் கல்யாணம் பண்ணி வைத்துவிட வேண்டும் என்ற வெறி வந்துவிட்டது.

தன்னால் எவ்வளவு முடியும் என்று கணக்குப் போட்டுப் பார்த்தார்.

பூர்வீக நிலமும், சில சில்லறை நகைகளும் கவனத்திற்கு வந்தன. கடன் தரும் சாத்தியமுள்ள சில முகங்களும் கூடவே ஞாபகத்திற்கு வந்தன.

"பார்க்கலாம்... இன்ஷா அல்லாஹ்..." என முணுமுணுத்துக் கொண்டார்.

மனம் சிறிது இலேசான மாதிரி இருந்தது.

"என்ன ராவுத்தரே... தாளு சிரிக்கிறீக. ஏவாரம் பலமா?"

உசேன் ராவுத்தர் நிமிர்ந்து பார்த்தார்.

பெரிய தனக்காரர் மகன் நின்றிருந்தான். கடன் தருகிற முகங்களின் முதல் வரிசையில் அவனது தகப்பனுர் உண்டு. பக்கத்தில் மனைவி, சமீபத்தில்தான் கல்யாணம். சொந்த அக்காள் மகள்தான்.

"வாங்க... வாங்க... முதலாளிய எங்க ரொம்ப நாளா காணம்...?" உசேன் ராவுத்தர் எழுந்து நின்றுர்.


"உக்காருங்க... ஏலே... ரெண்டு காப்பி வாங்கிட்டு வா..."

"போச்சுடா... உங்களை விடப் பெரிய முதலாளியா நாங்க..." கடைப் பலகையின் ஓர் ஓரத்தில் அவன் அமர, அந்தப் பெண் கூச்சத்துடன் நின்றுள்.

"அப்படியே இருக்கட்டும். எனக்குத்தான் வடக்கே நாப்பது ஏக்கர் நஞ்சையும், தெற்கே அம்பது ஏக்கர் புஞ்சையும் இருக்கு..."

அதைக் கேட்டதும் அந்தப் பெண்ணும் சிரித்தாள். கன்னத்தில் குழி விழுகிற மாதிரி சிரிப்பு.

பல்லிலின் வயதுதான் இருக்கும். அதே வட்டமுகம். நிறம். அதென்னவோ பிறந்த



வீட்டில் இல்லாத பூரிப்பும், மெருகும் புருஷனைக் கண்டதும் பெண் பிள்ளைகளுக்கு ஏற்பட்டு விடுகிறது. 'பெற்று, வளர்த்து, ஆளாக்கி, காரியம் பண்ணி வைப்பதற்கு இப்படிப் பூரித்த முகமாய்ப் பார்க்கிற சந்தோஷம் ஒன்றுதான் மிச்சம் போலும்.

'பயபுள்ளைய எப்ப இப்படிக் கண்ணுசை பார்க்கிறது?'

பல்கீஸை மனத்தில் நிறுத்திக் கொண்டு யோசித்தார்.

"உமக்கு எதுக்குச் சொத்து ராவுத்தரே... வெறும் வாயாலேயே லெச்சருவா புரட்ட மாட்டீரு?" தனக்காரர் மகன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

அவனது மனைவி இதற்கும் சிரித்தாள்.

திடீரென உசேன் ராவுத்தருக்குத் தமது அக்காள் மகனின் ஞாபகம் வந்தது. 'என்னவோ சொல்வாங்களே... கையில் வெண்ணெயை வைச்சுக்கிட்டு அலையறதுன்னு. அக்காளையே கேட்டுப் பார்த்துட்டா என்ன?'

இன்னொரு வகைக்குச் சங்கடமாகவும் இருந்தது.

அக்காள் எதிலும் பட்டுக் கொள்கிறவள் அல்ல. "ஏன் அக்காள்" என்றால், "என்ன தம்பி?" எனக் கேட்பதோடு சரி. பெரியவர்கள், 'மவுத்தான' பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தொடர்பு அற்றுப் போயிருந்தது. இந்த நாலைந்து வருடங்களில் போக்குவரத்துக் கூட அதிகம் கிடையாது. மச்சான் பெரிய வியாபாரத்தில் இருந்தார். அவரவர் ஜோலி அவரவர்கட்கு. அவர்களே ஒதுங்கிப் போகும்போது, நாம் ஏன் நெருங்க வேண்டும் என்று அவரும் அதிகம் சட்டை பண்ணுவதில்லை. ஆனால் பல்கீஸ் 'பெரியவளான' பிறகு வேறு மாதிரியான நெருக்கடிகள் வர ஆரம்பித்தன. உறவுக்காரர்கள் அவரைத்தான் குறை சொன்னார்கள். "பொண்ணைப் பெத்து வச்சுக்கிட்டு வீம்பு பண்ணினா நடக்குமா? பொழைக்கத் தெரியாதவனா இருக்கிறே...?"

சில சமயங்களில் அதன் தொடர்ச்சியாகப் பாத்திமா சொல்வதும் உண்டு. "கேட்டுப்பாருங்களேன். உண்டு இல்லைன்னு தெரிஞ்சாப் பொண்ணுக்கு நாமும் வேற இடம் பார்க்கலாமில்லையா? எதுக்கு இப்படி ரெண்டுங்கெட்டானா புள்ளையை வச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கணும்?"

பெரும்பாலும் அல்லாவின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு மௌனமாகி விடுவார். சில வேளைகளில், "பைத்தியக்காரி... அவுங்களை எதிர்பார்த்துக்கிட்டு இருக்கேன்னு நினைக்கிறியா...? பொறு... எப்பேர்ப்பட்ட மாப்பிள்ளைக்கு ஏற்பாடு செய்யறேன்னு பாரு!" என்பார்.

இதுவரைக்கும், அக்காளோ, மச்சானோ இதைப் பற்றிப் பேசியதாக அவர் கேள்விப்படவில்லை. தமக்கோ, பாத்திமாவுக்கோ உள்ள வீம்பு ஒரு பக்கம் இருக்கட்டும். வெளிப்படையாக உண்டு இல்லை என்று அக்காள்தான் சொல்லித் தொலைத்தால் என்ன கெட்டுப் போகும்?'

"வாழ்க்கையில் ஏறு முகம்தான் இருக்கணும். முடிஞ்ச வரைக்கும் ஏறிக்கிட்டே போகணும். கஷ்டகாலம் வரும்போது உயிர் போயிரணும்டா... அல்லாவே..."

தன்னைத்தான் ஏதோ சொல்வதாக நினைத்து, "என்னங்க..." என்றான் கடைச் சிப்பந்தி.

"வியாபாரத்தைப் பார்த்துக்க. வீட்டு வரைக்கும் போய்ட்டு வந்துடறேன்" எனக் கல்லாவை விட்டு இறங்கினார் உசேன் ராவுத்தர்.

சரக்... சரக்கென்று செருப்புச் சத்தம் கேட்டு நிமிர்ந்தாள் பாத்திமா. புருஷனைக் கண்டதும் ஆச்சரியமாகிவிட்டது. 'இந்த நேரத்துல எங்க வர்றார்? கடை திறக்கலியா?' எனக் கேட்க நினைத்தவள், என்ன சொல்வாரோ என்று பயந்து பேசாமலிருந்தாள்.

இன்றைக்குப் பார்த்து இன்னும் உலை கூட வைக்கவில்லை. பிள்ளைகளோடு கவலைப்படவே பொழுது சரியாகிவிட்டது. திடீரென, "சோற்றைப் போடு" என்று சொல்லிவிட்டால், என்ன பண்ணுவது?

"ஏய்... இங்க வா..." அவளைத்தான் அழைத்தார்.

முக்காட்டை இழுத்து விட்டுக் கொண்டு, "சமைக்கணும்..." எனத் தயக்கத்துடன் பதில் சொன்னாள் பாத்திமா.

"முக்கியமான விஷயம்... வா..."

அவள் கைகழுவிக் கொண்டுவர, முன் அறையில் பனியனோடு உட்கார்ந்து இருந்தார். அவள் வந்ததை அறியாத பாவனை.

"கூப்பிட்டீங்களே..." என்றாள் பாத்திமா.

திடுக்கிட்டவர் போல விழித்தார். "பெரிசுக்குக் காரியம் பண்ணிரலாம்னு நெனைக்கிறேன். என்ன யோசனை?"

எதிர்பாராதது இது. அவளுக்கு எதுவும் புரியவில்லை. காலையில் காரணமற்றுக் கோபிப்பதும், மதியம் நிக்காஹ் பற்றிப் பேசுவதும்.... ஒருவேளை இரண்டுக்கும் தொடர்பு உண்டோ?

"யோசனை என்ன...? செய்ய வேண்டியதுதான். மாப்பிள்ளை?"

"அதான் ஒன்னைக் கேக்கறேன். இப்ப உள்ள நிலைமையில் பெரிய இடமெல்லாம் நமக்குத் தாங்காது. உன் உறவில் எவனாச்சும் இருக்கானா?"

"இருந்தாத்தான் தேவலையே... உங்களுக்குத் தெரியாதா?"

"ம்ஹ்ம்..." என்று பெருமூச்சு விட்டார்.

அவளுக்கு என்னவோ, அவர் ஏதோ ஒரு புள்ளி வைத்து அதையே சுற்றி வருவதாகத் தோன்றியது. ஒவ்வொரு சுற்றுக்கும் தரிசனமாகும் ஒவ்வொரு முகம். இதில் எது நிஜம் — பொய்? என்னதான் இது?

'அக்காவையே கேக்கலாம்னு இருக்கேன். என்னதான் சொல்றாங்கன்னு பார்க்க

ஜோக் எழுதுங்கள்! பரிசு ரூ. 200/-



அரசியல்துறைக்கு அடுத்தப்படியாக அதிகமான ஜோக்ஸ் எழுதப்படுவது சினிமாத்துறை பற்றித்தானே! எங்கே, கீழே வெற்றிடத்தில் ஒரிஜினில் சினிமா ஜோக் ஒன்று எழுதுங்கள் பார்க்கலாம்! விலாசத்தைப் பூர்த்தி செய்து இந்த அரைப் பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமாகும் வெடிகளுக்கு ரூ. 200 சன்மானம் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும். உறையின்மேல் ''சினிமா ஜோக்'' என்று குறிப்பிடவும்.

முடிவு தேதி: 26, ஆகஸ்டு 1987.

என் பெயர்: ....

விலாசம்: ....

....

லாமே... ஏன்?'' அவனது முகத்தைப் பார்க்காமல் சொன்னார்.

பாத்திமா இப்போது நிதானத்திற்கு வந்து விட்டாள்.

அவரையே கூர்ந்து பார்த்து, ''உண்மையைச் சொல்லுங்க... திடீர்னு ஏன் இந்த முடிவு?'' என்று கேட்டாள்.

''என்னிக்கு இருந்தாலும் செய்ய வேண்டிய விஷயம்தானே? வீணா ஏன் இழுத்துக்கிட்டே போகணும்?''

அவளுக்கு என்னவோ அது நிஜம் இல்லை என்றுதான் தோன்றியது. கேட்கவும் பிடிக்கவில்லை.

பார்த்துக் கொள்ளச் சங்கடப்பட்டவர்கள் போல, இருவரும் வெவ்வேறு பக்கம் திரும்பிக் கொண்டார்கள். வெவ்வேறு யோசனை செய்தார்கள்.

ஜும் ஆ தொழுகைக்கான பாங்கு ஒலி கேட்டது.

தன்னை விடுவித்துக் கொள்வதைப் போல, ''சரி... அப்புறம் பேசலாம்'' என் எழுந்தார் உசேன் ராவுத்தர். ''குழந்தைகளை ஜாக்கிரதையாகப் பார்த்துக்க... தொழுதுட்டு வந்துடறேன்.''

உடை மாற்றிக் கொண்டு புறப்படுகிற வரைக்கும் பாத்திமா அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். வாசல் வரைக்கும் போனவர் திரும்பி வந்து, ''இனிமேல் வெளிக் கதவைத் தாழ்போட வேணும். எதுக்கு ஒவ்வொருத்தனுக்கும் திறந்து விட்டுக்கிட்டு இருக்கணும்?'' என்றார்.

ஒருபோதும் இல்லாமல் அவர் இப்படிச் சொன்னதில் ஏதோ விசேஷம் இருப்பதைப் போலிருந்தது அவளுக்கு.

பல்கீஸ் உள் வாசலில் நின்று வீதியை எட்டிப் பார்த்துவிட்டு, ''போய்ட்டாரா?'' என்று கேட்டாள்.

நிம்மதியைப் பிரதிபலிக்கிற தொனி. தான் இவளுக்கு என்ன சொல்ல வேண்டும்?

ஜாக்கிரதை என்று அவர் சொன்னது ஞாபகத்திற்கு வர, ''நீ ஏன் இங்கே நிக்கிறே... உள்ளே போ'' என்றாள்.

பல்கீஸின் முகம் இருண்டது.

திடுக்கிட்ட மாதிரி அம்மாவை ஒருகணம் பார்த்துவிட்டு, 'விடுவிடு'வென்று உள்ளே நகர்ந்தாள்.

சாதாரண வார்த்தைக்கு மகள் ஏன் இப்படிக் கோணுகிறாள்?

எல்லாமே புதியதாகத்தான் இருந்தது.

புருஷனின் சொல்லையும், மகளின் திடுக்கிடுதலையும் திரும்பவும் யோசித்துப் பார்த்த பாத்திமாவுக்கு, 'பளிச்' சென்று ஏதோ புரிந்த மாதிரி இருந்தது... ''அடியே... அதுதானா விஷயம்?'' எனத் திகிலடைந்து, எல்லாவற்றையும் ஞாபகப்படுத்திக் கொண்டபடி, மறுபடியும் மகளின் முகத்தைப் பார்த்தாள் அவள்.

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் 7
"சமுத்திர குமாரி"

அன்று பகற்பொழுது வந்தியத் தேவனுக்கு எளிதில் போய்விட்டது. பாதி நேரத்துக்கு மேல் தூங்கிக் கழித்தான். விழித்திருந்த நேரமெல்லாம் பூங்குழலியின் விசித்திரமான சுபாவத்தைப் பற்றி எண்ணுவதில் சென்றது. என்ன அதிசயமான பெண்! எவ்வளவு இனிய சரளமான பெயர்? ஆனால் சுபாவம் எவ்வளவு கடுமையானது? 'கடுமை' மட்டுந் தானா? அதில் இனிமையும் கலந்துதானிருந்தது! சிறுத்தையை அடித்துக் கொன்ற காரியத்தைப் பற்றி எவ்வளவு சர்வ சாதாரணமாகக் கூறினாள்? எவ்வளவு அறிவுக் கூர்மை? எவ்வளவு முன் யோசனை? — இவ்வளவுடன் சிலசமயம் உன்மத்தம் பிடித்தவள் மாதிரி நடந்து கொள்கிறாளே, அது ஏன்? இந்தப் பெண்ணின் வாழ்க்கையில் ஏதோ ஒரு கசப்பான சம்பவம் நடந்திருக்க வேண்டும்! கசப்பான சம்பவமோ, அல்லது இனிப்பான சம்பவந்தானோ? இரண்டினாலும் இப்படி ஒரு பெண் உன்மத்தம் பிடித்தவள் ஆகியிருக்கக் கூடும்! அல்லது ஒன்றுமே காரணமில்லாமல், பிறவியிலேயே இத்தகைய இயற்கையுடன் பிறந்தவளோ? இவளுடைய பெற்றோர்களின் இயற்கையில் விசேஷம் ஒன்றையும் காணவில்லையே? இனிய, சாந்த சுபாவம் படைத்தவர்களாயிருக்கிறார்களே....! குணம் எப்படியாவது இருக்கட்டும்! நம்மிடம் இவளுக்கு இவ்வளவு சிரத்தை ஏற்பட்டதன் காரணம் என்ன? பழுவூர் ஆட்களிடம் நாம் பிடிபடாமல் தப்புவிப்பதற்கு இவ்வளவு பிரயத்தனம் செய்திருக்கிறாளே? இலங்கைக்குப் படகு வலித்துக் கொண்டு வருவதாகவும் சொல்லியிருக்கிறாளே? இதிலெல்லாம் ஏதாவது ஏமாற்றம் இருக்குமோ....? ஒருநாளும் இல்லை. ஆனாலும் இவள் மனம் மாறியதன் காரணம் என்ன? நம்மிடம் இவள் எந்தவிதப் பிரதி உபகாரத்தை எதிர்பார்க்கிறாள்? பின்னால் கூறுவதாகக் கூறியிருக்கிறாளே! அது என்னவாயிருக்கும்....?

இவ்வாறு வந்தியத்தேவன் சிந்தனை செய்து கொண்டிருந்த சமயங்

களில், பூங்குழலி கூறியிருந்தது போலவே, அவனைச் சுற்றி நாலா புறங்களிலும் அடிக்கடி அமளிதுமளிப் பட்டது. குதிரைகளின் ஓட்டம், மனிதர்களின் அட்டகாசம், சிறிய வன ஜந்துக்களின் பயம் நிறைந்த கூச்சல், பறவைகள் கிறீச்சிடுதல் — இவ்வளவும் சேர்ந்து சில சமயம் ஒரே அமர்க்களமாயிருந்தது. அடுத்தாற்போல் அமைதி குடிகொண்டு நிசப்தமாயிருந்தது. அமர்க்களப்பட்டதெல்லாம் தன்னைத் தேடிப் பிடிப்பதற்காகத்தான் என்று வந்தியத்தேவன் உணர்ந்தான். வைத்தியரின் மகன் செய்த துரோகமும் அவனுடைய மனத்தில் அடிக்கடி வந்து கொண்டிருந்தது. நிர்மூடன்! பூங்குழலியிடம் அதற்குள் மையல் கொண்டு விட்டதாக அவனுக்கு எண்ணம் போலும்! சிறிய குட்டையில் உள்ள தண்ணீர் வடவாமுகாக்கினியின் மீது காதல் கொண்டதுபோலத்தான்! பெண் சிங்கத்தை ஒரு சுண்டெலி கலியாணம் செய்து கொள்ள எண்ணிய கதைதான்! ஆனாலும் அவனுடைய அறிவீனத்தை இந்தப் பெண் எப்படிப் பயன்படுத்திக் கொண்டு விட்டாள்! அவனுடைய மனத்தில் எவ்விதம் பொறாமைக் கனலை மூட்டி விட்டாள்?...... அரை நாழிகை நேரத்தில் அவனைத் துரோகியாக்கி விட்டாளே! பெண்மையின் சக்தி அபாரமானதுதான்!

வந்தியத்தேவா! ஒன்று மட்டும் நீ ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்! நீ உன்னை வெகு கெட்டிக்காரன் என்று எண்ணியிருந்தாய்! தந்திர மந்திர சாமர்த்தியங்களில் உனக்கு இணை யாரும் இல்லை என்று இறுமாந்திருந்தாய்! ஆனால் இந்த நாகரிகமறியாத காட்டுமிராண்டிப் பெண் உன்னைத் தோற்கடித்து விட்டாள்! கடலில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்த உன்னை இந்த மறைந்த மண்டபத்தில் கொண்டு சேர்ப்பதற்கு அவள் கையாண்ட யுக்தியை என்னவென்று சொல்வது? அப்படி அவள் உன் அரைச் சுற்றுச் சுருளை எடுத்துக் கொண்டு ஓடியிராவிட்டால், இத்தனை நேரம் என்ன ஆகியிருக்கும்? பழுவூர் ஆட்களிடம் நீ சிக்கியிருப்பாய்! காரியம் அடியோடு கெட்டுப் போயிருக்கும்!...... ஆம்; இனி எப்போதும் இம்மாதிரி அஜாக்கிரதையாக இருந்துவிடக் கூடாது.

மேற்குக் கடலில் சூரியன் அஸ்தமித்தது. கோடிக்கரையில் இது ஓர் அற்புதமான காட்சி. அதுவரை தெற்கு நோக்கி வரும் கடற்கரை அந்த முனையில் நேர்கோணமாக மேற்கு நோக்கித் திரும்பிச் செல்கிறது. ஆதலின் கோடிக்கரையில் மேடான இடத்திலிருந்து பார்த்தால், கிழக்கு — மேற்கு — தெற்கு ஆகிய மூன்று திசைகளிலும் கடல் பரந்திருக்கக் காணலாம். சிற்சில மாதங்களில் சூரிய சந்திரர்கள் கிழக்குக் கடலில் ஜோதி மயமாக உதயமாவதையும் பார்க்கலாம்; மேற்கே கடலைத் தங்கமயமாகச் செய்து கொண்டு முழுகி மறைவதையும் காணலாம். வந்தியத்தேவனுக்கு, மண்டபத்தை மூடியிருந்த மணல் திட்டின் மேல் ஏறிச் சூரியன் கடலில் மறையும் காட்சியைப் பார்க்க ஆவல் உண்டாயிற்று. அதைப் பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டான்.

நாலாபுறமும் அந்தகாரம் சூழ்ந்து வந்தது. மறைந்த மண்டபத்தில் முன்னமே குடிகொண்டிருந்த இருள் பன்மடங்கு கரியதாயிற்று. வந்தியத்தேவனால் அங்கே மேலும் இருக்க முடியவில்லை. வெளியேறி வந்தான். மண்டபத்தை மூடிய மணல் திட்டின் மீது நின்றான். வெகு தூரத்தில் கலங்கரை விளக்கின் ஒளி தெரிந்தது. வானத்தில் வைரமணிகள் சுடர்விட்டு ஜொலித்தன. காட்டில் பல விசித்திரமான ஒலிகள் உண்டாயின. பகலில் வனப்பிரதேசத்தில் கேட்கும் ஒலிகளுக்கும் இரவில் கேட்கும் ஒலிகளுக்கும் மிக்க வேற்றுமை இருந்தது. இரவில் கேட்கும் ஒலிகள் மர்மம் நிறைந்து உள்ளத்தில் பீதியையும் உடலிலே

சிலிர்ப்பையும் உண்டாக்கின. பகலில் எதிரே புலியைப் பார்த்தாலும் மனம் பதறுவதில்லை; பயமும் உண்டாவதில்லை. இரவில் ஒரு புதரில் சின்னஞ்சிறு எலி ஓடினாலும் உள்ளம் திடுக்கிடுகிறது!

இதோ குயிலின் குரல். 'குக்கூ!' 'குக்கூ!' அந்தக் குரல் தேவகானத்தைப் போல் வந்தியத்தேவன் காதில் ஒலித்தது. குரல் வந்த திக்கை நோக்கிச் சென்றான். பூங்குழலி அங்கு நின்றாள். 'சத்தம் செய்யாமல் என்னுடன் வா!' என்று சமிக்ஞை செய்தாள். அங்கிருந்து கடற்கரை வெகு சமீபம் என்று தெரிய வந்தது.

கடற்கரையில் படகு ஆயத்தமாயிருந்தது. அதில் பாய்மரமும் பாயும் அதைக் கட்டும் கயிறும் சுருட்டி வைக்கப்பட்டிருந்தன. படகிலிருந்து இரண்டு கழிகள் நீட்டிக் கொண்டிருந்தன. அந்தக் கழிகளின் முனையில் ஒரு பெரிய மரக்கட்டை பொருத்திக் கட்டப்பட்டிருந்தது.

படகைக் கடலில் இறக்குவதற்கு வந்தியத்தேவன் உதவி செய்யப் போனான். 'நீ சும்மா இரு!' என்று பூங்குழலி சமிக்ஞை செய்தாள். படகை லாகவமாய்த் தள்ளிக் கடலில் இறக்கினாள். சிறிதும் சத்தமின்றிக் கடலில் அப்படகு இறங்கியது.

வந்தியத்தேவன் படகில் ஏறிக் கொள்ள யத்தனித்தான். "உஷ்! சற்றுப் பொறு! கொஞ்ச தூரம் போன பிறகு நீ ஏறிக் கொள்ளலாம்!" என்று பூங்குழலி மெல்லிய குரலில் கூறிவிட்டுப் படகைப் பிடித்து இழுத்துக் கொண்டே போனாள்.

வந்தியத்தேவன் தானும் உதவி செய்ய எண்ணிப் படகைத் தள்ளினான். படகு நின்றுவிட்டது. "நீ சும்மா வந்தால் போதும்!" என்றாள் பூங்குழலி. கரை ஓரத்தில் அலை மோதும் இடத்தைத் தாண்டிய பிறகு, "இனி மேல் படகில் ஏறிக் கொள்ளலாம்!" என்று சொல்லி, அவள் முதலில் ஏறிக் கொண்டாள். வந்தியத்தேவனும் தாவி ஏறினான். அப்போது படகு அதிகமாக ஆடியது. அந்த ஆட்டத்தில் வந்தியத்தேவன் கடலில் விழுந்து விடுவான் போலத் தோன்றியது. சமாளித்துக் கொண்டு உட்கார்ந்தான். ஆயினும் அவனுடைய நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

"இனிமேல் ஏதாவது பேசலாம் அல்லவா?" என்று கேட்டான்.

"நன்றாகப் பேசலாம். உனக்கு நடுக்கம் நீங்கியிருந்தால் பேசலாம்!" என்றாள் பூங்குழலி.

"நடுக்கமா? யாருக்கு நடுக்கம்? அதெல்லாம் ஒன்றுமில்லை."

"ஒன்றுமில்லா விட்டால் சரி!"

"பாய்மரம் கட்ட வேண்டாமா?"

"பாய்மரம் கட்டினால் கரையில் உள்ளவர்கள் ஒருவேளை நம்மைப் பார்த்து விடுவார்கள். ஓடி வந்து பிடித்துக் கொள்வார்கள்."

"இனி அவர்கள் வந்தால் ஒரு கை பார்த்து விடுகிறேன். நீ கொஞ்சமும் பயப்பட வேண்டாம்!" என்று வந்தியத்தேவன் தன் வீரப் பிரதாபத்தைச் சொல்லத் தொடங்கினான்.

"இப்போது எதிர்க்காற்று அடிக்கிறது. பாய்மரம் விரித்தால் படகை மறுபடி கரையிலே கொண்டு போய் மோதும். நடுநிசிக்கு மேல் காற்றுத் திரும்பக் கூடும். அப்போது பாய்மரம் விரித்தால் பயன்படும்!" என்று பூங்குழலி கூறினாள்.

"ஓ! உனக்கு இதெல்லாம் நன்றாய்த் தெரிந்திருக்கிறது. அதனாலேதான் உன்னை அழைத்துப் போகும்படி உன் தந்தை சொன்னார்."

"என் தந்தையா? யாரைச் சொல்லுகிறாய்?"

"உன் தகப்பனாரைத்தான் சொல்லுகிறேன். கலங்கரை விளக்கின் காவலர் தியாக விடங்கக் கரையரைச் சொல்லுகிறேன்."

"கரையில் இருக்கும் போதுதான் அவர் என்னுடைய தந்தை. கடலில் இறங்கி விட்டால்..."

"தகப்பனார் கூட மாறிப் போய்விடுவாரா, என்ன?"

"ஆமாம்; இங்கே சமுத்திரராஜன் தான் என் தகப்பனார். என்னுடைய இன்னொரு பெயர் **சமுத்திர குமாரி.**

உனக்கு யாரும் சொல்லவில்லையா?"

"சொல்லவில்லை! அது என்ன விசித்திரமான பெயர்?"

"சக்கரவர்த்தியின் இளைய குமாரரைப் **'பொன்னியின் செல்வன்'** என்று சிலர் சொல்லுகிறார்கள் அல்லவா? அதுபோலத்தான்!"

இதைக் கேட்டதும் வந்தியத்தேவன் தனது அரைச்சுற்றுச் சுருளைத் தடவிப் பார்த்துக் கொண்டான்.

அதைக் கவனித்த பூங்குழலி, "பத்திரமாக இருக்கிறதல்லவா?" என்று கேட்டாள்.

"எனதைப் பற்றிக் கேட்கிறாய்?"

"உன் அரைச் சுருளில் வைத்திருக்கும் பொருளைப் பற்றித்தான்."

வந்தியத்தேவனுடைய மனத்தில் 'சொரேல்' என்றது. ஒரு சிறிய சந்தேகம் ஜனித்தது. அவனுடன் பேசிக் கொண்டே பூங்குழலி துடுப்பை வலித்துக் கொண்டிருந்தாள். படகுபோய்க்கொண்டிருந்தது.

"இலங்கைத்தீவுக்குநாம்எப்போது போய்ச் சேரலாம்?" என்று கேட்டான் வந்தியத்தேவன்.

"இரண்டு பேராகத் துடுப்பு வலித்தால் பொழுது விடியும் சமயம் போய்ச் சேரலாம்; — காற்று நமக்கு உதவியாக இருந்தால்!"

"நானும் துடுப்பு வலிக்கிறேன்.





உன்னைத் தனியாக விட்டுவிடுவேனா?"

வந்தியத்தேவன் தன் அருகிலிருந்த துடுப்பைப் பிடித்து வலித்தான். ஆ! படகு வலிப்பது இலேசான வேலை அன்று. மிகவும் கடினமான வேலை. படகு விர் என்று சுழன்று அடியோடு நின்று விட்டது.

''இது என்ன? நீ துடுப்பை வலித்தால் படகு போகிறது; நான் தொட்டவுடனே நின்று விட்டதே!''

''நான் சமுத்திரகுமாரியல்லவா? அதனாலேதான்! நீ சும்மா இருந்தால் போதும்! உன்னை எப்படியாவது இலங்கையில் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறேன். சரிதானே?''

வந்தியத்தேவன் சிறிது வெட்கமுற்றான். சற்று நேரம் சும்மா இருந்தான். சுற்றுமுற்றும் பார்த்த போது, படகிலிருந்து நீட்டிக் கொண்





டிருந்த சுழிகளும் கட்டையும் அவன் கண்ணில் பட்டன.

"இந்தக் கட்டை என்னத்திற்கு?" என்று கேட்டான்.

"படகு அதிகம் ஆடாமல் இருப்பதற்காக."

"இதைக் காட்டிலும் படகு அதிகம் ஆடுமா என்ன? இப்போதேதான் வேண்டிய ஆட்டம் ஆடுகிறதே? எனக்குத் தலை சுற்றும் போலிருக்கிறது."

"இது ஒரு ஆட்டமா? ஐப்பசி—கார்த்திகையில் வாடைக்காற்று அடிக்கும் போதல்லவா பார்க்கவேண்டும்?"

கரையிலிருந்து பார்த்ததற்கு கடல் அமைதியாகத் தகடு போல் இருப்பதாகத் தோன்றியது. ஆனால் உண்மையில் அவ்விதம் இல்லையென்பதை வந்தியத்தேவன் கண்டான். நுரையில்லாத அலைகள் எழும்பி விழுந்து கொண்டுதானிருந்தன. அவை அப்படகைத் தொட்டில் ஆட்டுவது போல் ஆட்டிக் கொண்டிருந்தன.

"பெருங்காற்று அடிக்கும் போது இந்தக் கட்டை என்ன ஆகும்?"

"எவ்வளவு பெரிய காற்று என்பதைப் பொறுத்தது. சாதாரணமாய்ப் பெருங்காற்று அடித்தாலும் இந்தக் கட்டை, படகைக் கவிழாமல் நிறுத்தி வைக்கும். ஒருவேளை சுழிக் காற்று அடித்துப் படகு கவிழ்ந்து விட்டால் இந்தக் கட்டையைப் படகிலிருந்து அவிழ்த்து விட்டு விடலாம். அதைப் பிடித்துக் கொண்டு உயிர் தப்புவதற்குப் பார்க்கலாம்."

"ஐயோ! காற்றில் படகு கவிழ்ந்து விடுமா, என்ன?"

"சுழிக் காற்று அடித்தால் பெரிய பெரிய மரக்கலங்கள் எல்லாம் சுக்கு நூறாகிவிடும். இந்தச் சிறிய படகு எம்மாத்திரம்?"

"சுழிக்காற்று என்றால் என்ன?"

"இதுகூடத் தெரியாதா? ஒரு பக்கமிருந்து அடிக்கும் காற்றும் இன்னொரு பக்கத்திலிருந்து அடிக்கும் காற்றும் மோதிக் கொண்டால் சுழிக் காற்று ஏற்படும். இங்கே தை மாசி மாதங்களில் 'கொண்டல் காற்று' அடிக்கும். அப்போது அபாயமே இல்லை. சுலபமாகக் கோடிக் கரைக்கும் இலங்கைக்கும் போய் வரலாம். இரவுக்கிரவே போய்விட்டுத் திரும்பலாம். வைகாசியிலிருந்து 'சோழகக் காற்று' அடிக்கும். சோழகக் காற்றில் இங்கிருந்து இலங்கை போவது கொஞ்சம் சிரமம். இப்போது சோழகக் காற்றுக்கும் வாடைக் காற்றுக்கும் இடையில் உள்ள காலம். கடலில் சில சமயம் காற்றும் காற்றும் மோதிக் கொள்ளும். மத்தினால் தயிர் கடைவது போல் காற்று கடலைக் கடையும். மலை போன்ற அலைகள் எழும்பி விழும். கடலில் பிரம்மாண்டமான பள்ளங்கள் தென்படும். அப்பள்ளங்களில் தண்ணீர் கரகரவென்று சுழலும். அந்தச் சுழலில் படகு அகப்பட்டுக் கொண்டால் அரோகரா தான்!"

வந்தியத்தேவனுக்குத் திடீரென்று மனத்தில் ஒரு திகில் உண்டாயிற்று. அத்துடன் ஒரு சந்தேகமும் உதித்தது.

"ஐயோ! நான் வரவில்லை! என்னைக் கரையிலே கொண்டு போய் விட்டுவிடு!" என்று கத்தினான்.

"என்ன உளறுகிறாய்? பேசாமலிரு! பயமாயிருந்தால் கண்ணை மூடிக் கொள். இல்லாவிட்டால் படுத்துத் தூங்கு!"

வந்தியத்தேவனுடைய சந்தேகம் இப்பொழுது உறுதிப்பட்டது.

"நீ பெரிய மோசக்காரி! என்னைக் கடலில் மூழ்க அடிப்பதற்காக அழைத்துப் போகிறாய். நான் தூங்கினால் உன் காரியம் மிகவும் சுலபமாகும் என்று பார்க்கிறாய்!"

"இது என்ன பைத்தியம்?"

"எனக்கு ஒன்றும் பைத்தியம் இல்லை! படகைத் திருப்புகிறாயா, இல்லையா? திருப்பாவிட்டால் கடலில் குதித்து விடுவேன்!"

"தாராளமாய்க் குதி! ஆனால் குதிப்பதற்கு முன்னால் **பொன்னியின் செல்**

வனுக்கு நீ எடுத்துப் போகும் ஓலையை எடுத்து என்னிடம் கொடுத்துவிடு!''

''ஓ! அந்த ஓலையைப் பற்றி உனக்கு எப்படித் தெரிந்தது?''

''உன் இடுப்பில் சுற்றியிருக்கும் சுருளை அவிழ்த்துப் பார்த்ததில் தெரிந்தது. நீ யார், எதற்காக இலங்கை போகிறாய் என்று தெரிந்து கொள்ளாமல் உனக்குப் படகு தள்ளச் சம்மதித்திருப்பேனா? காலையில் மரத்தின் மேல் உட்கார்ந்து 'உன் அரைச் சுருளை அவிழ்த்து ஓலையைப் பார்த்தேன்......''

''மோசக்காரி! உன்னை நம்பி வந்து விட்டேனே? படகைத் திருப்புகிறாயா, மாட்டாயா?''

வந்தியத்தேவனுடைய திகிலும் வெறியும் பன்மடங்கு ஆயின. ''படகைத் திருப்பு! படகைத் திருப்பு!'' என்று அலறினான்.

''நான் மட்டும் இளையபிராட்டி குந்தவையாக இருந்திருந்தால் இவ்வளவு முக்கியமான ஓலையை உன்னைப் போன்ற சஞ்சல புத்திக்காரனிடம் கொடுத்து அனுப்பியிருக்க மாட்டேன்!'' என்றாள் பூங்குழலி.

''ஓகோ! ஓலை கொடுத்தது யார் என்று கூட உனக்குத் தெரிந்திருக்கிறதே! நீ வஞ்சகி என்பதில் சந்தேகமில்லை. படகைத் திருப்புகிறாயா? கடலில் குதிக்கட்டுமா?''

''குதி! தாராளமாய்க் குதி!'' என்றாள் பூங்குழலி.

வெறிகொண்ட வந்தியத்தேவன் தொப்பென்று கடலில் குதித்தான். கரையோரத்தில் இருந்ததுபோல் தண்ணீர் கொஞ்சமாக இருக்குமென்று எண்ணிக் குதித்தான். அதற்குள்ளே படகுநீச்சுநிலை கொள்ளாத ஆழமான கடலுக்கு வந்துவிட்டது என்பதை அவன் அறியவில்லை. கடலில் குதித்த பிறகுதான் அதை அறிந்தான். அறிந்த பிறகு அலறித் தத்தளித்தான்!

அதற்குள் வந்தியத்தேவன் ஓரளவு நீந்தத் தெரிந்து கொண்டிருந்தான். ஆனால் தண்ணீரைக்கண்டால்அவனுக்கு இயற்கையாக

அருள்வாக்கு



கஷ்டங்களைச் சொல்லிக் கொள்ளாமல் யாராலும் இருக்க முடியாது. வெளிப்படச் சொன்னாலே அதில் ஒரு நிம்மதி பிறக்கிறது. கண்ட இடத்தில் போய்ச் சொல்லிக் கொள்ளாமல் — கேட்பவர்கள் எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்றில்லாமல் — பகவானிடம் கஷ்டத்தைச் சொல்லிக் கொள்ளலாம். 'அவன் கிருபா சமுத்திரமாயிருந்து நாம் கேட்காமலே கஷ்ட நிவிருத்தி தந்தாலும் சரி, அல்லது பலனைத் தரும் பலதாதா என்கிற முறையில் நம் பாவத்துக்குத் தண்டித்தே தீருவான் என்றாலும் சரி, அல்லது கஷ்டத்தை மாற்றாமலே அதைத் தாங்கிக் கொள்ளும் பக்குவத்தை நமக்குத் தந்தாலும் சரி, அவனிடம் முறையிட்டுக் கொள்வதே ஓரளவு சாந்தி.

ஆனால் வாஸ்தவத்தில் நான் ஈசுவர பக்தி என்று சொல்வது நம் கஷ்ட நிவிருத்திக்காகப் பிரார்த்திப்பதை அல்ல. அல்லது நமக்கு சந்தோஷ வாழ்வைத் தந்தவனுக்கு நன்றியாகப் பக்தி செலுத்த வேண்டும் என்றும் சொல்லவில்லை. நான் அப்படிச் சொன்னால், 'மரம் வைத்தவன் ஜலம் ஊற்றத்தான் வேண்டும். நம்மைப் படைத்தவன் நமக்கு நல்வாழ்வு தரத்தான் வேண்டும்! அது அவன் கடமை. இதற்கு என்ன நன்றி!' என்று யாராவது ஆட்சேபிக்கலாம்.

ஆகவே, இதற்கெல்லாம் நான் பக்தியைச் சொல்லவில்லை. பின் எதற்குச் சொல்கிறேனென்றால் இப்போது கஷ்டம், சந்தோஷம் என்ற இரண்டு வார்த்தைகளைச் சொன்னேனே, இந்த இரண்டுமே மனசை ஆட்டுபவைதாம். மனம் ஆடாமல் இருப்பதுதான் உண்மை ஆனந்தம்.

நாம் கஷ்டநிவிருத்திக்காக ஸ்வாமியிடம் போனாலும் சரி, அல்லது செளக்கியமாக இருக்கிறோம் என்று நன்றி காட்டப் போனாலும் சரி, அவரை நினைக்கிற பழக்கம் வளர்க்க வளர்க்கத் தானாகவே இந்தக் கஷ்டம்—செளக்கியம் ஆகியவற்றைப் பற்றியே நினைப்பதிலிருந்து நம் மனம் விடுபடும். அவர் எப்படி நடத்துகிறாரோ, அப்படி நடத்தி வைக்கட்டும் என்று பாரத்தை அவரிடமே தள்ளிவிட்டு விச்ராந்தியாக இருக்கிற மனோபாவம் உண்டாகும். ஏதோ ஓர் ஆனந்தமும் சாந்தமும் மனசில் படரத் தொடங்கும். இதுவே நம்மை அமர நிலையில் சேர்ப்பது; ஓயாமல் குறையுள்ள நாம் மாறாத நிறைவாக நிறைவதற்கு வழி செய்வது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

ஏற்பட்ட பயம் கைகால்களின் தெம்பைக் குறைத்தது. ஆற்றிலே குளத்திலே என்றால், பக்கத்திலே உள்ள கரையைப் பார்த்துத் தைரியம் கொள்ள இடமிருந்தது. இதுவோ மா கடல். நாலாபுறமும் எங்கே பார்த்தாலும் ஒரே தண்ணீர் மயம். கடலில் அங்கே இலேசான அலைதான். எனினும் ஒரு சமயம் அவனை மேலே கொண்டு வந்தது. இன்னொரு சமயம் பள்ளத்தில் தள்ளியது. மேலே வந்த போது படகு கண்ணுக்குத் தெரிந்தது. 'ஓ' என்று கத்தினான். பள்ளத்தில் விழுந்தபோது படகும் கண்ணுக்குத் தெரியவில்லை. சுற்றிலும் இருண்ட தண்ணீரின் சுவர் மட்டுமே தெரிந்தது. 'ஓ' என்று அலறும் சக்தியைக் கூட அவனுடைய நா இழந்து விட்டது. மூன்றாவது முறை கடல் அலை அவனை மேலே கொண்டு வந்த போது படகு முன்னை விடத் தூரத்துக்குப் போய் விட்டதாகத் தோன்றியது. 'அவ்வளவு தான். கடலில் மூழ்கிச் சாகப் போகிறோம்' என்ற எண்ணம் அவன் மனத்தில் உண்டாகிவிட்டது! நாம் முழுகுவது மட்டுமில்லை; நம்முடைய அரைக் கச்சும் அதில் உள்ள ஓலையும் முழுகப் போகின்றன! குந்தவை தேவியின் முகம் அவன் மனக்கண்ணின் முன்னால் வந்தது. "இப்படிச் செய்து விட்டாயே?" என்று கேட்பது போல இருந்தது. ஆகா! என்னவெல்லாம் கனவு கண்டோம்? என்னவெல்லாம் மனக்கோட்டை கட்டினோம்? வாணர் குலத்துப் பழைய அரசு திரும்ப வந்து, இரத்தின கசிதமான சிங்காதனத்தில் பக்கத்தில் இளையபிராட்டியுடன் வீற்றிருக்கப் போவதாக எண்ணினோமே? அவ்வளவும் பாழாகிவிட்டது! இந்தப் பாவிப்பெண் கெடுத்து விட்டாள்! இவள் ஒரு பெண் அல்ல; பெண் உருக்கொண்ட பேய். பழுவேட்டரையர்களைச் சேர்ந்தவள். இல்லை, அந்த மோகினிப் பிசாசு நந்தினியைச் சேர்ந்தவள். நாம் கடலில் முழுகிச் செத்தாலும் பாதகமில்லை. இந்தப் பெண் பேய் மட்டும் இப்போது நம்மிடம் சிக்கினால் இவள் கழுத்தை நெரித்து... சீச்சீ! இது என்ன எண்ணம்! சாகும் போது நல்ல விஷயமாக எண்ணிக் கொள்வோம்! கடவுளை நினைப்போம்! உமாபதி! பரமேசுவரா! பழனி ஆண்டவா! பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமானே!... குந்தவை தேவி! மன்னிக்கவும். ஒப்புக்கொண்ட காரியத்தை முடிக்காமல் போகிறேன்... அதோ படகு தெரிகிறது! அந்தப் பெண் மட்டும் இப்போது கையில் சிக்கினால்!......

வந்தியத்தேவன் கடலில் குதித்துச் சிறிது நேரம் வரையில் பூங்குழலி அலட்சியமாகவே இருந்தாள். தட்டுத் தடுமாறி நீந்தி வந்து படகில் தொத்திக் கொள்வான் என்று நினைத்தாள். கொஞ்சம் திண்டாடட்டும் என்ற எண்ணத்துடனே படகுக்கும் அவனுக்கும் இருந்த தூரத்தை அதிகமாக்கினாள். விரைவில் அவள் எண்ணியது தவறு என்று தெரிந்து விட்டது. இவனுக்கு நன்றாக நீந்தத் தெரியவில்லை; அதோடு பீதியும் அடைந்து விட்டான். 'ஆ!' 'ஓ!' என்று அவன் அலறுவது விளையாட்டுக்கு அன்று; உண்மையான பயத்தினாலேதான். இன்னும் சற்றுப் போனால் உப்புத்தண்ணீரைக் குடிக்கத் தொடங்கிவிடுவான்; முழுகியும் போய் விடுவான். பிறகு அவனுடைய உடலைக் கண்டுபிடிக்கவும் முடியாது. சேச்சே! தவறு அல்லவா செய்து விட்டோம்? விளையாட்டு விபரீதமாக முடிந்து விடும் போலிருக்கிறதே! அக்கரை போகும் வரையில் நாம் வாயை மூடிக் கொண்டிருந்திருக்க வேண்டும். அவனுடைய இரகசியம் நமக்குத் தெரியும் என்று காட்டிக் கொண்டிருக்கக் கூடாது. அதற்குள்ளே அவசரப்பட்டு விட்டோம். ஆனாலும் இந்த முரடன் இப்படிச் செய்வான் என்று யாருக்குத் தெரியும்? தண்ணீரைக் கண்டு இவன் இப்படிப் பயப்படுவான் என்று யார் கண்டது?

அலையின் உச்சியில் வந்தியத்தேவன் அடுத்த தடவை தெரிந்த போது, பூங்குழலி படகை அவனை நோக்கிச் செலுத்தினாள். ஒரு நொடிப் பொழுதில் படகு அவனுக்கருகில் நெருங்கிவிட்டது. "வா! வா! வந்து

ஏறிக்கொள்!'' என்றாள். ஆனால் அவன் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. விழுந்தாலும் படகைப் பிடித்து ஏறிக் கொள்ளப் போகிறவனாகத் தெரியவில்லை. கேட்கும் சக்தியோடு பார்க்கும் சக்தியையும் இழந்து விட்டதாகத் தோன்றியது. ஆனால் அலறும் சக்தி மட்டும் இருந்தது. ஒரு கையை மேலே தூக்கி, தலையை மேலாக நிமிர்த்தி, 'ஓ!' என்று ஒருகணம் அலறினான். சகல நம்பிக்கையையும் இழந்து முழுகிச் சாகப் போகிறவனுடைய ஓலக் குரல் அது என்பதைப் பூங்குழலி அறிந்தாள். அவன் தலையை நிமிர்த்திய போது பிறைச்சந்திரனின் மங்கிய நிலா வெளிச்சத்தில் அவன் முகம் ஒருகணம் தெரிந்தது. வெறி முற்றிய பைத்தியக்காரனின் முகந்தான் அது! அவனாக வந்து படகில் ஏறிக் கொள்வான் என்று நினைப்பது வீண்! — நாம்தான் அவனைக் காப்பாற்றிப் படகில் ஏற்றியாக வேண்டும்! நல்ல சங்கடத்தை நாமாக வரவழைத்துக் கொண்டோம்! 'பெண் புத்தி பின் புத்தி' என்று சொல்லுகிறார்களே, அது சரிதான்!

உடனே பூங்குழலி மிகப் பரபரப்புடன் சில காரியங்களைச் செய்தாள். படகில் கிடந்த பாய்மரம் கட்டுவதற்கான கயிற்றின் ஒரு முனையைப் படகிலிருந்து நீண்டிருந்த கட்டையில் சேர்த்துக் கட்டினாள். இன்னொரு முனையைத் தன் இடுப்போடு சேர்த்துக் கட்டிக் கொண்டாள். கடலில் குதித்தாள். வெகு லாகவமாகக் கைகளை வீசிப் போட்டு நீந்திக் கொண்டு போனாள். வந்தியத்தேவன் அருகில் சென்றாள். கையினால் தாவிப் பிடிக்கக் கூடிய தூரத்தில் நின்று கொண்டாள்.

வந்தியத்தேவனும் அவளைப் பார்த்துவிட்டான். அவனுடைய முகத்திலும் கண்களிலும் பயங்கரமான கொலைவெறி தாண்டவமாடியது.

பூங்குழலியின் உள்ளம் அதிவேகமாக இயங்கியது. நீந்தத் தெரியாதவர்களும் கைசளைத்துத் தண்ணீரில் முழுகப் போகிறவர்களும் கடைசிநேரத்தில் என்ன செய்வார்கள் என்பது அவளுக்குத்தெரிந்திருந்தது. தங்களைக் காப்பாற்றுவதற்காக யாராவது வந்

னால், அப்படி வருகிறவர்களின் தோளையோ கழுத்தையோ கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விடுவார்கள்; காப்பாற்ற வருகிறவர்களும் நீந்த முடியாமல் செய்து விடுவார்கள். உயிரின் மேலுள்ள ஆசையானது அச்சமயம் அவர்களுக்கு ஒரு யானையின் பலத்தை அளித்துவிடும். காப்பாற்ற வருகிறவர்களை இறுக்கிப் பிடித்துத் தண்ணீரில் அமுக்கப் பார்ப்பார்கள். அவர்களுடைய பயங்கர ராட்சதப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ளவும் முடியாது. நீந்தவும் முடியாது. இரண்டு பேருமாகச் சேர்ந்து கடலுக்கு அடியில் போக வேண்டியதுதான்!

இதையெல்லாம் நன்கு அறிந்திருந்த பூங்குழலி மின்னல் வேகத்தில் சிந்தனை செய்தாள்; ஒரு தீர்மானம் செய்து கொண்டாள். உயிருக்கு மன்றாடித் தத்தளித்துக் கொண்டிருந்த வந்தியத்தேவனை மேலும் சிறிது நெருங்கினாள். அவனுடைய தலைப்பக்கமாக வந்தாள். ஒரு கையினால் நீந்திக் கொண்டு இன்னொரு கையை இறுக மூடி ஓங்கினாள். வந்தியத்தேவனுடைய முகத்தை நோக்கிப் பலமாக ஒரு குத்துக் குத்தினாள். மூக்குக்கும் நெற்றிக்கும் நடுவில் அந்தக் குத்து விழுந்தது. படிகுவலித்து வலித்துக் கெட்டிப் பட்டிருந்த அவனுடைய கையினால் குத்திய குத்து வஜ்ராயுதம் தாக்கியது போல் வந்தியத்தேவனைத் தாக்கியது. அவனுடைய தலை ஆயிரமாயிரம் சுக்கலாயிற்று. அவனுடைய கண்கள் பதினாயிரம் துணுக்குகள் ஆயின. ஒவ்வொரு கண் துணுக்கிற்கு முன்னாலும் ஒரு லட்சம் மின் பொறிகள் ஜொலித்துக் கொண்டு பறந்தன. ஒவ்வொரு மின் பொறியிலும் சமுத்திர குமாரியின் முகம் தோன்றி ஹாஹாஹாஹா என்று பேய்ச் சிரிப்புச் சிரித்தது. ஆயிரம், பதினாயிரம், லட்சம் பேய்களின் அகோரமான சிரிப்பின் ஒலியில் அவன் காது செவிடுபட்டது. அப்புறம் அவனுக்குக் காதும் கேட்கவில்லை; கண்ணும் தெரியவில்லை; நினைவும் இல்லை! முடிவில்லாத இருள்! எல்லையில்லாத மௌனம்!

(தொடரும்)



தேசியக் கொடி!

பட்டொளி
வீசிப் பறக்கும்
எங்கள்
தேசியக் கொடியே!
சற்று
கவனமாகப் பற...

உனது
கம்பத்தின் கீழே
கரையான்கள் ஆட்சி!

— பாரதி பா. மு. தாசன்



கலைந்த மௌனம்

கோவில் எதிரில் பரவலாக டூரிஸ்ட் கும்பல்.

ஓர் ஓரமாய் ராகவனும் லட்சுமியும் எதிரெதிராய் முகத்தைத் திருப்பிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

பயணம் கிளம்புவதற்கு முன்தினம் அவர்களிடம் எழுந்த பிணக்கு இந்த இரண்டு தினங்களில் மௌன பூதமாய் வளர்ந்திருந்தது.

முதலில் கேரளாவில் சில முக்கிய தலங்களில் தரிசனம். இன்று தமிழ்நாடு. இது தான் கடைசிக் கோவில். நாளை அவரவர் இருப்பிடங்களுக்குப் போய் விடலாம்.

கிளம்பியதிலிருந்து இதுவரை அவர்கள் ஒரு வார்த்தைகூடப் பேசிக் கொள்ளவில்லை.

ராகவன், எதிரே இருந்த கடைகளை வேடிக்கை பார்த்தார்.

கடைகளில் விதவிதமான மாலைகள், அலங்காரப் பொருட்கள், பூஜைக் கூடைகள், கடவுள் படங்கள்.

'அந்தப் பூஜைக் கூடையை வாங்கித் தரட்டுமா?' என்று ராகவன் மனைவியைக் கேட்க நினைத்தார். ஏதோவொன்று கிளம்பிக் கேட்க விடாமல் அவர் வாயை அடைத்து விட்டது.

அப்பொழுதுதான் ஒருவன் ராகவனிடம் அவசரமாக வந்தான்.

"சார், அந்தப் பையன் வீட்டிலே கோவிச்சுக்கிட்டு வர்றான். ரெண்டு நாட்களாகவே அவன் வீட்டிலே தகராறு. இன்னிக்குக் கிளம்பிட்டான். நீங்களும் உங்க மனைவியும் அவன் கவனத்தைக் கவருகிற மாதிரிப் பேசி அவனைத் தாமதப்படுத்துங்க. நான் அவன் அப்பா அம்மாவைக் கூட்டிக்கிட்டு வந்துடறேன்!"

சொல்லிவிட்டுச் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஓடினான் அந்த ஆள். லட்சுமியும் அவன் பேசுவதைக் கேட்டாள்.

ராகவன் எதிரே வந்த இளைஞனைக் கவனித்தார். கோபம் அவன் நடையிலேயே தெரிந்தது.

இளைஞன் அருகில் வந்ததும் ராகவன் ஆரம்பித்தார், "லட்சுமி! வீட்டிலே கோவம்னு இப்படி சொல்லிக்காம கிளம்புவாங்களா? அப்புறம் வீட்டிலே உள்ளவங்க கவலைப்பட மாட்டாங்க?"

உடனே லட்சுமி, "ஆமாங்க! அம்மா அப்பா வேதனைப்படுவாங்க. நான் வீட்டுக்கே திரும்பிடறேன்" என்றாள்.

பிரேக் போட்டது மாதிரி அந்த இளைஞன் நின்றான். இவர்களை ஏறிட்டுப் பார்த்தான்.

இதற்குள் முதலில் சென்றவன், சைக்கிளில் அவன் அம்மாவை அழைத்து வந்தான்.

அவள் இளைஞனைப் பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள். "வாடா, வீட்டுக்குப் போகலாம்" என்று அவனை இழுத்தாள்.

முதலில் முரண்டு பிடித்தாலும், அந்த இளைஞன் அவர்களோடு போய் விட்டான்.

ராகவன் லட்சுமியைப் பார்த்துச் சந்தோஷமாகப் புன்னகை செய்தார்.

"அந்தப் பூஜைக் கூடையை வாங்கித் தரட்டுமா?" என்றார்.

லட்சுமி மகிழ்ச்சியுடன் தலையசைக்க, ராகவன் கூடையை வாங்கக் கிளம்பினார்.

— ஆர். வரதராஜன்

அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப்
போட்டி -1987
ரூ 375/- மூன்றும்
பரிசுக் கதை-1



அம்மா

ஜெயலக்ஷ்மி

(அறிமுக எழுத்தாளர்)

கால் பெருவிரலில் சுருக்கெனவே, தூக்கி வாரிப்போட்டுக் கொண்டு எழுந்தாள் மீனு. வலி ஏற்பட்ட இடத்தில் சிவப்புப் பொட்டிட்டிருந்தது. 'ஐயோ என்ன கடிச்சுடுத்து!' என்று சுற்றுமுற்றும் பார்த்தவளின் கண்களில் புறக்கடை வேப்பமரத்துக் காகம் தென்பட்டது.

'சுக்ராச்சாரி உன் வேலைதானு? வீட்டுக்குள்ளே வந்து ஊட்டி அடிக்கிற அளவுக்குத் துணிச்சல் வந்துடுத்தா! போ... ஓ...' என்றவாறு பக்கத்திலிருந்த செம்பிலிருந்த தண்ணீரை எடுத்தடித்தாள்.

தலையைச் சாய்த்து ஒற்றைக் கண்ணுல் அலைளைப் பார்த்த காகம் 'கர்ர்...' என்று கிழ்க்குரலில் கரைந்தவாறு பறந்து போயிற்று.

'பல்'லென்று பகல் புலர்ந்திருந்தது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்த மீனு — மீனுட்சி, துப்பட்டியை நடுவில் அள்ளிப் போட்டு, 'அம்மாடியோ ரொம்ப நாழியாயிடுத்து. இதையெல்லாம் மடிச்சிண்டிருக்க இயலாது,' பாயைச் சுருட்டிப் பாய்த் தூக்கில் எறிந்தாள். ஓரமெல்லாம் பிட்டுப் பிட்டுத் தொங்கிய,என்றோ வாங்கிய பாய், ஏற்கெ

னவே உதிர்ந்தது போக மேலும் ஏராளமாக உதிர்ந்தது. திடீரென்று வந்து விழுந்த,



பாயை வாங்கிக் கொண்ட பாய்த் தூக்கி 'கோணு மாணு' என்று ஆடியது.

'அம்மா...' கொட்டிலிலிருந்து லட்சுமி குரல் கொடுத்தது. ''ஏண்டி எச்சி, கோவாலு இன்னும் வரலேயா? தெனத்துக்கும் இவனோட புடுங்கலாப் போயிடுத்து. அம்...'' மீனா முடிக்கவில்லை. சமையற்கட்டிற்குள் பார்வையை அனுப்பியவளுக்கு,' அம்மா ஏதோ முணுமுணுத்துக் கொண்டு.

மூக்கை மூக்கைச் சிந்திக் கொண்டிருந்தது தெரிந்தது. 'சரி. அம்மாவுக்கு இன்னிக்கி 'மூடு' என்று நினைத்துக் கொண்டாள். சமையலறை முழுதும் லாவி லாவியாகத் தொங்கிய ஒட்டடைகள் மேல் கவனம் திரும்ப, 'அம்மா என்ன சொன்னாலும் இந்த 'ஞாயிற்றுக் கிழமை சமையலறையை ஒட்டடை அடிச்சுட்டுத்தான் மறு காரியம்' என்று ஆள் காட்டி விரலை ஆட்டிச் சத்தம் போடாமல் உறுதி செய்து கொண்டாள். தொட்டி முற்றத்தில் ஒரு மூலைக்கும் இன்னொன்றுக்குமாகக் குறுக்குவாட்டில் ஒட்டிக் கொண்டு, இலேசான காலைக் காற்றில் வெடவெடத்த செமத்தையான ஒற்றை வட ஒட்டடை ஒன்று கண்ணில் தென்பட, 'மாய மந்திரக் கதையிலெல்லாம் வர்றாப்பல இந்தத் தடிச்ச ஒட்டடை தங்கக் கயிறாக மாறி, இந்த அழுமூஞ்சி அம்மாவை அதுல வெச்சு, ஜம்முனு ஆட்டினால் எப்படி இருக்கும்?' என்று நினைத்துக் கொண்ட மீனாவுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. அம்மா 'மூடு'ல இருக்கிறப்ப சிரித்தால் எரிகிற கொள்ளிக் கட்டை பறக்குமென்று தெரியுமாதலால், உதட்டுக்கு வந்துவிட்ட சிரிப்பை மனத்துக்குத் திருப்பி அனுப்பிவிட்டு, கிணற்றடிக்கு ஓடி, வாளி, துடைப்பத்தை எடுத்துக் கொண்டு வாசல் தெளிக்கப் புறப்பட்டாள்.

''எங்கேடி கௌம்பிட்டே தொடைகாலி; போது விடியறதுக்கு முந்தியே யாருக்கு ஒன் விடியா மூஞ்சியைக் காட்டிக் கழுத்தைத் தொடைக்கப் போறே... போடி உள்ளே!''

அம்மாவின் சத்தத்தில் அதிர்ந்து போய் அடிபட்டு நின்றாள் மீனா.

''சரிதான் இனிமேல் நாலு நாளைக்கு நரகந்தான்'' என்று நினைத்தவாறு, விழுப்புத் துணிமணிகளைக் கூடத்திற்குள் அடைத்துக் கொண்டு, புறக்கடைப் படலைத் தள்ளிக் கொண்டு ஆற்றுக்குக் கிளம்பினாள்.

சரியாக அதே சமயத்தில் வெளிப்பட்டு இவளை எதிர்கொண்டு விட்ட அடுத்த வீட்டு அம்புலு, ''ஐயோ, கருந்தேள்'' என்றவாறு, தாலியை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு மீண்டும் வீட்டைப் பார்க்கத் திரும்பினாள்.

''ஒன் தொண்ணூறு வயசு ஆம்படையானுக்கு என்னிக்கு சீக்கில்லாம இருந்துது... என்னிக்கும் லொக்கு லொக்குத்தான். ஜொரந்தான்... தெரியாதோ ஒன் பத்தினித்தனம். கெழவர் கண்ணைத் தெறக்காமே கெடக்கறத்தே, 'நாளைக்கு எது எப்படி இருக்குமோன்னு பூட்டிண்டுட்டேன் மன்னி'ன்னு, பொட்டியிலிருக்கிற நகையெல்லாத்தையும் பூட்டிண்டு வந்து நின்னேயே... நெனவில்லேயோ...?''

முணுமுணுப்பாக வெடித்தாள் மீனா. அவள் கண்ணிற்குள்ளிருந்த பிரவாகம், இப்போது கன்னத்தில் பாயத் துவங்கியது. பொங்குகிற பால் மூடியைத் தள்ளிக் கொண்டு வெளியேற முயற்சி செய்வதைப் போன்று, வாய் வழியே வெளியேற முடியாத விம்மல்கள் அவளுடைய மார்பை ஏற்றியும் இறக்கியும் அலைக்கழித்தன. கண் சிந்தும் முத்து நிலத்திற்குத்தான் பொருந்தும் என்பது போல் தரை பார்த்து நடந்தாள்.

''எதிரே வர்றவா தெரியாமல் இதென்ன நடை...?''

''மரியாதையுள்ளவா ஒதுங்கிப் போவா'' குரல் கம்மியிருந்தது.

''மீனா! காலங்கார்த்தால... இங்கே பாரேன்'' ரகு பதைத்தான்.

மீனா அவனை ஏறிட்டாள். அவனது பார்வையில் கசிந்த பரிவில், உதடுகள் துடித்தன. அதிகரிக்கும் ஜனநடமாட்டத்தின் பார்வையில் வம்பைக் கண்ட அவள், பேசாமல்

ஆற்றை நோக்கி நடையைக் கட்டினாள்.

'மனசு சரியில்லாத போதெல்லாம் அம்மா எப்பவும் இப்படித்தான் நடந்துப்பா. இன்னிக்கி என்ன புதுசு? என் மனசு ஏன் இன்னிக்கு இப்படி கஷ்டப் படறது? எப்படி இருந்த அம்மா எப்படி ஆயிட்டா! என் கண்ணில் பொட்டு ஜலம் வந்தால் உசிரையே விட்டுடுவியே அம்மா... ஐய்யோ ஏன் இப்படி ஆயிட்டே அம்மா? நான் என்ன பண்ணுவேன்...?' என்றெல்லாம் எண்ணியவளுக்கு விம்மல் வெடித்துக் கொண்டு வந்தது.

மற்றப் பெண்களெல்லாம் இவளைப் பரிதாபமாகப் பார்த்தவாறு விலகிப் போக, ஐந்து வயதில் 'ஆம்படையானை'ப் பார்த்து விட்டுப் பத்து வயதில் முட்டாக்குப் போட்டுக் கொண்டு விட்ட நாகுப் பாட்டி மட்டும் 'என்ன செய்யறதுடீம்மா நாமெல்லாம் நல்ல பூவால பூஜை பண்ணலையே!' என்றழுதாள். ஒன்றிலும் மனம் செல்லாத மீனா. "இன்னிக்கு எனக்கு என்ன ஆயிடுத்து? ஒரு நாளுமில்லாமல் இன்னிக்கு என்ன ஆயிடுத்து?" என்று மனம் புலம்ப, இடுப்பில் குடமும் தோளில் துவைத்த துணிகளுமாக, இயந்திரமாக வீட்டை நோக்கி இயங்கினாள்.

"மீனா" இதமான அழைப்பு.

நிமிர்ந்தாள். மீண்டும் ரகு; மீண்டும் கண் வெள்ளம்.

ரகு பதைத்தான். பார்வைக்கெட்டும் தொலைவில் யாருமில்லை என்று உறுதி செய்து கொண்டு, "தீபம் ஏத்தினப்புறம் ஐய்யனார் கோவில் தோப்புக்கு வா; வராமல் வச்சுடாதே" என்று, கெஞ்சும் குரலில் உத்தர விட்டுவிட்டு, பரபரவென்று எதிர்த் திசையில் நகர்ந்து விட்டான்.

சமையலறையில் அம்மாவும் அப்பாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். தப்பு — அம்மா புலம்பிக் கொண்டிருந்தாள். அப்பா அவளை அடக்கிக் கொண்டிருந்தார். அவள் ஆற்றங் கரையிலிருந்து திரும்பி, கிணற்றிலிருந்து நீர் இறைத்து மண் போகக் கால் கழுவிக் கொண்டதோ, துவைத்துக் கொண்டு வந்த துணிகளை முற்றத்துக் கொடியில் உலர்த்தியதோ அவர்கள் பிரக்ஞைக்கு எட்டவில்லை.

"ஐயோ! என்ன பாவம் செஞ்சோம்? யாருக்கு என்ன தீமை செஞ்சோம்? பூத்துக் குலுங்க வேண்டிய பொன் மரம் பட்டுப் போச்சே. என்னவோ ஜகஜ்ஜாலம் பண்ணிப் பாவித் தரகன் 'ஹார்ட்வீக்' பையனை நம்ம தலையில் கட்டினதைச் சொல்லவா? எங்கொழந்தையைக் கோலங்காட்டறதுக்குன்னே உசிரை வச்சிண்டிருந்தாப்பல அந்தக் கடன்காரன் தாலியைக் கட்டின மறு கணமே பொசுக்குனு மண்டையைப் போட்டதைச் சொல்லவா? ஐயோ தெய்வமே!"

"ரொம்பப் பெரிய பாவம் பண்ணியிருக்கோம்டி.... இல்லாட்டா..."

அப்பா வாயில் மேல் துண்டை அடச்சிண்டு, பரங்கிப் பழமாட்டமா சேப்பு ஒடம்பு மேலும் செவக்கச் செவக்க அழுதிண்டிருப்பார். அதான் குரல் இப்படி அடைச்சு அடைச்சு கேக்கறது.

"இது இப்படித் துக்கிரி அதிர்ஷ்டத்தோட பொறந்திருக்குன்னு தெரிஞ்சிருந்தால் பெத்த அறையிலேயே மென்னியைப் பெசஞ்சிருப்பேனே."

"போரும்மா..."

அப்பாவின் குரல் ஓங்கி அலறியது. தற்காலிகமாக, தாழ்வாரத்தில் சந்தனக் கல்லின் மேல் இறக்கி வைத்திருந்த தண்ணீர்க் குடத்தைச் சமையலறைக்கு எடுத்துப் போனாள், மீனா.

"குழந்தை வந்துட்டாடி, காப்பி குடு" என்றார் அப்பா.

பிரளய வெள்ளம் போல் அம்மாவின் துயரம் பொங்கிப் பிரவகித்தது.

"ஐயோ,
பச்சைத் தோரணம் வாடலே;
பந்தல் பிரிபடலே;
பந்தக்கால் மஞ்சமணம் மாறலே;
எங் கண்ணே
ஊரெல்லாம் பூமுடிக்க,
ஒனக்கு மட்டும் பஞ்சமோடி;
நாடெல்லாம் பொட்டெழுத,
ஒனக்கு மட்டும் பஞ்சமோடி;
என் செல்வமே...ஏ"

அம்மா வயிற்றுக்குள் அழுதாள். அவள் மீண்டும் சுட வைத்துக் கொண்டு வந்த காப்பியை லட்சியமே செய்யாமல் அப்பா விறுக்கென்றெழுந்து வெளித் திண்ணைக்குப் போய் விட்டார்.

கொடியிலிருந்து காய்ந்த துணிகளைத் தள்ளி உடுத்திக் கொண்ட மீனா மௌனமாகப் பூஜை இடம் துடைத்துக் கோலமிட முனைந்தாள்.

அம்மாவின் கவனம் அவள் பக்கம் திரும்பியது.

"என்ன சாமியும், பூதமும் வேண்டிக் கிடக்கு? எல்லாச் சனியனையும் கொண்டு போய்க் கிணற்றில் எறி."

சகிப்புணர்வின் எல்லையை மீறிய கொடிய துயரத்தின் பிடியில் அலைப்புண்ட அம்மா, அடுப்பில் பொங்கிய பாலை டம்ளரில் விட்டு, டிகாக்ஷனையும் சேர்த்தவள், அதற்கு மேல் தாளமாட்டாமல், "ஐயோ என்ன செய்வேன்... நான் என்ன செய்வேன்!" என்று புடைவைத் தலைப்பில் முகத்தைப் போட்டுக் கொண்டு, உடல் வெடவெடக்க அடிக் குரலில் புலம்பினாள். காப்பியில் சர்க்கரையைக் கலக்கியவாறே ஓரக் கண்ணால் அவளைப் பார்த்தாள் மீனா. அந்தத் தங்க ரேக்கு முகத்தில், பொட்டினால் முகத்திற்கு அழகா அல்லது முகத்தினால் பொட்டிற்குப் பெருமையா என்று சென்ற ஆண்டு வரையில் வியக்கச் செய்த, அந்தப் பொட்டில்லை.

"ஐயோ அம்மா" மறுகினாள் மீனா.

பார்வை தாழ்ந்து ரவிக்கைக்கும் புடைவைக்கும் இடைவெளியில் நின்றது. முன்பெல்லாம் போல, அம்மாவைக் கட்டிக் கொண்டு கெட்டிச் சந்தனத்தைக் குழையப்


மாதம் ஒரு மாவட்டம்

வ. உ. சி. மாவட்ட மக்களுக்கு,
நினைவுபடுத்துகிறோம்!

கல்கி ஏற்றிருக்கும் சமுதாயப் பணியில் பதினெட்டாவது மாவட்டமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது உங்கள் வ. உ. சி. மாவட்டம்தான். எனவே, அநீதிகளும், அக்கிரமங்களும் தவிர, சாதனைகளும் வளர்ச்சிக்கான ஆலோசனைகளும் கல்கி அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி: 20.8.87 என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறோம்.

உடனடியாக எழுதி அனுப்புங்கள்!

— ஆசிரியர்



பிசைந்து. அப்பியது போன்ற அவளது அப்பகுதியைக் கிள்ளிக் கிள்ளிக் கொஞ்ச வேண்டும்போல நெஞ்சும் கைகளும் பரபரத்தன. கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''அம்மா, ஏனம்மா இப்படி உருகறே? இதுவும் ஒருவிதத்துல நல்லதுதானே. நான் ஒங்களுக்குப் பிள்ளையா இருந்துட்டுப் போறேன்'' என்று வாதிட்டாள்.

காப்பியை எடுத்துக் கொண்டு தனிமையைத் துணையாக்கிக் கொண்டாள் மீனா. தனிமையைத் தனியாக இருக்க விடாமல் துணைக்கு வந்தது ரகுவின் நினைவு.

''பொல்லாதவன்... எவ்வளவு எளிசாக் கேட்டுட்டான், 'என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ மீனா'ன்னு. இந்த ஊரையும் சாதியையும் வச்சிண்டு இவனைக் கல்யாணம் பண்ணிக்கிறதாம்! ஆனால் பதினஞ்சு வயசிலேயே இந்த வார்த்தையைக் கேட்டவன்தானே இவன்! இங்கேயே இருந்திருந்தான்னா ஒருகால் நடந்திருக்குமோ என்னமோ... அம்மா கண்டிப்பா மாட்டேன்னிருப்பா. 'சமையல்காரனுக்குப் போய் எம் பொண்ணைக் குடுப்பேனா'ன்னு அடம் புடிச்சிருப்பா. நல்ல வேளையா அவன் அப்பா அம்மா பம்பாய்க்கோ கல்கத்தாவுக்கோ போனாளோ பொழைச்சாளோ! இப்பப் பணத்திலே பொரளுறானாம். அவனும் நன்னாகப் படிச்சிருக்கானாமே. அரும்பு மீசையும் தானுமா திருதிருன்னு எத்தனை அழகாயிட்டான்! லண்டனுக்கோ எங்கேயோ போறானாமே. 'என்னோட வந்துடு ஒன்னைக் கல்யாணம் பண்ணிண்டு கூட்டிண்டு போயிடறேங்கறானே. ரகு சொல்றாப்பல அம்மா அப்பா எதிர்ப்பு நான் நன்னாருக்கேங்கறது தெரியாத வரைக்கும்தான். அவன் சொல்ற மாதிரி ஊர் எக்கேடும் கெட்டு எருக்கு முளைக்கட்டும். இந்த அம்மா அப்பா கஷ்டத்தைக் கண் கொண்டு பார்க்க முடியலையே கடவுளே...''

அன்று, மாலை மாய்ந்து, இருள் புகத் துவங்கும் போது, மீனா ரகுவைத் தேடி ஐய்யனார் கோயில் தோப்பிற்குச் சென்றாள். மறு நள்ளிரவில் ரகுவின் துணையுடன் ரயிலடிக்குப் போனாள்.

''யாரு? பட்டணம் போறாப்புலயா?'' என்ற சம்பிரதாயமான கேள்வியுடன் அரைத் தூக்கத்திலிருந்த ரயில் நிலைய அதிகாரி அவர்களை விட்டுவிட்டார்.

''அப்பாடா!'' இரைந்து மூச்சு விடப் பயந்தாள் மீனா. உடலே ஒரு பெரிய ஊற்றுக் கண்ணாகிவிட்டது போல வியர்வை ஊற்றெடுத்து உடல் முழுவதையும் நனைத்தது.

ரயில் புறப்பட்டு விட்டது.

'அம்மா அப்பா என்னை மன்னிச்சிடுங்கோ., உங்களை ஏமாத்திட்டுப் போறேன்' என்று நினைத்துக் கொண்டவளுக்குத் துயரம் நெஞ்சையடைத்தது.

'ஊரார் உற்றார் ஏசலில், அவமானம் தாளாமல் அம்மா பிராணனைப் போக்கிண்டுடுவாளோ... பரங்கிப் பழம் போன்ற உடம்பு செக்கச் சிவக்க அழுது உருகியே அப்பா உசிரை மாய்ச்சிண்டுடுவாளோ...'' என்ற எண்ணங்கள் பேயாக ஆர்ப்பரித்தன.

ரயில் வேகம் கூட்டத் துவங்கி இருந்தது.

'என்னை மன்னிச்சுடு ரகு' என்ற சொல் காற்றில் மிதந்து வர, அதன் பொருளை உணரு முன்னர் அவள் கீழே ஒரு புற்கட்டின் மேல் கிடப்பதை ரகுவின் கண்கள் கண்டன.

வீடு சாவு விழுந்த வீடு மாதிரி இருந்தது. நடுவில் ஒரு கோழி முட்டை விளக்கு சிரமத்துடன் வெளிச்சம் சன, எதிரும் புதிருமாகத் தலையில் கை வைத்துக் கொண்டு அம்மாவும் அப்பாவும்.

''அம்மா...'' சிறுகுரலில் அலறியவாறு அவள் மடியில் விழுந்தாள் மீனா.

கணநேரம் அதிர்ந்து உறைந்த அம்மா, ''ஏண்டி கடன்காரி, ரகுவோடதானே போனே? ஏண்டி திரும்பி வந்தே? ஒரு நல்ல பையனோட மணமா வாசனையா இருப்பேன்னு சந்தோஷப்பட்டேனே... ஏண்டி வந்தே? ஏண்டி வந்தே?'' என்று அவள் முதுகிலும் தன் தலையிலுமாக மடேர் மடேரென்று அறைந்து கொண்டாள்.

நிழல்

19

முரளிக்கு மனசு நொந்து தவித்தது. புத்தி பிடிப்பில்லாமல் அலைந்தது. உடம்பு முழுவதும் பரவிப் படர்ந்து கொஞ்சிக் கொண்டிருக்கிற பெண்ணுக்கும் தனக்கும் சம்பந்தமேயில்லைஎன்கிறஎண்ணம்தோன்றிற்று. இந்தப் பிரச்னையின் அடிவேர் என்ன என்கிற கேள்வி எழுந்து,பதில் தேடும் முன் களைப்பு ஏற்பட்டுத் தனக்கு இன்னும் திருமணமே ஆகவில்லை. தான் இன்று வரை சந்தோஷமான கட்டில்லாத பிரம்மச்சாரி என்கிற கனவு வந்தது. எவ்வளவு சந்தோஷமாக இருந்தோம் என்கிற ஏக்கம் தோன்றிற்று.

'அம்மா எனக்கு வேலை கிடைச்சாச்சு' என்று சந்தோஷமாய் முரளி உள்ளே ஓடி வருகிறான். 'இரண்டாயிரம் ரூபாய் சம்பளம், யார் சிபாரிசும் இல்லை. நீ உனக்குப் பிடிச்ச பொண்ணைப் பாரு. நம்ம வீட்டுக்கு ஒத்து வருமான்னு பார்த்து ஒருத்தியைக் கொண்டு வா,' எக்காளமாய் வசனம் தோன்றிற்று.

கல்யாணம் முடிந்த நாலாம் நாள்; மனைவியின் குரல் கொஞ்சம் வேகமாய்க் கேட்க, 'ஏய்' என்று ஓர் அதட்டல் போடுகிறான். வெளியே அறை விளிம்பில் புடைவை நிழல் ஆடுகிறது. 'இது என் வீடு. இது எங்கம்மா. இங்கே இப்படித்தான் இருக்கும். முடிஞ்சால் இரு. இல்லே பொட்டியை எடுத்துண்டு போய்ச் சேரு.' கம்பீரமாய்க் கட்டளை வருகிறது.

ஆனால் முடியவில்லை.

எல்லாம் கனவு. நிஜம் ஏற்க மறுக்கிற கனவு. வெற்றி, வீரம், கம்பீரம், கட்டளை எல்லாம் விழித்துக் கொண்டே மனசு காண்கிற கனவு. நிஜ வாழ்க்கையில் வெகுவாய் விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

''ஏம்பா ... மூட் இல்லையா ...?''



யுத்தம்

அவன் நெஞ்சில் கைவைத்துக் கைமேல் முகவாய் வைத்து லலிதா கேட்டாள்.

''சரியான அம்மா பிள்ளை'' என்று உதட்டில் முத்தமிட்டாள்.

''எல்லோரும் அம்மா பிள்ளைகள்தான். வானத்துலேர்ந்தா குதிக்க முடியும்?'' முரளி அவளை மெல்ல விலக்கினான்.

''உலகத்தில் அத்தனை உயிர்களும் அம்மா பிள்ளைகள்தான். ஆனால் மனுஷர்கள் மட்டும்தான் சிக்கலில் மாட்டிக்கிறா. தாய் தெய்வம். தந்தை மந்திரம். சகோதரி கடன். சகோதரன் பலம். குழந்தைகள் சொத்துன்னு அவஸ்தைப்படறோம்.''



''என்ன தப்பு? பொண்டாட்டி மட்டும்தான் உறவா...? மனுஷனுக்கு அவள் வந்ததும் மத்தது அத்துப் போயிடணுமா?''

''பொண்டாட்டியைக் கொண்டாடிட்டாத் தான் கேவலமாயிடுவேனே. உலகத்தில் எந்த உயிரினமாவது இந்தக் குருவி என் அப்பா, இந்தப் புலி என் அம்மான்னு வருதா? ஸிஸ்டர் பிரதர்னு கொண்டாடறதா...? பிரதர், வொய்ஃப், ஸிஸ்டர் ஹஸ்பெண்ட்னு உறவு சொல்றதா? துணை முக்கியம். பேடை முக்கியம். ஆண் புலிக்குப் பெண்புலி முக்கியம். அதுக்குப் பொறந்தது சுயபலம் கிடைக்கிற வரைக்கும் கிட்டச் சேர்க்கும். பெத்த குழந்தைக்குத் தனியாகப் பலம் வந்தால் முதல் காரியமாக அடிச்சு விரட்டும். ஆனால் தன் துணையை மட்டும் கடைசி வரைக்கும் சுத்திண்டிருக்கும். இது இயற்கை. இதுதான் இயற்கை.''

''உங்கப்பா உன்னை அடிச்சு விரட்டலியே...?''

''நான் விலகிட்டேன். எப்பவோ. இந்த க்ஷணம் எங்கப்பாவை விட்டுட்டு வர முடியும் என்னால். அவரும் 'போயிட்டு வா தாயே'ன்னு கையலம்பிடுவார்.''

''உனக்குப் பொறந்தா...?''

''இதேதான் நடக்கும். மீசை முளைச்சுப் புத்தி தெரியற வரைக்கும் என் பையன். அப்புறம் அவன் வாழ்க்கை அவன் கிட்டே.''

''மனிதன் கூடி வாழும் இயல்பினன்.''

''ஹூ ஸெட்? எத்தனை தடவை கூடினாலும் நான் வேறே... நீங்க வேறே... என் வலி வேறே... உங்க வலி வேறே... என் விருப்பம் வேறே... உங்க டேஸ்ட் வேறே...''

''வாஸ்தவம். ரெண்டு பேரும் விட்டுக் கொடுத்து அட்ஜஸ்ட் பண்ணிண்டாத்தான் வாழ்க்கை.''

''விட்டுக் கொடு. விட்டுக் கொடுன்னு வெட்கமில்லாமல் பேசக் கூடாது. விட்டுக் கொடுக்கறது இயல்பாக வரணும். நிர்ப்பந்தத்தில் விட்டுக்கொடல் வராது. என்னை விட்டுக் கொடுத்துட்டு வேறே என்ன வாங்கணும்? வாங்கி என்ன பிரயோஜனம்?''

''தாய்ப் பாசம் பொய்யா?''

''நம்பர் ஒன் ரூப்.''

''கடவுளே!''

''அலட்டலா பேசலே. தடலடியாப் பேசலே. உங்கம்மா உங்களுக்குப் பால் கொடுத்தது பாசத்தில் இல்லே. பின்னாடி சோறு போடுவான்னு ஒரு கணக்கு. வியாபாரம்.''

''நான்ஸென்ஸ்.''

''இல்லே நெஜம். அப்பட்டமான உண்மை.''

''அப்ப, நீயும் நானும்?''

''இன்னொரு வியாபாரம். சாகற மட்டும் நீங்க எனக்குத் துணை. நான் உங்களுக்கு உதவி. நீங்க இதைக் கொடுங்கோ. நான் அதைத்தர்றேன்... நீங்க ஸெக்யூரிடி தாங்கோ, நான் ஸெக்ஸ் தர்றேன்னு...

''ச்சை...''

''புரிஞ்சுக்கறதுக்கு முன்னாடியே தூக்கி எறிஞ்சால் எப்படி?

''இது மிருக வாழ்க்கை. அப்புறம் மிருகத்துக்கும் நமக்கும் என்ன வேறுபாடு?''

''ஒரு வேறுபாடும் இல்லே. மனுஷன் ஒருவகை மிருகம்.''

''என்ன லலிதா... அப்ப... மென்மை, காருண்யம், அன்பு, பக்தி...''

''பெரிய ஃபோர்க்கோர். அர்த்தமேயில்லாத வார்த்தைகள்.''

''அன்பு ஃபோர்க்கோரா...?'' முரளி படுக்கையிலிருந்து விருக்கென்று எழுந்தான்.

''ஆமாம்.''

''எப்படி?''

''பக்கத்து விட்டுக்காரனோட அன்பா இல்லேன்னா அடி விழும். அடிக்குப் பயந்து அன்புன்னு ஒரு பொய் வர்றது. நாலணா பிச்சைப் போட்டால் நாற்பது ரூபாய் வராதான்னு காருண்யம் வர்றது. பக்தியே பயத்தின் அடிப்படை. ரொம்ப நாள் சௌக்கியமா

பாலகுமாரன்



''டாக்டர் நீங்க சொன்ன மாதிரி விளையாடியும் உடம்பு குறையல......!''

''என்ன விளையாட்டு விளையாடினீங்க?''

''சீட்டாட்டம்தான்!''

''!!!!!''

— குத்தாலம் அபிதா

இருக்கணும்னு பயம். மரணம் பார்த்து பயம். பயத்துல வர்றது பக்தி. எல்லாம் எதிர்பார்ப்புத்தான்.''

''எப்படி இருக்கணும் மனுஷா?''

''ஸெல்ஃபிஷா இருக்கணும். சுயநலம் தான் ஆரோக்கியம். நான் முக்கியம். நானே முதல். நானே இந்த உலகத்தின் மையம். நான் இல்லாவிடில் இந்த உலகம் இல்லை. நான் இல்லாத போது இருக்கும் உலகம் பற்றி எனக்குத் தெரியப் போவதில்லை. நான் நன்றாக இருந்தாத்தான் இந்த உலகம் நன்றாக இருக்கும். எனக்குத் தலை வலிச்சா உலகத்தில் எப்பேர்ப்பட்ட விஷயம் இருந்தாலும் எனக்குத் தேவையில்லை. எனக்கு என் தலைவலி முக்கியம். அதை யார் கிட்டேயும் கொடுக்க முடியாது.''

''அப்படி நான் இருந்தால் தாங்குவியா?''

''இருந்து பாருங்களேன்.''

''வாடி. கிட்டே வா. இன்னிக்கு நீ வேணும். இப்ப வேணும். உன்னை நசுக்கி ஹிம்ஸை பண்ணிப் போறும் போறும்னு கதற அடிக்கணும்,'' முரளி அவளை இழுத்து நெருக்கினான்.

''குட். நான் சரின்னு சொல்வேன். என்ன வேணா பண்ணிக்கோன்னு கிடப்பேன். அதே சமயம் எனக்கு இப்படி தோணி, வாடா டேய்...ன்னு இடுப்புல கைவைச்சுக் கூப்பிட்டா அதிர்ந்து போயிடக் கூடாது. ஐயோ நீ பொம்மனாட்டியான்னு கேட்கக் கூடாது. சரியா?''

முரளி விழித்தான்.

''எனக்கும் சுயநலம் உண்டில்லையா?''

''அப்போ மீட்டிங் பாயிண்ட் எது? எங்கே நமக்குள்ளே ஒத்துமை?''

''இப்ப கேட்ட கேள்வி ரொம்ப சரி. உங்க சுயநலத்தை நாங்க மதிக்கிற மாதிரி, என் சுயநலத்தை நீங்க மதிக்கிற போது ஒத்துமை வரும்.''

''உங்களுக்குத் தலைவலிங்கற போது உலகமே துச்சமாப் படறது இல்லையா? அதேபோல் எனக்குத் தலைவலின்னு நான் அவஸ்தைப் படறப்போ, நான் சகலமும் ஒதுக்கிச் சுருண்டு கிடக்கறப்போ, சரி இது இயல்புன்னு சும்மா இருக்கணும். எழுந்து முதுகு தேய்னு சொல்லக் கூடாது.''

''சொன்னா...?''

''என் சுயநலம் உங்களை எப்படிக் கவுக்கறதுன்னு கணக்குப் போடும். எப்படி ஒரு கஷ்டம் உங்களுக்குத் தரலாம்னு யோசனை பண்ணும். தலைவலியோட இருக்கேன், அதட்டறியா? இரு இருன்னு கறுவும். கண்ணி விரிக்கும். உறவுல பிளவு வரும்.''

''எங்கம்மாவுக்கும் சுயநலம் உண்டே. அது தப்பா?''

''நிச்சயமாத் தப்பில்லை.''

''உனக்கும் சுயநலம் இருக்கு.''

''இருக்கு.''

''இப்ப எந்த சுயநலம் பெரிசு.''

''யூ டிஸைட். அது உங்க தீர்மானம். உங்க தலைவலி.''

''நீ என் துணை இல்லையா? எனக்கு உதவியில்லையா? நீ சொல்லு.''

''வாஸ்தவம். ஆனால் அதுல என் சுயநலம் இருக்கும். என் சௌகர்யம் இருக்கும். பரவாயில்லையா?''

''எனக்காக என் இடத்துலேர்ந்து யோசனை பண்ணேன்.''

''அது முடியலே. முடியாது. நீங்க வேறே. நான் வேறே. உங்க தலைவலி வேறே. என் தலைவலி வேறே. அதை மாத்திக்க முடியாது. என் துக்கம் உங்களுக்குத் தெரியாது. உங்க துக்கம் எனக்குப் புரியாது.''

''இது கொடுமை லலிதா!''

''யெஸ் மை டியர். உலகத்துல பெரிய கொடுமை இதுதான். இந்தத் தனிமைதான். பரிமாறிக்கவே முடியாத இடம்தான்.''

''அப்போ எதுக்குக் கல்யாணம்? ஏன் குடித்தனம்?''

''அப்படி கூட நடந்து போறதுக்கு. சும்மா ஆதரவுன்னு கையைப் புடிச்சுக்கறதுக்கு. 'பேரலல் வாக்கிங்!' மரணத்தை நோக்கி நடந்து போறோம். மரணம் வர்ற வரைக்கும்

ஒன்றாகப் போவோம். சேர்ந்து நடப்போம். கலந்துட முடியாது. ஓருயிர் ஈருடல்ங்கறது அபத்தம். நீங்க வேறே... நான் வேறே..."

"எங்கம்மாவோட சேர்ந்து நடையேன்."

"எனக்கு வேண்டாம்."

"ஏன்?"

"அவ வேறே திக்கு. நான் வேறே திக்கு. இழுபடும்."

"அப்படி நாம இழுபட்டால்?"

"பிரியணும்."

முரளி அதிர்ந்தான். மல்லாக்கச் சாய்ந்து கைகளைத் தலைக்குப் பின் கட்டி விட்டம் வெறித்தான்.

"மறுபடியும் சொல்றேன் முரளி. உங்கம்மா மேல் எனக்கு எந்தக் கோபமும் இல்லே. எனக்கு அவளைப் பிடிச்சிருக்கு. அவ டேஸ்ட் வேறே. என் வாழ்க்கை வேறே. சேர்ந்து நட, சேர்ந்து நடன்னு கம்பல் பண்ணினா உரசல் வரும். விரிசல் வரும். அதிகம் பாதிக்கப்படப் போறது நீங்கதான்."

"என்னை என்ன பண்ணச் சொல்றே லலிதா ...?"

"நீங்க போய் உங்கம்மாவைப் பார்த்துட்டு வாங்கோ. வேணுங்கறதை வாங்கிக் கொடுங்கோ. இரண்டு நாட்கள் தங்கிட்டு வாங்கோ. நான் வரலே."

"அது நன்றாயிருக்குமா? ஊர் குறை சொல்லாதா?"

"நாலு நாட்கள் நான் தங்கிட்டு அஞ்சாம் நாள் சண்டை போட்டா அப்பவும் சொல்லும். ஊர் சொல்லுமேன்னு பயந்து அடக்கி வளைய வந்து திசை தெரியாத ஒரு நாள் உறவு வெடிச்சா அப்பவும் சிரிக்கும். தமுக்குக் கொட்டிப் பிரியணுமா? அதனால் தான் ஒட்டாதயே இருக்கேன். உங்கம்மா நல்லவள். அவள் உலகத்தில் என் உலகத்தைத் திணிக்கக் கூடாதுன்னு தள்ளி நிக்கறேன்."

"இனி வரவே மாட்டியா?"

"அப்படி ஒண்ணும் இல்லே. அவசியமானால் போவேன். இழைஞ்சு இழிவு படறதைவிட விலகி நடக்கறது நல்லது!"

முரளி உட்கார்ந்தான். தலை குனிந்தான். முகம் பொத்திக் கொண்டான்.

"என் சுயநலத்தைக் காட்ட ஒரு சின்ன ப்ரஸெண்ட்," லலிதா ஓர் உறையை அவனிடம் நீட்டினாள்.

"எனக்கா?"

"இல்லே. உங்கம்மாவுக்கு."

"என்னது?"

"ஒரு கலர் டீ. வி. எனக்கு வந்த ப்ரஸெண்ட். நம்ம கல்யாணத்துல பாம்பே சிநேகிதி கொடுத்தது. அம்மாக்கிட்டே கொடுங்கோ. தனியாக இருக்கிற அவளுக்கு உதவியா இருக்கும்."

"லலிதா ..."

"நான் கெட்டவள் இல்லே முரளி."

"புரியுது லலிதா."

புரிதல் என்பது பெரிய வார்த்தை. அதை முரளி புரியாமல் சொன்னான்.

(தொடரும்)

அடுத்த இதழ்!

பசும்பொன் மாவட்டத்தில் கல்கி—I



இந்தப் பெண்ணின் சோகக் கதை!

பசும்பொன் மாவட்டம்;
பிரமாதங்கள்; பிரஸ்தாபங்கள்;
பிரச்னைகள் ......

— ஒரு ரவுண்ட் அப்



கனிமத் தொழிற்சாலைக்குப் போராடும் கிராமங்கள்

— ஸ்பெஷல் ரிப்போர்ட்



இடைவெளி

ரிஷபன்

வீட்டுக்குள் நுழைந்தவனை வியப்புடன் பார்த்தாள்.

''சீக்கிரமா திரும்பிட்டீங்க?''

அவனைப் பார்க்கும் போது அவளுக்கு மட்டும் மனசுக்குள் உறுத்தியது. காலையில் ஒரு சச்சரவுடன்தான் கிளம்பியிருந்தான், நண்பனின் திருமணத்திற்கு.

''ம்... ம்...'' என்று முனகினான். அவள் நீட்டிய டம்ளரை வாங்கி நீரைக் குடித்தான். மத்தியான வெயிலில் வறண்டிருந்த நெஞ்சு குளிர்ந்தது.

''கல்யாண மண்டபத்தைக் கண்டுபிடிக்க முடிஞ்சுதா?''

''ம்...'' என்றான் மீண்டும்.

ஒருவேளை, அவனுடைய கோபம் இன்னும் தணியவில்லையோ என்று குழப்பத்துடன் பார்த்தாள். அவன் பார்வை விலகிக் கீழே தாழ்ந்தது.

''சாப்பிடறீங்களா?'' என்றாள், என்ன கேட்பது என்று புரியாதவளாய்.

''வேண்டாம்'' என்றான் முனகலாக.

ஷர்ட்டைக் கழற்றி ஹேங்கரில் தொங்க விட்டான். மின்விசிறி சுழன்று மேலும் உஷ்ணக் காற்றைப் பரப்பியது. வாசல் கதவைத் தாளிட்டுவிட்டு வந்தாள். பிரித்து வைத்திருந்த வார இதழைக் கையில் எடுத்துக் கொண்டாள். அவனைப் பார்த்தாள். ஏதோ யோசனையில் அவன் மூழ்கி இருந்தான்.

''உங்கள் நண்பர் என்ன சொன்னார்?''

''எதுக்கு?''

''இல்லே... முதல் நாளே வரலியேன்னு...''

''ஊஹூம். சடங்கு எதுவும் இல்லே.

ரொம்ப சிம்பிள் மேரேஜ். மாலை மாத்திக் கிட்டாங்க. தாலி கட்டினாங்க. அவ்வளவு தான். அரை மணியில் எல்லாம் முடிஞ் சிருச்சு.'' கொஞ்சம் சகஜமாகப் பேச முடிந் தது அவனால்.

வார இதழைக் கீழே வைத்துவிட்டு அவனை நெருங்கி அமர்ந்தாள். தலைமயிரை விரல்களால் தள்ளிப் பின்புறமாகக் கோதி விட்டாள். இயல்பான மனநிலையில் இருக் கும்போது அப்படித்தான் செய்வாள் என்று அவனுக்குத் தெரியும்.

''பொண்ணு நல்லா இருக்காளா?''

''சுமார்தான்...'' என்றான் கண்களில் குறும்பு மின்ன. ''உன்னை மாதிரி இல்லே.''

சிணுங்கினாள். வாடிக்கையான உரையாடல்தான் இது. எந்தப் பெண்ணாக இருந்தாலும் உனக்கு ஈடில்லை என்று அவன் தவறாமல் சொல்வதுதான். இருந்தாலும் அவ ளுக்குள் பூரிப்பு வரும்.

''அப்புறம்...''

''ஏதாவது அட்வைஸ் சொல்லுன்னான். என்ன சொல்ல? கணவன் மனைவிக்குள்ளே ஒளிவு மறைவு, ரகசியம் கூடாது. எதையும் மனம் விட்டுப் பேசணும். அப்பதான் வாழ்க்கை நல்லா இருக்கும்னேன்.''

மீண்டும் அவனைக் குற்ற உணர்வு அப்பிக் கொண்டது. கண்கள் இடுங்கின.

''என்னங்க?''

''ஸாரிம்மா. காலையில் நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது...''

''ச்சே... அதை நான் அப்பவே மறந் துட்டேன்.''

''சட்டுன்னு ஏதாவது பேசிடறேன்.'' என்றான் மனத்தாங்கலுடன். ''செல்வம்... என் மேல் கோபமில்லையே?''

''பை... த்தியம்...'' என்று கன்னத்தைத் தட்டினாள்.

அவனையே உற்றுப் பார்த்தான்.

''நிஜமாகவே என்மேல் கோபமில் லையா?''

''சட்டுன்னு உங்களுக்குப் பொறுமை போயிடும். உங்க சுபாவம் அது. அதைப் புரிஞ்சுக்கிட்டதால எனக்குத் தப்பாத் தோணலே.''

மனசு கொஞ்சம் இலேசானது. அவளை அருகில் இழுத்து இருத்திக் கொண்டான். கன்னத்தின் மென்மை உதடுகளில் புலப்பட் டது.

''மெத்துன்னு இருக்கு...''

''ம்'' சிரித்தாள்.

காலை முதல் முனகிக் கொண்டிருந்த மனத்தின் ஈகோ விலக, இளகிய உணர்வு களுடன் அவள் அணைப்பில் கரைந்திருந் தான் சில நிமிடங்கள்.

''செல்லம்...'' கிசுகிசுத்தான். ''என்னைப் பற்றி உனக்கு என்ன தோணுது?''

''அப்படீன்னா?''

''என்னை விமர்சியேன்...''

''எதுக்கு...?''

''இல்லே... என் மனசுல என்னைப் பற்றி ஒரு அபிப்பிராயம் இருக்கு. அது சரியா, தப்பான்னு எப்படித் தெரிஞ்சுக்கிறது?''

''ரொம்ப நல்லவர். குழந்தை மாதிரி சுபா வம்...''

உள்ளூர கிளுகிளுப்பாக இருந்தது. இருந் தாலும் மனசுக்குள் ஏதோ நெருடியது.

''பொய்... மனசு விட்டுச் சொல்லு...''

''நிஜம்தான்.''

''சரி, இரு. பாதி சொல்லிட்டே. மீதி? இங்கே பாரு... எனக்கு எப்பவுமே, எதை யுமே மனசு விட்டுப் பேசணும். அதுதான் பிடிக்கும். காலையிலே நீ செஞ்சது சரியில் லேன்னு மனசுல பட்டுது. மறைக்காமே என் னோட முணுமுணுப்பை, அதிருப்தியைக் காட்டினேன். இப்போ, என் மனசுல எதுவும் இல்லே. கடுமையான வார்த்தை களை உபயோகப்படுத்தினதுக்காகக் கொஞ் சம் வருத்தம். அவ்வளவுதான்... என்னை விமர்சனம் பண்ணுன்னு நானே கேட் கிறேன்... அதனால்தானே சொல்லப் போறே. தைரியமாச் சொல்லேன். தப்பா எடுத்துக்க மாட்டேன்.''

அவன் கண்களில் பிரதிபலித்த ஆர்வத் தைப் பார்த்தாள்.

''ம்ம்... என்ன சொல்லணும்?'' என்றாள், இந்தப் பேச்சை ரசித்தவளாய்.





"என்னது...! நீங்க போட்ட புத்தகம், ரெண்டே நாள்லே, எல்லா 'காப்பியும்' வித்துடுச்சா...! என்ன தலைப்பு சார்...?"

"ராஜராஜன் விருது பெற, பத்து வழிகள்!"

—ஆர். வசந்தகுமார்.



"குடிதண்ணீர் பிரச்னையை எப்படித் தான் சமாளிக்கப் போறீங்க?"

"வெளிநாட்டிலே இருந்து மழையை வரவழைக்கலாமான்னு யோசிச்சுட்டு இருக்கோம்!"

— சடுவை கோபால்சாமி



"பியூன் வேலையிலிருந்து ரிடயர் ஆன உன் அப்பா, என்ன செய்யறார்?"

"லஞ்சம் வாங்குவது எப்படின்னு கற்றுத் தர கன்ஸல்டேஷன் கம்பெனி நடத்தறார்!"

— ஆர். வசந்தகுமார்

"என்னைப் பற்றி உன் மனசுல என்ன வருதோ அவ்வளவும்."

"நீங்க சொல்லுங்களேன், என்னைப் பற்றி?"

"பேச்சை மாற்றாதே."

"முதல்லே நீங்க..."

தன்னைப் பற்றி அவள் பேச வழி செய்யுமே என்ற எதிர்பார்ப்பு அவனுக்கு வந்தது.

"ரொம்ப அண்டர்ஸ்டாண்டிங். பொறுமை. அழகு. இதெல்லாம் பிளஸ் பாயிண்ட்ஸ். கொஞ்சம் ஸ்லோ. என்னோட அவசரத்துக்கு ஈடுகொடுக்கிறது இல்லே. இது மைனஸ். இப்ப என்னைப் பற்றி..."

"பிளஸ் பாயிண்ட்ஸ் சொல்லிட்டேன். மைனஸ் உங்க முன்கோபம். மனசு புண்படற மாதிரி சட்டுன்னு ஏதாவது வாயில வந்துடும். அப்புறம் ஃபீல் பண்ணுவீங்க."

"சரி... அழகு?"

"நல்ல பர்சனாலிடி."

"பொய். குறையா ஒண்ணுமே இல்லையா?"

தயங்கிவிட்டுச் சொன்னாள்.

"உங்க மூக்கு. கொஞ்சம் சின்னதா, ஷார்ப்பா இருக்கலாம். உங்க உயரம் இன்னும் கொஞ்சம் இருக்கலாம். ஆனால் அழகு எனக்கு முக்கியம் இல்லே. மனசு தான்..."

மேலே அவள் என்ன பேசினாள் என்பது அவன் காதுகளில் விழவில்லை. ஏதோ யோசனையுடன் சற்றுத் தள்ளி அவன் படுத்துக் கொண்டதையும் அவள் கவனிக்கவில்லை.

அவள் திரும்பிப் பார்த்த போது கண்களை மூடிப் படுத்திருந்தான். அசதி என்று நினைத்தாள். தன்மேல் படிந்திருந்த கையை மெல்ல எடுத்துக் கீழே வைத்தாள்.

மாலை ஐந்தரை மணி.

ஏற்கெனவே முடிவு செய்தபடி ஷாப்பிங் கிளம்பினார்கள். அவள் ஏதேதோ பேசிக் கொண்டே நடந்தாள். அவள் அருகே நடந்து வந்தவன் திடீரெனத் தன்னிச்சையாக மூக்கை வருடிக் கொண்டான்.

'கொஞ்சம் சின்னதா இருக்கலாம்...!'

அவனால் இயல்பாக நடக்க முடியவில்லை. ஸ்டாப்பில் பஸ்ஸுக்காகக் காத்திருந்த போது, அவள் சொன்னது அவன் காதில் விழவில்லை. அருகில் நெருங்கி வந்து மறுபடியும் சொன்னாள்.

அவ்வளவு அண்மையில் பார்த்த போது தன் உயரம் அவ்வளவு அதிகமில்லை என்பது போல் மனத்தில் பட்டது. சட்டென்று இடுப்புக்குக் கீழ் கால்கள் தொய்ந்து உயரக் குறைவான பிரமை தட்டியது அவனுக்குள். சற்றுத் தடுமாறினான். தான் நினைப்பது போல விமர்சனத்தைத் தாங்குகிற சக்தி தன்னிடம் இல்லையா?


தூரத்தில் டவுன் பஸ் வந்து கொண்டிருந்தது.

சுதந்திரமாகச் சிரிப்போம்!













ஆடுவோமே.. பள்ளுப் பாடுவோமே..
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று..
ஜனங்களுடைய சுதந்திரம் வர வரக் குறைஞ்சுட்டே வருதே! அதான் கொடியும் வர வர சிறுத்துக் கிட்டே வருது!
மந்திரிக்குக் கொடியேத்துறதிலே தான் சிக்கல்!.. விலைவாசியை ஏத்துறதுலே சிக்கலே கிடையாது! 'கிடு கிடு'ன்னு ஏத்திப்புடுவார்!
நாப்பதாண்டுச் சுதந்திரத்தில் மின் உற்பத்தியில் நாம் புரிந்துள்ள சாதனையைக் கண்டு உலகமே வியக்கிறது!
அமைச்சரின் பேச்சை முழுமையாக ஒளிபரப்ப இயலாமல் போனதற்காக மன்னிப்புக் கேட்கும் சுதந்திரத்தை தூர்தர்ஷன் நிலையத்திற்கு வழங்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

40 ஆண்டு சுதந்திரத்தில் நாம் கண்டதென்ன?





ராதா ராவ்

(முதல்வர், அண்ணா ஆதர்ஷ் மகளிர் கல்லூரி)

கல்வித் துறையில் நாம் நிறையவே முன்னேறி இருக்கிறோம். கல்வி பெற்றவர்கள் சதவீதம் சுதந்திரத்துக்குப் பின் மூன்று மடங்கு உயர்ந்திருப்பதாய்ப் புள்ளி விவரங்கள் சொல்கின்றன. ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்கி, சத்துணவு மூலம், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் எண்ணிக்கையைக் கணிசமாக உயர்த்தி, இளம் பிஞ்சுகளின் இடமான உடல் வளர்ச்சிக்கு வழி செய்துள்ளோம். அஞ்சல் வழிக் கல்வி மூலம் பயனடைந்து வருபவர்கள் பல்லாயிரம். திறந்தவெளிக் கல்விமுறை, முதியோர் கல்வி இவை நல்ல பலனளித்துள்ளன. ஆனாலும் இன்னும் நம் கல்லூரிகளும், பள்ளிகளும், வெள்ளைக்காலர் உத்தியோகத்துக்கு ஆசைப்படும் 'இளைய' தலைமுறையையே உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. சொந்தக் காலில் நிற்க வைக்கும் தொழிற் கல்வியில் முன்னேற்றம் அதிகமில்லை. இந்த வேதனைக்குரிய நிலைமை நீடிக்கும்வரை வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவே முடியாது.

ராவணன்

(நேஷனல் அதலெடிக் கோச்)

நாமும் ஒலிம்பிக்ஸிலும், ஏஷியாடிலும் பதக்கங்கள் வாங்கிக் கொண்டிருக்கிறோம். நாற்பதுகளில் இந்தியாவின் நெம்பர் ஒன் அதலெட்டின் ரெக்கார்டு, இப்போதைய

நெம்பர் ஒன் ரெக்கார்டு, இரண்டையும் ஒப்பிட்டால், முன்னேற்றம் இருப்பது தெரியும். ஆனால், மற்ற நாடுகளின் சாதனையுடன் நாம் போட்டி போட முடியவில்லை. விளையாட்டுத் துறையில் ஏகப்பட்ட பாலிடிக்ஸ்: இளம் வயதில் திறமைகளைக் கண்டறிந்து, முறையான பயிற்சி தருவது என்பதே இங்கே கிடையாது. ஒரே ஒரு உஷாவை எத்தனை நாட்கள் நம்பிக் கொண்டிருப்பது? உஷா, ஷைனியை விட்டால்... அப்புறம் யார்? ஹாக்கியாகட்டும், கால்பந்தாகட்டும், உலக டீம்களோடு நம்மால் போட்டி போட முடியவில்லை. ஏதோ கிரிக்கெட்டில் கொஞ்சம் நல்ல பெயர். ரமேஷ் கிருஷ்ணன், பிரகாஷ் படுகோன், விஸ்வநாதன், ஆனந்த்— இவர்கள் புகழ் எல்லாம் தனி மனித முயற்சியின், திறமையின் விளைவு தானேயொழிய, அரசாங்கம் அளித்த ஊக்கத்தால் இல்லை. இத்தனைக்கும் விளையாட்டுக்கு நிதியும் கணிசமாய் ஒதுக்கிக் கொண்டிருக்கிறோம் — இந்த ஆண்டு 350 கோடி ரூபாய்! ஆனால் இத் தொகை முறைப்படி செலவழிக்கப்படாதது தான் வேதனை.

கமலா மோதிலால்

(குடும்பத் தலைவி)

நாற்பதாண்டு சுதந்திர இந்தியாவில் இன்று நாம் காண்பது, இயந்திர கதியில் இயங்கும் மனித வர்க்கத்தைத்தான். முன்பிருந்த தேசப்பற்று, ஒருமைப்பாட்டு உணர்வு இவை போய்ச் சுயநலமும், பிராந்திய வெறியுணர்வுமே மேலோங்கி இருக்கின்றன. மனித நேயமும், சேவை மனப்பான்மையும் அற்றுப் போய் விட்டன. அஞ்ச வேண்டிய மற்றொரு விஷயம் அபரிமிதமான மக்கள் தொகைப் பெருக்கம். எத்தனை வருமானம் வந்தாலும் மத்திய தரக் குடும்பங்களுக்குப் பற்றாக்குறைதான். இப்படி விலைவாசி உயர்வு நம்மை அடிமைப்படுத்தும் போது சுதந்திரம் என்பதே அர்த்தமற்றுப் போகிறது.

கற்பகம்

(கல்லூரி மாணவி)

சுதந்திர இந்தியா, இன்று சயன்ஸ் மற்றும் டெக்னலஜியில் கண்டுள்ள முன்னேற்றம் பிரமிக்கத்தக்கது. அணுமின் நிலையங்கள், பெருந்தொழிற்சாலைகள், தொலைதூரத் தொடர்புச் சாதனங்கள், விண்கலங்கள் ஏவுதல், கம்ப்யூட்டர் துறை என்று பலவற்றிலும் அரிய சாதனைகள் புரிந்திருக்கிறோம். மருத்துவ உலகில் ஏகப்பட்ட சாதனைகள் அம்மை, மலேரியா போன்ற நோய்கள் முற்றிலுமாய் ஒழிக்கப்பட்டு விட்டன; இறப்பு விகிதம் குறைந்து விட்டது; காலரா, பிளேக், வந்து ஊரே மாளும் கொடுமை இன்று இல்லவே இல்லை. சோதனைக் குழாய்க் குழந்தையை உருவாக்குமளவுக்கு முன்னேறி





• உஷா சுப்ரமணியன்





• கற்பகம்



* என். ஸ்ரீராம்

* அஞ்சலை



யுள்ள அதே விஞ்ஞானம்தான், பரிசோதனைகள் மூலமாகப் பெண் குழந்தைகளைக் கருவிலேயே கண்டுபிடித்து அழிக்கவும், கற்றுத் தருகிறது! இது தலைகுனிவை ஏற்படுத்துகிறது.

அஞ்சலை
(கீரை விற்பவர்)

சுதந்திரம்னு என்னன்னு எனக்குத் தெரியாதுங்க... (நிருபர் சுதந்திரம் பற்றி விளக்கியதும்)... அதென்னமோ, எனக்குப் புரியலேங்க. நானும் முப்பது வருஷமா கீரை வித்துக்கினு இருக்கேன். அப்போல்லாம் தினம் நாலஞ்சு ரூபா கிடைக்கும்; பத்துப் பன்னிரண்டு வருஷத்துக்கு முன்னாடி ஏழெட்டு ரூபா தினம் கிடைக்கும். இப்போ, பத்துப் பதினைஞ்சு ரூபா கிடைக்குது. என் புருஷன், கூலி வேலைக்குப் போறாரு. எனக்கு மூணு புள்ளைங்க. எப்பவுமே எங்க பொழப்பு நிலையில்லாததுதாங்க. நாற்பது வருஷத்துல நான் வாழ்க்கைல 'முன்னேற்றம்' ஒண்ணும் பார்க்கலேங்க.

என். ஸ்ரீராம்
(ஜெனரல் மானேஜர், பாரதஸ்டேட் பாங்க்)

விவசாயத்துறையிலே, சுதந்திர இந்தியா பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. அரிசியும், கோதுமையும் பசுமைப் புரட்சியின் விளைவாய், தன்னிறைவு காணுமளவுக்கு விளைகிறது. பசியால் மக்கள் மாளும் கொடுமை முற்றிலும் ஒழிந்து விட்டது. வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பல செயல் படுத்தப்படுகின்றன. ஆனால் இதுவரை நாம் அதிக கவனம் செலுத்தாததும், கணிசமான அந்நியச் செலாவணியை விழுங்குவதுமான எண்ணெய் வித்துக்கள், சில பருப்பு வகைகளை இறக்குமதி செய்து கொண்டுதான் இருக்கிறோம். இவற்றின் உற்பத்திக்கு இப்போதுதான் நடப்பு ஐந்தாண்டு திட்டத்தில் — அதி முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. வங்கிகள் தேசிய மயமானபின், கிராமங்களில் கூட மக்கள் வங்கிகளின் சேவையைப் பெற முடிகிறது. இப்போது, ஐ. ஆர். டி. பி. போன்ற திட்டங்கள் மூலம், 'செக்யூ



* கமலா மோதிலால்

ரிட்டி' இல்லாமலேயே, ஏழை மக்கள் வங்கிகளில் கடன் பெற வசதிகள் உள்ளன. வரும் ஆண்டுகளில் இந்தச் சேவையில் இன்னும் நாம் முன்னேற முடியும்.

பக்ரி
(செருப்பு தைப்பவர்)


"ஒட்டு போடுவாங்களே! அதுதானே சார் சுதந்திரம்? நான் படிச்சது நாலே கிளாஸ் தான். பத்து வயசுல எங்க அப்பாவுக்கு ஒத்தாசையா, கையில் ஊசி பிடிச்சேன். இன்னி வரைக்கும் அதேதான். ஆறு வருஷங்களுக்கு முன்னால் கஷ்டப்பட்டு, ஐந்நூறு ரூபா பாங்க்ல கடன் வாங்கினேன்; அதையும், ஒழுங்காத் திருப்பிக் கட்டிட்டேன். இப்போ, நாலாயிரம் ரூபாய் பாங்க் கடன் கெடச்சா ஒரு 'பங்க்' போட்டுடலாம். ஆனால் இன்னிக்கு, நம்மைப் போல சாதாரண ஆசாமிங்களால பாங்க் லோன் வாங்க முடியலீங்களே சார்!

உஷா சுப்ரமணியன்
(எழுத்தாளர்)

கடந்த நாற்பது வருடங்களில் பெண்க

• ராதா ராவ்





• தளவாய்

ளுக்குச் சாதகமாய் நிறைய சட்டங்களை இயற்றியுள்ளோம். பெண் கல்வியைப் பெருக்க முயற்சி எடுத்துள்ளோம். பல துறைகளிலும் பெண்கள் சாதனைகள் புரிந்து வருகின்றனர். ஆனால் இன்னொரு பகுதியினர் வேதனையைத் தொடர்ந்து அனுபவிக்கின்றனர். இன்றைக்கும், பெரும்பாலான பெண்கள் அடுப்பெரியப் பயன்படும் விறகுகள் தான்! பிள்ளை பெறும் இயந்திரம்தான்! அரசு தரும் புள்ளி விவரங்கள் பொய்தான் சொல்கின்றன. இந்தச் சமுதாயத்தில் பெண்களின் நிலையை உயர்த்த ஒரு பாரதியோ ஒரு பெரியாரோ போதாது.

ம. பொ. சி.

சுதந்திரம் பெற்ற பிறகு இந்த நாற்பது ஆண்டுகளில் நாடு பிரமாதமான வளர்ச்சி பெற்றிருக்கிறது என்று கூறுவார்கள் ஆளும் கட்சியினர். முன்னேறவே இல்லை என்று வாதிடுவார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள். நான் இந்த இரு நிலைகளிலும் இல்லாமல் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவன் என்ற முறையில் தனித்து நின்று பார்க்கிறேன். முன்னேற்றம் தெரியாமல் இல்லை. ஆனால் காந்தியடிகள், ராஜாஜி போன்றவர்களின் எண்ணப்படி இன்றைய இந்தியா இல்லை என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். வடக்கோடு போட்டி போட்டுக் கொண்டு தெற்கே தொழில் வளம் பெருகியிருக்கிறது. சுதந்திரத்திற்குப் பின்னர் தனித் தமிழ் மாநிலம் கண்டதன் பலன் இன்று ஈழத் தமிழர்களுக்குக் குரல் கொடுக்க முடிகிறது. ஆனால் மிக வருத்தமானஒன்று. அரசியலில்தமிழ்ப்பண்பாட்டுக் கேற்ப நாம் இன்னும் உயரவில்லை. ஊழல், லஞ்சம் — இதற்கு ஆளாகாத இன்றைய அரசியல்வாதிகளே இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வலியுறுத்திச் சொல்வது தமிழ் மக்களே பண்பாட்டை மறந்து விடாதீர்கள் என்பதுதான்!

ஆர். எஸ். மனோகர்

(நாடகக் கலைஞர்)

அன்று நவாப் ராஜமாணிக்கம் தமது நாடகங்களில், (அது புராண நாடகமாக இருந்தாலும் கூட) தேசிய எண்ணங்களைப் புகுத்தி வந்தார். அப்போதெல்லாம்

• ராவணன்



'டெக்னிக்' முன்னேறவில்லை, ஆனாலும் பல மாயாஜாலக் காட்சிகளை மேடையில் நடத்திக் காட்டினார். இன்று மேடையில் எவ்வளவோ செய்து காட்ட முடியும். அந்த அளவுக்கு விஞ்ஞானம் முன்னேறியிருக்கிறது. ஆனால் நாடக உலகம் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

கலைகளை வளர்ப்பதற்குப் பல அமைப்புகள் இருக்கின்றன. ஆனால் நாடகக் கலையை அறவே புறக்கணித்து விட்டார்கள். இன்னும் சில வருடங்களுக்குப் பின்னர் நாடகக் கலை இருக்குமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. ரஷ்யாவில் கலைவிழா நடக்கிறது. நமது நாடகக் குழு ஒன்றைக் கூட அனுப்பவில்லையே, ஏன்?

மக்களை நேரடியாகப் பாதிக்கும் நாடகக் கலை மூலம் நாட்டு மக்களுக்கு இன்னும் நன்றாக விழிப்புணர்ச்சி ஊட்ட முடியும். அதைத் தான் நாடகக் குழுக்கள் செய்ய வேண்டும்.



மருதைப் பிள்ளை

(தொழிலதிபர்)

நாடு சுதந்திரம் அடைந்த பிறகு பல தொழில்களைத் துவங்க வேண்டுமென்று அன்று ஆட்சியிலிருந்தவர்களுக்கு உத்வேகம் இருந்தது.. அதன்படி, பல தொழிலதிபர்களும் ஒத்துழைத்து நாட்டைத் தொழில் வளமிக்கதாக்கினார்கள். இன்று தொழில் வளர்ச்சிக்கான சூழ்நிலை நன்றாக இருக்கிறது என்று நம்பிக்கையோடு சொல்ல முடியவில்லை. தொழில் வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதில் நாம் மிகவும் பின்தங்கி விட்டோம்.

1965 க்குப் பிறகு ஒரு தேக்க நிலை ஆரம்பித்தது. இன்று தொழில் துவங்க இருக்கும் எந்தத் தொழிலதிபரும் அரசியல் தலைவர்களின் வலைகளில் இருந்து சுலபமாகத் தப்பி வர முடியாது. இடையில் மத்திய அரசில் வி. பி. சிங் வர்த்தக அமைச்சராகவும், நிதியமைச்சராகவும் இருந்த காலம் தொழில் துறைக்கு நல்ல காலம் என்று சொல்லலாம்.

உற்பத்திக்கும் தேவைக்கும் தொடர்பே இல்லாமல் பல தொழில்கள் வளர்கின்றன. உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பதும் கவனிக்கத்தக்கது. இன்று சிமெண்ட், சணல், மருந்துகள், உரம், பேப்பர் ஆகியவற்றின் உற்பத்தி அதிகம். ஆனால் விலையும் எக்கச்சக்கமாக உயர்ந்திருக்கிறது. ஏன் இந்த முரண்பாடு என்பதை ஆட்சியாளர்கள் சிந்தித்து ஒரு முடிவெடுக்க வேண்டும். மேலும் ஏற்றுமதி விஷயத்தில் இன்னும் விதிகளைத் தளர்த்தி ஊக்கம் அளிக்க வேண்டும்.

பி. ஆர். தளவாய்

(தியாகி)

சுதந்திரம் கிடைத்த பிறகு எல்லோருக்கும் வோட்டுப் போடும் உரிமை கிடைத்தது. ஆனால் அந்த வோட்டின் மதிப்பு குடிமகனுக்குத் தெரியும் வகையில் கல்வி அறிவு ஊட்டப்பட்டதா? அப்படிச் செய்திருந்தால் ஊழல் செய்தவர்களையும் நாணயமற்றவர்களையும் மக்கள் ஏன் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள்?

இன்றைக்கு நமது நாட்டுப் பணம் வெளிநாட்டு வங்கிகளில் உறங்கிக் கொண்டிருக்கிறது. அன்று வெள்ளையன் நம்மைக் கொள்ளையடித்தான். இன்று நம்மவனே நம்மைக் கொள்ளையடிக்கிறான்.

நாற்பது வருடங்களுக்குப் பிறகும் அத்தியாவசியப் பண்டங்களுக்கு ரேஷன்! வோட்டுச் சீட்டில் பெயரைப் படிக்கத் தெரியாமல் சின்னத்தைப் பார்த்து வோட்டுப் போடும் மக்கள்!" 1967 க்குப் பிறகுதான் நிலைமை ரொம்ப மோசமானது.

இன்று அவசியமான தேவை, சுயநலமற்ற, பிரதிபலனை எதிர்பாராத சமூக சேவை செய்பவர்கள்தான். அப்படிப்பட்டவர்கள் சாமானியனிடம் சென்று அவனுடைய உரிமைகள், அவன் போடும் வோட்டின் மதிப்பு ஆகியவற்றை உணர்த்தினால்தான் நாடு உருப்படும்.

நா. பார்த்தசாரதி

சுதந்திரம் பெறுவதற்கு முன் — அந்நியரை எதிர்க்கும் இயக்கத்தின் போது இலக்கிய கர்த்தாக்களுக்கு இருந்த துணிவும் கொள்கை உறுதியும், தேச பக்தியும் இன்று எங்கே போயின என்று கேட்டுப் பார்க்கையில் நமக்குத் தயக்கம் ஏற்படத்தான் செய்கிறது. அன்றிருந்த அஞ்சாமையும் இன்றில்லை: அடக்கமும் இன்றில்லை.

எல்லா இந்திய மொழிகளிலும் தவிர்க்க முடியாதபடி இலக்கியம் வளர்ந்துதான் இருக்கிறது. இலக்கிய கர்த்தாக்கள்தான் வளரவில்லையோ என்று சந்தேகமாயிருக்கிறது.

இலக்கியத்தில் அடக்கமே இல்லாத முரட்டுத் துணிவும், துணிவே இல்லாத ஆட்டு மந்தைத்தனமான அடக்கமும் அபாயமானவை. துணிவும், நேர்மையுமுள்ள எழுத்தாளர்கள்தாம் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் கட்டிக் காக்க முடியும்.

இன்று பட்டம், பதவி, பரிசுகளுக்காக ஆட்சியாளர்களின் தவறுகளுக்குக் கூட நற்சான்றிதழ் வழங்கி நிற்கிறவர்கள்தான் அதிகமோ என்று தோன்றுகிறது.

கடந்த நாற்பது ஆண்டுகளில் ஒவ்வொரு மொழியிலும் பல ஆயிரம் புத்தகங்கள் — பல நூறு எழுத்தாளர்கள், பல லட்சம் வாசகர்கள் உருவாகியிருக்கக் கூடும். ஆனால் 'இந்தியாவை — அதன் ஜனநாயக, சுதந்திர நிலையை மனிதாபிமானத்தை வளர்க்கும் எழுத்து எவ்வளவு என்று எடை போடும்போதுதான் சிரமம். எல்லா வளர்ச்சிகளிலும் சில தளர்ச்சிகளும் சேர்ந்தே நிகழ நேரும். நமது நாற்பதாண்டு இலக்கிய வளர்ச்சியும் அப்படித்தான். பிரமாதமான திறமைகள் புறக்கணிக்கப்பட்டிருக்கலாம். சுமாரான திறமைகள் கௌரவிக்கப்பட்டிருக்கலாம். சகஜம்தான்.

ஆனால் இலக்கியத்துக்கு ஓர் அபாரமான ஆற்றல் உண்டு. நாற்பதாண்டுகள் அல்ல நானூறு ஆண்டுகள் கழிந்தாலும் ஆற்றலுள்ளது மேலெழுந்து நிற்கும், ஆற்றலற்றது கீழே மூழ்கி அமிழும்.

புகைப்படங்கள்: **ஆனந்த், சோமு.**

தொகுப்பு: **ப்ரியன், எஸ். சந்திரமௌலி.**



the wind

ஒரு பெண் எழுத்தாளர் தனியாக ஓரிடத்தில் அமர்ந்து எழுத வேண்டும் என்பதற்காகச் சொந்த ஊரை விட்டு, கணவனைப் பிரிந்து, பாறைகள் நிறைந்த ஒரு பழைமையான ஊருக்கு வந்து, ஒரு தனி வீட்டை வாடகைக்குப் பிடிக்கிறார். வீட்டை வாடகைக்கு விடும் ஆசாமி, 'இரவு நேரத்தில் பயங்கரமான காற்றடிக்கும், வீட்டை விட்டு வெளியே தலை காட்டாதே' என்று எழுத்தாளரை எச்சரிக்கிறார். அந்தப் பழைமையான ஊர் கல் கட்டடங்களுடன், வளையும் பாதைகளுடன் ஓவியம் போல் அழகு.

இதுவரை கதையில் லாஜிக் இருக்கிறது. அப்புறம்தான் கதை அந்தப் பழைமையான ஊரின் கோணல் மாணலான திருப்பங்களைப் போலத் தானும் திரும்ப ஆரம்பித்து விடுகிறது.

வீட்டுச்சொந்தக்காரருக்கு ஒரு மனநிலை சரியில்லாத வேலைக்காரன். அந்த வேலைக்காரன் வீட்டுச் சொந்தக்காரரைச் சாகடித்துப் புதைக்கிறான். அப்படிப் புதைப்பதை எழுத்தாளர் பார்க்கிறார். இவர் பார்ப்பதை கொலையாளியும் பார்க்கிறான். எனவே எழுத்தாளரைக் கொல்ல முயற்சி செய்கிறான். நடுவில் வீட்டுச் சொந்தக்காரரின் மனைவியைக் கொல்கிறான். எழுத்தாளரைக் காப்பாற்ற வந்த இன்னொரு துப்பாக்கி ஆசாமியைத் தீர்த்துக் கட்டுகிறான். கடைசியில் எழுத்தாளரை நெருங்குகையில் காற்று அவனைக் கொன்று விடுகிறது!

ஹலோ, உங்களைத்தானே... ப்ளீஸ் சிரிக்காதீர்கள். இது தமிழ்ப்படம் போலக் காட்சி அளிக்கும் ஆங்கிலப் படம். ஆங்கிலப் படம் என்பதற்காகவாவது மதிப்புக் கொடுக்க வேண்டாமா?

முக்காலே மூணு வீசம் படமும் இருட்டிலேயே நகர்ந்து விடுவதால் போட்டோகிராபி நன்றாக இருக்கிறது என்று சொன்னால் யாரும் கேள்வி கேட்கப் போவதில்லை.

காற்று, காற்று என்று ஆரம்பத்திலிருந்து சொல்கிறார்கள். காற்று என்னவோ அவ்வளவு பயங்கரமாகக் காட்டப்படவேயில்லை. ஒரு மரத்தின் வீழ்ச்சி, ஒரு நீர்வீழ்ச்சி இடம் மாறி வீழ்தல், என்று எதையாவது காட்டி, 'காற்றின் பயங்கரத்தை அதிகப்படுத்தியிருந்தால் க்ளைமாக்ஸை ஒத்துக் கொண்டிருக்கலாம்.

அவ்வளவு பெரிய ஊரில், என்னதான் இரவு நேரமென்றாலுங்கூட ஒரு வீட்டு ஜன்னல் கூடவா திறக்காது? ஓர் ஆசாமி கூடவா இந்தக் கொலைகாரன் நட்டநடுத் தோட்டத்தில் ஓர் உடலைப் புதைப்பதைப் பார்க்க மாட்டான்?

அப்புறம் காப்பாற்ற வருகிறாரே ஒரு துப்பாக்கி ஆசாமி, அவர் வரும் நேரத்தில் கொலைகாரன் தனியாக எப்படி இரண்டு உடல்களையும் இடம் மாற்றுகிறான்?

நடித்திருப்பவர்கள் எல்லோரும் இயல்பாக நடித்திருக்கிறார்கள்.

டைரக்டர்தான் விட்டார் கோட்டை!

— ஜெயமன்மதன்

2

ராஜாஜி வாழ்க்கை வரலாறு — IV

ராஜ்மோகன் காந்தி

கவர்னர் ஜெனரல் மாளிகையின் பல ஏக்கர் தோட்டத்தில் இரண்டு பங்களாக்கள் முன்பு அவருடைய அதிகாரிகளின் இல்லங்களாக இருந்தன. அவை இப்போது இரு அமைச்சர்களின் இல்லங்களாக மாறின. தவிர, பிரதம மந்திரி காரியாலயத்தின் ஒரு பகுதிக்கும் ஒரு தொல் பொருள் காட்சியகத்துக்கும் அரசினர் மாளிகை வளாகத்தில் இடம் ஒதுக்கப்பட்டது. டேராடூன் அருகே ஒரு காடு வைஸ்ராய்கள் வேட்டையாடுவதற்கென்றே இருந்தது. அது இப்போது வன



விலங்கு சரணாலயமாக மாறியது. கவர்னர் ஜெனரலின் பிரத்தியேக வாத்திய கோஷ்டி (பாண்டு) கலைக்கப்பட்டது. மாளிகைத் தோட்டத்தில் பல ஏக்கர் விஸ்தீரணத்துக்குச் சோளமும் காய்கறிகளும் பயிரிடப்பட்டன. சில சமயம் ஸி. ஆர். கையில் மட்டை ஏந்தி டென்னிஸ் கோர்ட்டுக்குப் போய் ஆடுவார். பிலியர்ட்ஸ் டேபிளில் தமது திறமையை அவர் காட்டியதும் உண்டு. ஆனால் நீச்சல் குளத்தின் அருகே போகவே மாட்டார்! தமது மெய்க்காவலர்கள் துப்பாக்கிப் பயிற்சி பெறும் இடத்துக்குப் போவார். அசல் தோட்டாக்களையே போட்டுத் தருமாறு கேட்டுப் பெற்றுக் குறி பார்த்துச் சுடுவார்! ஒரு நிபுணனைப் போல் அவர் துப்பாக்கியைக் கையாண்டதாக எழுதுகிறார் சட்டர்ஜி.

அவரது உடை எப்போதும் போல் மிக எளிமையாகவும் தூய்மையாகவும் இருந்தது. அன்றைய அயல்நாட்டுக் காரியதரிசி கே. பி. எஸ். மேனன் இதுபற்றிக் குறிப்பிட்டு எழுதுகிறார்: "அயல் நாட்டுத் தூதர்கள் ராஜாஜியின் தோற்றத்திலும் சுபாவத்திலும் கவரப்பட்டது மட்டுமல்ல, அவற்றுக்கு அடிமையானார்கள் என்றே கூறலாம். அவருக்கும் அவருடைய ராஜாங்க விருந்தினருக்கும் இடையில் தோற்றத்தில் இருந்த வேற்றுமை திடுக்கிடச் செய்வதாகவே விளங்கியது! விருந்தினர்கள், தங்க இழைகள் ஓடும் சீருடை அணிந்து தகதகப்பார்கள். மெடல்களையும் விருதுப் பதக்கங்களையும் ஏராளமாக மாட்டிக் கொண்டு வருவார்கள். ஸி. ஆரோ அப்பழுக்கற்ற, தூய வெள்ளைக் கதராடை புனைந்திருப்பார். இது அவர்களுடைய ஆடம்பர ஆடைகளை ஊடுருவி, அவர்களது உள்ளத்தைக் கண்டறிய ஸி. ஆர். முயல்வது போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தியது! அதே நேரத்தில் வந்திருக்கும் விருந்தினருக்கு இதனால் ஒருவிதத் தர்மசங்கடமும் உண்டாகவில்லை; மாறாக, அவர்கள் மனம் குளிர்ந்து ஸி. ஆருடன் உளமார இசைந்தார்கள். கவர்னர் ஜெனரல் அருகே இருப்பதால் ஏற்படுகிற தயக்கத்தை எளிதாகத் துறந்து, முதிர்ந்த அறிவுடைய, வயதான, அன்புக்குரிய ஒருவருடன் பேசுவது போல் நெருக்கமாய் உணர்ந்தார்கள்."

காமன்வெல்த்தில் தொடர்ந்து இந்தியா அங்கம் வகிப்பதை ஆட்சேபிக்கும் வகையில் சோவியத் தூதர் ஸி. ஆரின் பதவி ஏற்பு வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை. சில காலம் சென்று அவரைச் சந்தித்த போது, இதுகுறித்து ஸி. ஆர். விசாரிக்க, நோவிகோவ், நேரடியாகப் பதில் கூறாமல், "அன்று ரொம்ப உஷ்ணமாக இருந்தது; என் சீருடையைப் போட்டுக் கொண்டிருந்தால் வெந்து புழுங்கிப் போயிருப்பேன்... அதனால்தான்..." என்று கூறிச் சமாளிக்கப் பார்த்தார்.

"எங்களுடைய சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப நீங்களும் என்னைப் போல் உடையணிய வேண்டும்! ஒரு ஜதை வேஷ்டி ஜிப்பா அனுப்பி வைக்கவா?" என்று ஸி. ஆர். குறும்பாகக் கேட்டார்.

தோட்டத்தின் புல் தரையில் ஒருசமயம் தேநீர் விருந்து நடந்து கொண்டிருந்தபோது வானில் ஒரு பச்சைக் கிளிக் கூட்டம் பறந்து சென்றது. ஸி. ஆர். அவற்றின் 'கீ, கீ' ஒலி கேட்டு அண்ணாந்து பார்த்தார். அதைக் கவனித்த விருந்தினர் ஒருவர், "என்ன அற்புதமான காட்சி! இங்கே பக்கத்தில்தான் எங்கேயாவது அவற்றின் கூடுகள் இருக்க வேண்டும்." என்றார்.

ஸி. ஆர். சொன்னார்: ''அவற்றின் விலாசம் என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் ஒவ்வொரு நாளும் காலையில் இவை பாலம் (விமான நிலையப் பகுதி) நோக்கிப் பறக்கின்றன. மாலையில் இந்நேரத்தில் திரும்பி வருகின்றன. நேரம் தவறாமல் அவை இயங்குவதைப் பாருங்கள். ஒரே வேகத்தில் ஒரே மாதிரி அணிவகுப்பில் பறந்து செல்கின்றன. தலைவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றன. அறிவாளிகளான சில மனிதர்களை இப்படித் தரையில் வேகமாக ஓடச் சொல்லுங்கள்! ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்வார்கள்! இவை மோதிக் கொள்வதே இல்லை! கம்பு அல்லது கேழ்வரகுத் தோட்டத்தில் இவை இறங்குவதைப் பார்க்க வேண்டுமே! திடீரென்று இயக்கம் நின்றாலும் கதிரின் மீது மிருதுவாக அமரும்! அவை இருப்பதே விவசாயிக்குத் தெரியாமல் அவற்றின் பசுமை நிறம் காப்பாற்றுகிறது!''

''பறவைகளை ஆராய்வது உங்கள் பொழுதுபோக்கா?'' என்று விருந்தினரில் ஒருவர் வினவினார்.

''நான் மனிதர்களை ஆராய்பவன். ஆனால் இவை கவர்னர் ஜெனரல் பயிரிடும் வயலுக்கு வருகின்றன. எனது அன்றாடக் காரியங்களின் நேரமும் அவற்றின் நேரமும் ஒத்துப் போகின்றன!'' என்றார் ஸி. ஆர்.

அப்போது நாட்டில் உணவுப் பற்றாக் குறை இருந்தது. எனவே கவர்னர் ஜெனரல் மாளிகைத் தோட்டத்தின் பல ஏக்கர் நிலப் பரப்பில் தானியங்கள் பயிரிடச் செய்தார் ஸி. ஆர். இதனால் மாளிகையின் அழகிய

சாட்சியாக!

மலர்த்தோட்டமும்பசும்புல்தரையும்பாழாகி விடும் என்று கருதிய சிலர், இதனை ஆட்சேபித்தனர். ''கவர்னர் ஜெனரல் நிலத்தை உழுவதா? பதவிக்குரிய கண்ணியத்தைக் காப்பாற்ற வேண்டாமா?'' என்றும் சிலர் கேட்டனர்.

''ஜனகர் தமது அரண்மனைத்தோட்டத்தை உழுத போது அவருடைய கண்ணியம் குலைந்து விடவில்லை'' என்று பதில் கூறினார் ஸி. ஆர். உணவுப் பற்றாக்குறை சமயத்தில் மலர்த் தோட்டங்களைப் பற்றிக் கவலைப் படுவோருக்கு அவர் சொன்னார்: ''ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் யாரும் கண்ணாடிக்கு எதிரே நின்று தங்களை அழகுபடுத்திக் கொண்டிருக்க மாட்டார்கள்; ஓர் அவசரத்துடன் ஆபத்தைச் சமாளிக்கத்தான் முற்படுவார்கள்!''

இப்படிக் கூறினாரேயொழிய ஸி. ஆர். மலர்த் தோட்டத்தை அழித்து விடவில்லை. அவரது தானியப் பயிர்களெல்லாம் மலர்த் தோட்டங்களிலிருந்து வெகு தூரத்தில் இருந்தன. மலர்களின் மீதும் அவர் அன்பு செலுத்தினார் என்பது நவரத்ன ராமராவுக்கு அவர் எழுதிய ஒரு கடிதம் உணர்த்துகிறது:

''மலர்த் தோட்டம் வாடிக் கிடக்கிறது. இளவேனில் பருவமும் அத்துடன், செடிகள் பூத்துக் குலுங்கும் காட்சியும் முடிவடைந்து விட்டன. இதற்கு முன் என் வாழ்நாளில் இத்தகைய மலர்ச் செல்வத்தை நான் அடைந்ததில்லை. சில காலமாக அனுபவித்து வருகிறேன். அதனால் இப்போது இவை வெயிலில் மங்கி, வாடி வதங்குவதைக் காண வருத்தமாய் இருக்கிறது.''

அவ்வளவு பெரிய மாளிகையில் ஒரு சிறிய அறையைத் தமக்கென்று தேர்ந்தெடுத்திருந்தார் ஸி. ஆர். அதில் இரண்டு படங்களே சுவரை அலங்கரித்தன: ராமகிருஷ்ண பரமஹம்ஸர்; காந்திஜி. கவர்னர் ஜெனரல் மாளிகை ஊழியர்களை நடத்தும் விதத்தில் ஸி. ஆர். அன்பையும் பொழிந்தார்; கண்டிப்பும் காட்டினார்.


ஓர் ஊழியருக்குக் குடிப்பழக்கம் இருந்தது. அதற்குத் தண்டனை போல அவரைப் பதவிஇறக்கம்செய்யத்தீர்மானிக்கப்பட்டது. ஸி. ஆர். இதனை ஆட்சேபித்து சட்டர்ஜியிடம் சொன்னார்: ''ஒருவனைத் திருத்த எப்போதுமே தண்டனைதான் வழி என்று கருத வேண்டியதில்லை. ஊக்கமளிப்பதன் மூலமும் ஒருவனைத் திருத்தி வழிக்குக் கொண்டு வரலாம். இவன் குடிப்பதை நிறுத்தி விடுவானென்றால் என்னுடைய சொந்தக் கணக்கிலிருந்து மாதா மாதம் கொஞ்சம் பணம் கொடுப்பதாகச் சொல்லுங்கள்.''

சட்டர்ஜி அவ்வாறே செய்தார். அந்த ஊழியன் வெகு சீக்கிரம் அடியோடு மாறிப் போனதைக் கண்டு அதிசயித்தார்.

ஒரு சமயம் மெய்க்காவலர்களின் அறையில் அவர்கள் கூட்டமாக அமர்ந்திருந்த போது ஒருவருடைய கைக்கடிகாரத்தில் 'அலாரம்' அடிக்க ஆரம்பித்தது. அதன் சொந்தக்காரர், தூக்கி வாரிப் போடத்துள்ளினார்! அதைக் கண்டு மற்றவர்கள் அடக்க மாட்டாமல் ஒரேயடியாகச் சிரித்து விட்டனர். திடுதிப்பென்று அவர்களின் சிரிப்பு நின்றது! அறை வாசலில் ஸி. ஆர். நின்று கொண்டிருந்தார். ''உங்கள் ஆர்ப்பாட்டத்துக்குக் காரணம் என்னவோ தெரியவில்லை; ஆனால் சந்தைக் கடையை இங்கே கொண்டு வராதீர்கள்!'' என்று கோபமாகக் கூறி விட்டுத் திரும்பி நடந்தார்.

''நாங்கள் எல்லோரும் ரொம்பவும் சிறுத்துப் போனது போல் உணர்ந்தோம்'' என்று எழுதுகிறார் சட்டர்ஜி.

இந்தியாவுக்குவிடுதலைஅளித்தபோதே இந்திய சமஸ்தானங்களுக்கும் பிரிட்டிஷார் சுதந்திரம் அளித்து விட்டனர். அவர்கள் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ சேரலாம் அல்லது சுதந்



"உங்க கதைதான் பிரசுரமாயிட்டுதே! பின்னே என்ன கவலே?"

"இது ஏற்கெனவே பிரசுரமானதுங் கற விஷயத்தை யாரும் கண்டுபிடிக்காமே இருக்கணுமே."

— மணியன் தர்மலிங்கம்

திரமாகவும் இருக்கலாம். ஆனால் அவர்கள் இணைய வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டால் அதற்கு எதிராகச் சமஸ்தானதிபதிக்கு பிரிட்டிஷார் உதவ முடியாது என்பது தெளிவாக்கப்பட்டது.

சமஸ்தானங்களிலேயே மிகப் பெரியது ஹைதராபாத். அதன் நிஜாம், சுதந்திரமாகத் தமது பிரதேசத்தை வைத்திருக்க விரும்பினர். இங்கு ஹிந்துக்களே பெரும்பான்மையினர். அம்மக்கள் இந்தியாவுடன் ஹைதராபாத் சேராததால் அதிருப்தி அடைந்திருந்தனர். மேலும் போராளி முஸ்லிம்களான ரஜாக்கர்களுக்கு நைஜாம் ஆதரவு தந்து முஸ்லிம் ராஜ்யமாக ஹைதராபாத்தை உருவாக்க முயன்றதானது ஹிந்துக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியது. எந்தக் கணமும் எரிமலையாக வெடிக்கக் கூடிய தர்மசங்கடமான நிலை. கவர்னர் ஜெனரல் பதவி ஏற்ற தினத்திலிருந்தே இதற்கு அரசியல் ரீதியில் ஒரு தீர்வு காண ஸி. ஆர். முயன்றார். தில்லியில் இருந்த நைஜாமின் தூதரிடம் பேசினர். பழைய நண்பர் ஸர். மிர்ஸா இஸ்மாயிலிடமும் பேசினர். இஸ்மாயில் முன்பு நைஜாமின் திவானக இருந்ததால் அவரால் உதவ முடியும் என்று கருதினர் ஸி. ஆர். அமைதியான ஒரு தீர்வு காண விரும்பினர்.

ஆனல் ஹைதராபாத்தில் ரஜாக்கர்களின் அட்டூழியங்கள் அதிகரித்து வந்தன. அமைதிக்கு ஒரே வழி, ரஜாக்கர்களுக்குத் தடை விதிப்பதும் இந்தியத் துருப்புக்களை ஹைதராபாத்தில் நிறுத்தி வைப்பதும்தான் என்று இந்திய அரசு நம்பியது. ஸி. ஆர். பணிவான, ஆனல் உறுதியான வார்த்தைகளால் நைஜாமுக்கு இந்த நிபந்தனைகளைத் தெரிவித்தார். எந்த அரசியல் தீர்வானலும் நைஜாமின் பதவியும் கண்ணியமும் காப்பாற்றப்படும் என்ற உறுதிமொழியையும் அளித்தார். ஆனல் நைஜாம், யதார்த்தத்தை உணராத ஆலோசகர்களின் யோசனைகளைக் கேட்டுச் செயல்பட்டார். ரஜாக்கர்களுக்குத் தடை விதிக்க முடியாது என்றும் இந்தியத் துருப்புக்களைத் தமது பிரதேசத்தில் இருக்க அனுமதிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் சொன்னர்.

இதன் பின்னர் என்ன நடந்தது என்பது ரசமான விஷயம்!

(தொடரும்)

வீணைக்குக் கிடைத்த விருது!



* சங்கீத சூடாமணி விருதைப் பெறும் முதல் வீணை வித்வான் சிவானந்தம் — சமணி சங்கர சாஸ்திரியிடம் பட்டம் பெறுகிறார்.

'ஸ்ரீ கிருஷ்ணகான சபாவின்' சங்கீத சூடாமணி விருதினை இவ்வாண்டு பெற்ற வீணைக் கலைஞர் தஞ்சாவூர் கே. பி. சிவானந்தம் அவர்களைச் சந்தித்த போது......

"நீங்கள் பெற்ற விருது முத்துசாமி தீட்சிதருக்கே சேரும் என்று அதை ஏற்றுக் கொண்ட போது சொன்னீர்களே ஏன்?"

"முத்துசாமி தீட்சிதர்தான் எங்கள் குடும்பத்துக்கு ஆதி குரு. என் முன்னோர்களான தஞ்சை நால்வர் எனப்படும் பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு ஆகியோருக்கு அவர்தான் குரு. இந்த நால்வரிடமும் அவர் தனி அபிமானம் வைத்திருந்தார். இந்த நால்வரும் தீட்சிதரின் நேரடி சீடர்கள். இவர்கள் இயற்றிய கீர்த்தனைகள் எல்லாம் குருவின் கீர்த்தனைகளைப் போலவே இருக்கும்.

"புகழ்பெற்ற நாட்டிய மேதை பந்தநல்லூர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை என் பாட்டனார். அவர் சொல்லுவார்: "யாருக்குமே பட்டம் வாங்கத் தகுதி இல்லை. சங்கீதத்தில் பூரணத்வம் பெற்ற மனிதர் யாருமே இல்லை. தகுதியானவர்கள் மூன்றே பேர்தாம்: தியாகராஜர், தீட்சிதர், சியாமா சாஸ்திரி. அவர்கள் அவதார புருஷர்கள். அந்த சிஷ்ய பரம்பரையில் வருகிறவர்களுக்குக் கிடைக்கும் பட்டங்கள் கூட அவர்களுக்குத்தான் சேரும்," என்று."

"நீங்கள் வீணை கற்றுக் கொள்ள யார் காரணம்?"

"அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த சபேசய்யர், 'சிவானந்தம் வீணை நன்றாக வாசிக்கிறான். அவனை வீணையிலே சேர்த்து விடுங்கள்!' என்று என் தகப்பனார் பொன்னையா பிள்ளையிடம் சொன்னார். 1934 இல் நான் கல்லூரியில் சேர்ந்தேன். எஸ். ராமநாதன் என் கல்லூரித் தோழர். 1938 இல் சங்கீத பூஷணம் பட்டம் பெற்று, அதே கல்லூரியில் விரிவுரையாளர் ஆனேன். அப்போதெல்லாம் இசைத் துறைத் தலைவர் பதவிகூட தமிழ்ப் பேராசிரியர்களுக்குத்தான் தரப்பட்டது. நாவலர் சோமசுந்தர பாரதி, விபுலானந்த அடிகள் போன்றவர்கள் இருந்தார்கள். மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் துணைவேந்தராக வந்த பிறகு முசிரியை அங்கே வருமாறு அழைத்தார். பேராசிரியர் பதவி தந்தால் வருவதாக முசிரி சொன்னார். ஆனால் அதற்குள் சாஸ்திரியார் பதவியிலிருந்து போய்விட்டார். முசிரி வரவில்லை. என் தகப்பனார் சென்னையிலிருந்து அங்கே போய்ச் சேர்ந்தார். அவர்தான் முதல் புரொபசர். ஃப்ளூட் மாலி கூட ஒரு காலத்தில் அங்கே மாணவராகச் சேர்ந்தார்!"

"உங்கள் இசைப் பாணியின் தனித்துவம் என்ன?"

"வாய்ப்பாட்டு எப்படி இருக்குமோ அந்தப் பாணியில்தான் நான் வாசிப்பேன். வீணைக்கு அவசியம் வாய்ப்பாட்டு தெரிந்திருக்க வேண்டும். வெறுமனே வீணையை மட்டும் கற்றுக்கொண்டு பிரயோஜனமில்லை. நன்றாகப் பாடத் தெரிந்தவரிடம் வீணை கற்றுக் கொள்ளுங்கள். வீணை வாசிக்க மட்டுமே தெரிந்தவரிடம் போய் வீணை கற்றுக் கொள்ளக் கூடாது."

பழைமையில் ஊறியவர் என்றாலும், பல்கலைக்கழகத்தில் பயின்று ஆசிரியராகப் பணியாற்றியவரானாலும், சிவானந்தம் யதார்த்தவாதி. "சிலபஸ் என்று ஒன்று இருக்க வேண்டியதுதான். ஆனால் இசை கற்றுக் கொள்ள வருகிற மாணவருக்கு இருக்கும் ஞானத்தை வைத்துச் சொல்லிக் கொடுக்கும் சுதந்திரம் ஆசிரியருக்கு இருக்க வேண்டும். இன்ன கீர்த்தனை என்று சிலபஸில் அச்சடித்து விடுகிறார்கள். இன்ன ராகம் என்று போட்டால் போதுமே? ஒரே பாடலை வருஷக் கணக்காகச் சொல்லிக் கொடுப்பது எத்தனை கொடுமை!" என்கிறார்.

"பரீட்சை என்ற பெயரில், மாணவனை ஓர் அறைக்குள் உட்கார வைத்துப் பாடச் சொல்லி மார்க் போடுவதற்குப் பதிலாக, பத்துப் பதினைந்து பார்வையாளர்கள் மத்தியில், கச்சேரி மாதிரி பாடச் சொல்லி, தேர்ச்சியைக் கணிப்பது அல்லவா சரியாக இருக்கும்?" என்கிறார் சிவானந்தம்.

— சாருகேசி



''லஞ்ச ஒழிப்பு இலாகாவிலே புகார் பண்ணப் போனீங்களே என்ன ஆச்சு?''

''இங்கேயே கிளார்க் கேட்ட ரூபாயைக் கொடுத்திடலாம்னு முடிவு பண்ணிட்டேன். அந்த இலாகா கிளார்க் இவரை விட இரண்டு மடங்கு கேட்கிறார்!''

— டி. எஸ். சீதாராமன்



அரசியல்வாதி: ''தண்ணீர் இல்லாமல் பொது மக்கள் மட்டும்தானா கஷ்டப்படுகிறார்கள்? நானும் தண்ணீர் இல்லாமல் தினம் சோடா மட்டுமே குடித்து வருகிறேன் என்பதை அடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்!''

— எஸ். முகம்மது யூசுப்



காதலன்: ''என்ன நடந்தது, டார்லிங்? எதற்கு அழுகிறாய்?''

காதலி: ''என் அப்பா திவாலாகி விட்டார்!''

காதலன்: ''எனக்கு முன்பே தெரியும். உங்க அப்பா நம்ம காதலுக்குத் தடையாக இருப்பார்னு...''

— ஆர். ஆர். பூபதி




''காணாமல் போன, என் பையன் மிரட்டல் கடிதம் போட்டிருக்கான்...''

''என்னன்னு...?''

''உடனே, 'எங்கிருந்தாலும் திரும்பி வா'ன்னு, பேப்பரிலே, விளம்பரம் கொடுக்கப் போறியா, இல்லே, நானே திரும்பி வந்துடட்டுமான்னு!''

— ஆர். வசந்தகுமார்



''நேற்று பாருங்க, ஃபேனை ஓடவிட்டுட்டு, நான் பாட்டுக்குக் கதவைப் பூட்டிட்டு வெளியில போயிட்டேன்...!''

''நல்லவேளை, புத்திசாலித்தனமா வீட்டையாவது பூட்டிட்டுப் போனீங்களே... இல்லேன்னா ஃபேன் ஓடியே போயிருக்கும்...!''


— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 4 3154 3 4 34 157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 26, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 4 73389.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)



வளரும் குழந்தைகளுக்கு சுவையான
துணையாக விளங்கும் பால் பிஸ்கட்
Milk Bikis
BRITANNIA
Milk Bikis
சத்துமிகுந்த, சுவையான பிஸ்கட்.
பிரிட்டானியா